
# கிராம நலம்

## இலவசக் கல்வி
## இலவச உணவு



"இளமையில் கல்"

ஜூன்
1965



# பாசன வசதிக்கு — சமுதாயக் கிணறுகள்....



# ஏரி மராமத்து....



# கிராமநலம்

மாடி 10 | ஜூன் 1965 | படி 9

## பாசன வசதிக்கு சமுதாயக் கிணறுகள்

கிராமங்களில் சோம்பிக்கிடக்கும் மனித சக்தியை நல்ல வகையில் பயன்படுத்தும் முயற்சி, நாடெங்கும் நடைபெற்று வருகிறது. பாரத நாட்டின் திட்டக் கமிஷன், இத்துறையில் விசேஷ ஆர்வம் காட்டி வருவது, அனைவரும் அறிந்ததே. ஏரி மராமத்து பாசனக்கால்வாய்களைச் செப்பனிடுதல், ரஸ்தா வேலைகள் முதலிய பொதுநலப்பணிகள் நம் தமிழ்நாட்டின் பல்வேறு வட்டாரங்களில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. சமுதாயக் கிணறுகள் அமைக்கும் புதிய வேலைமுறை, இத்திட்டத்தின்கீழ், சமீப காலத்தில் மிகச் சிறப்பாக நிறைவேறி வருவது, பாராட்டத்தக்க செய்தியாகும்.

பூமிக்கடியிலுள்ள நீரை, நீர்ப்பாசனத்துக்குப் பயன்படுத்த, கிணறுகள் பெரிதும் உதவுகின்றன. ஆனால், பாசனக்கிணறுகளை வெட்டுவதற்காகும் செலவு, பூமியின் தரத்தைப் பொறுத்திருக்கிறது. ஒரு சில இடங்களில் அதிகச் செலவில்லாமலே, கிணறுகளைக் கட்டிவிடமுடியும். தனிப்பட்ட விவசாயிகள், இதை எளிதில் செய்து விடுவார்கள். ஆனால், சில இடங்களில் பூமிக்கடியில் கற்பாறைகள் வந்து விடுவதுண்டு; தண்ணீர் சுரப்பு மிகமிக ஆழத்தில்தான் இருக்கும். இது போன்ற சந்தர்ப்பங்களில் கிணறுகள் வெட்டுவதற்காகும் செலவு, ஐந்து ஆயிரத்திலிருந்து பத்தாயிரம் வரையிலும் சில சமயங்களில் பத்தாயிரத்திற்கு மேலும் ஆகலாம். எனவே, சாதாரண விவசாயிகள், இது போன்ற ஆழமான கிணறுகளைத் தனிப்பட்ட முறையில் உருவாக்குவது, மிகவும் கஷ்டமாக இருக்கும். இதை ஓரளவு தவிர்ப்பதற்காக, சமுதாயக் கிணறுகள் அமைக்கும் திட்டத்தின்படி, கூட்டு முயற்சியாக, விவசாயிகள் ஒன்று சேர்ந்து, பொதுவாக ஒரு கிணற்றை அமைத்து, அந்த நீரை அனைவரும் பாய்ச்சிக்கொண்டு, விவசாய உற்பத்தியைப் பெருக்க வழி செய்துகொள்ளலாம். தனிப்பட்ட நபர்களுக்கு, கிணறு தோண்டுவதற்காகக் கடன் உதவித்திட்டம் ஒன்று இருந்து வருகிறது. ஆனால் சமுதாயக் கிணறுகள் தோண்டுவதற்கான கடன் கொடுப்பதானது ஒரு புதிய திட்டமாகும். கிராமங்களில், பயனின்றி இருக்கும் மக்களுடைய உழைப்புச்சக்தியைப் பயன்படுத்துவதே இப் புதிய திட்டத்தின் அடிப்படை நோக்கம். தமிழ்நாடு அரசாங்க அமைச்சர்கள், சிறப்பாக முதலமைச்சரும் நீர்ப்பாசன அமைச்சர் திரு இராமையாவும், கிராம நல தல நிர்வாக அமைச்சர் திரு மஜீது அவர்களும் இத்திட்ட நடவடிக்கைகளில் விசேஷ சிரத்தை காட்டி வருகின்றனர்.

திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த கயத்தாறு, ஒட்டப்பிடாரம் ஆகிய வட்டாரங்களில் இதுபோன்ற சமுதாயக் கிணறுகள் உருவாகியிருப்பதை நேரில் கண்டு மகிழ்ந்தோம். இந்தக் கிணறுகளுக்கு, மின்சார பம்பு அமைக்கவேண்டும் என்று அங்குள்ள விவசாயப்

அட்டைப்பட விளக்கம் 9-ம் பக்கம்.

பொதுமக்கள், விருப்பம் தெரிவித்தனர். இதற்கென ஓரளவு "விசேஷ பாசன செஸ்" அளிக்கவும் பலர் தயாராக உள்ளனர். இந்தப் பம்பு செட்டுகள், பஞ்சாயத்துக்களுக்கோ அல்லது பஞ்சாயத்து யூனியன்களுக்கோ சொந்தமாக இருக்கலாம் என்றும் அவர்கள் கருதுகின்றனர். இது நல்ல யோசனே. சுமார் 10 முதல் 20 ஏக்கர் வரையில் பாசன வசதியளிக்கும் (பம்புசெட் மூலம்) கிணறுகள் பலவற்றை உண்டாக்கிவிட்டால், உணவு உற்பத்தி பெருகுவதோடு கிராமவாசிகளுக்கு வேலே வாய்ப்பளிக்கும் திட்டமும் புது மலர்ச்சி பெற்று, நீர்ப்பாசனப்பிரச்னேக்கு நிரந்தரத் தீர்வு காணும் பணி வெற்றிகர மாக நிறைவேறும்.

தமிழ்நாட்டிலுள்ள பெரிய ஆறுகளில் நீர்த்தேக்கங்கள் கட்டப்பட்டுவிட்டன. சிற்றாறு களில் எல்லாம் நீரைத்தேக்கும் வகையில், சிறிய அணேக்கட்டுகள் பலவும் உருவாகி விட்டன. சுருங்கச்சொன்னல், அணே இல்லாத ஆரு அல்லது சிறு கால்வாய்களோ, நம் மாநிலத்தில் இல்லே என்றே கூறலாம். இது மட்டுமன்றி ஏரி (கண்மாய்) மரா மத்து வேலேகளும் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. ஆயினும், நீர்ப்பாசன வசதி பெருமல் உள்ள நிலம் ஏராளமாக இருப்பதை, இன்றும் காணலாம். மேற்சொன்னபடி, சமுதாயக் கிணறுகள் அமைக்கும் புதிய திட்டம் தீவிரமாகச் செயல்படத்தொடங்கினல், நாட்டின் வளமை பன்மடங்கு அதிகரிக்கும் என்பதில் ஐயமில்லே. குறிப்பாக, மழை யையே எதிர்பார்த்து நிற்கும் வானம் பார்த்த பூமிகளில்—புன்செய் நிலப்பகுதிகளில் இத்திட்டத்தால் அதிகபலன் ஏற்பட முடியும். தரிசு நிலம் அதிகமாக உள்ள வட்டார அதிகாரிகள் அனேவரும் இந்தத் திட்டத்தைப் பொதுமக்களுக்கு எடுத்துரைத்து இன்னும் அநேக சமுதாயக் கிணறுகள் ஏற்படத்தக்க முயற்சி மேற்கொள்வார்கள் என்று நம்புகிருேம்.

---

# கல்வித்துறையில் நிர்வாக மாறுதல்

மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களின் பயனுக, தமிழகம் கல்வித்துறையில் சிறப்பான முன்னேற்றம் அடைந்திருக்கிறது. மாநிலச் சீரமைப்புக்குப் பிறகு முதல் ஆண்டில், அதாவது 1957–58-ம் ஆண்டில் கல்விக்காகச் செலவிடப்பட்ட தொகை ரூ. 11 கோடி. தற்போது ரூ. 35 கோடி அள வுக்குச் செலவு உயர்ந்திருக்கிறது. முந்நூறுக்குக் குறையாத மக்கள் தொகையுள்ள பகுதிகள் எங் கிலும் தொடக்கப்பள்ளிகள் உள்ளன. செகண்டரிப் பள்ளிகள் எண்ணிக்கை பெருகியுள்ளன. ஆண்டு தோறும் எஸ். எஸ். எல். சி. தேர்வு செல்லும் மாணவர்கள் எண்ணிக்கை பெருமளவில் அதிகரித்து வருகிறது. இரண்டாது திட்டக்கால முடிவில் தமிழ்நாட்டில் 79 கலேக்கல்லூரிகள் இருந்தன. அவற்றுள் அரசாங்கக் கலேக்கல்லூரிகளின் எண் ணிக்கை 13 ஆகும். இந்த ஆண்டில் ஆரம்பிக்க உத்தேசிக்கப்பட்டிருக்கும் 7 அரசாங்கக் கலேக் கல்லூரிகளேயும் சேர்த்து, 100-க்கு மேல் கலேக் கல்லூரிகள் இருக்கும் நிலே விரைவில் ஏற்படும்.

இங்ஙனம் கல்வி அபிவிருத்திப்பணிகளால் கல்வித்துறைக்குப் பொறுப்புகள் மிகுதியாகி விட்டன. நான்காம் திட்டத்தில் பெருமளவில் மேற்கொள்ளப்படவிருக்கும் கல்விப் பணிகளேக் கருதியும், கல்வித்துறை நிர்வாக வசதிகளேக் கருதியும், பொதுக்கல்வி நெறியாளர் அலுவலகம், உயர்நிலேக்கல்வி நெறியாளர் பிரிவு என்றும் செகண்டரிக்கல்வி நெறியாளர் பிரிவு என்றும், இரு பிரிவுகளாகப் பிரிக்கப்படுகிறது. உயர்நிலேக் கல்வி நெறியாளர் பொது நூலகங்கள் நெறி யாளராகவும் இருப்பார்; செகண்டரிக்கல்வி நெறி யாளர் தொடக்கக்கல்வி உட்பட செகண்டரிக் கல்வி சம்பந்தமாகக் கவனிப்பதோடு, பாடப் புத்தகங்களே நிர்ணயிக்கும் பொறுப்பையும் கவனித்துக்கொள்வார். இந்த மாறுதல் அமுலுக்கு வந்து விட்டது.

பொதுக்கல்வி நெறியாளர் திரு என். டி. சுந்தர வடிவேலு உயர்நிலேக்கல்வி நெறியாளராகப் பதவி மாற்றம் செய்யப்பட்டிருக்கிருர். இந்திய அர சாங்கப் பதவிக்கு அனுப்பப்பட்டிருக்கும் டாக்டர் எம். டி. பால் தற்போதைய பதவி நிலேயில் மாறு தல் ஏதுமின்றி செகண்டரிக்கல்வி நெறியாளராக நியமிக்கப்பட்டிருக்கிருர். பொதுக்கல்வி (பாடப் புத்தகங்கள்) துணே நெறியாளர் திரு வி. டி. டைட் டஸ் தற்காலிகமாக செகண்டரிக்கல்வி நெறியாள ராக இருப்பார்.

# தமிழ்நாட்டில் மூன்றாவது மிகப் பெரிய தொழில் திட்டம்

விவசாயம் செழித்தோங்கவும், தொழில்கள் பெருகவும் முக்கிய தேவைகளில் ஒன்று மின்சாரம். நம் நாட்டில், தேச சுதந்திரத்திற்குப் பின், சிறியதும் பெரியதுமான பல ஆறுகளுக்குக் குறுக்காக அணைகள் கட்டி, நீரைத் தேக்கி அதன் மூலம் மின்சாரம் உற்பத்தி செய்து வருகிறோம். இவற்றை நீர் மின்சாரத் திட்டங்கள் என்கிறோம். இவ்வகையான திட்டங்களுக்கு இனி இடமே இல்லை என்கிற அளவுக்கு நம் நாட்டில் மின்சார உற்பத்திக்குத் தகுதியான நீர் ஆதாரங்களை எல்லாம் பயன்படுத்தியாகிவிட்டது. இந்த நிலையிலும் மின்சார உற்பத்தி போதுமான அளவில், தேவைக்கு ஏற்ப இருக்கவில்லை. அதோடு, எதிர்கால விவசாய தொழில்துறை தேவைகளைப் பூர்த்தி செய்ய, இன்னும் பெருத்த அளவில் மின்சார உற்பத்தி செய்தாக வேண்டும். ஆகையால், அனல் மின்சார முறையில் உற்பத்திக்கு வகை செய்வது அவசியமாகிறது.

மின்சார உற்பத்தியில், மற்ற பல மாநிலங்களைவிட, தமிழ்நாட்டின் நிலை சிறப்பாகவே இருக்கிறது. கிராமங்களுக்கு மின்சாரம் வழங்குவதில் இந்தியாவிலேயே, நம் மாநிலந்தான் முன்னணியில் நிற்கிறது. எனினும், நமக்கும் மின்சாரப் பற்றாக்குறை பெரும் அளவில் இருந்து வருகிறது. நீர்—மின்சாரத்தையே நாம் பெரிதும் நம்பியிருப்பதால், நீர்த்தேக்கங்களில் நீர் மட்டம் குறையும்போது, மின்சார வெட்டு தவிர்க்க முடியாததாக ஆகிவிடுகிறது. நெய்வேலி அனல் மின்சாரத் திட்டத்தின் மூலம், நிலைமை ஓரளவு சீர்பட்டு வருகிறதென்றாலும், நம் தேவையைப் பூரணமாகச் சமாளிக்க மேலும் மின்சார உற்பத்தி அவசியமாகிறது. அதனால்தான், செங்கற்பட்டு மாவட்டத்தில் கல்பாக்கம் என்றவிடத்தில் அணு மின்சார நிலையம் நிறுவும் திட்டம் மேற்கொள்ளப் படவிருக்கிறது. இத்திட்டம் நிறைவேறிய பிறகும்கூட, மின்சாரப் பற்றாக்குறை இருக்கும். ஆகையால் சென்னையை அடுத்த எண்ணூர் போன்றவிடங்களில் அனல் மின்சார நிலையங்கள் ஏற்படுத்தப்பட விருக்கின்றன.

## நாடெங்கும் அனல் மின்சார நிலையங்கள்

இதேபோல், நம் மாநிலத்தில் மட்டுமல்லாமல் நாடெங்கும் ஏராளமான அனல் மின்சார நிலையங்களை நிறுவுவதன் மூலந்தான், நாட்டின் மின்சாரத் தேவையைச் சமாளிக்க முடியும். இத்தனை நிலையங்களுக்கும் தேவையான இயந்திரச் சாதனங்களை எல்லாம், வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்வதானால், அதற்குப் பெருத்த அளவில் அந்நிய நாணயச் செலாவணி தேவைப்படும். அத்தகைய நெருக்கடியைத் தவிர்க்க, வேண்டிய இயந்திரச் சாதனங்களை நம் நாட்டிலேயே தயாரிப்பதென முடிவு செய்யப்பட்டது.

எனவே, அனல்—மின்சார நிலையங்களுக்கான இயந்திரங்களைச் செய்யும் கனரகத் தொழிலை நிறுவும் முயற்சி மேற்கொள்ளப்பட்டு, அது மூன்று பிரிவுகளாக்கப்பட்டு, மூன்று இடங்களில் பிரம்மாண்ட தொழிற்சாலைகள் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன. நீராவியிலிருந்து மின்சார சக்தி உற்பத்தி செய்வதற்கான சாதனங்கள் (Steam turbines, Generators, Turbo-alternators) செய்யும் தொழிற்சாலைகள் ஹரித்துவாரத்தை அடுத்த ராணிப்பூர் என்றவிடத்திலும், ஹைதராபாத்தை அடுத்த ராமச்சந்திரபுரத்திலும் முறையே ரூ. 61 கோடி, ரூ. 28 கோடி செலவில் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன; மூன்றாவது தொழிற்சாலை, நீராவியை உற்பத்தி செய்வதற்கான கொதிகலன்களைச் செய்வது: இந்தத் தொழிற்சாலை, தமிழ்நாட்டில் திருச்சியை அடுத்த திருவெறும்பூரில் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

## கொதிகலன், எப்படி இருக்கும்?

கொதிகலன் (பாய்லர்) என்றவுடன் நம் வீடுகளில் உபயோகிக்கும் வெந்நீர் பாய்லர் நினைவிற்கு வரும். ஆகையால், இதுவும் ஒரே பாத்திரமாக, ஆனால் பிரம்மாண்ட அளவில் இருக்குமோ என்று எண்ணத்தோன்றும். ஆனால் அப்படியல்ல. மின்சார உற்பத்திக்கு, மிக அதிகமான அழுத்தச் சக்தியுள்ள நீராவி தேவை. ஆகையால் இந்த அதி அழுத்தக் கொதிகலன் (High pressure boiler) என்பது, வளைந்து வளைந்து செல்லும் பல குழாய்களை

யும், மற்றும் பல நுட்பங்களோடு கூடிய ஏராள மான றுப்புக்களையும் கொண்டதாக இருக்கும். இவ்வாறு அமைந்த ஒரு கொதிகலன் எவ்வளவு பெரியது தெரியுமா? ஒன்றின் எடை 2,500 டன் முதல் 3,000 டன் வரை இருக்கும். ஆகையால் முழுமையான ஒரு கொதிகலனின் எல்லா உறுப்புக் களையும், திருவெறும்பூர் தொழிற்சாலையிலிருந்து மின்சார நிலையம் நிறுவப்படும் ஒரு இடத்திற்கு எடுத்துச்செல்ல. சுமார் 50 ரயில் வாகன்கள் தேவைப்படும். சாதாரண லாரிகளில் ஏற்றிச் செல்வதானால், சுமார் 400 லாரிகள் வேண்டி யிருக்கும். இதிலிருந்து ஒரு கொதிகலன் என்பது' எத்தகைய ராட்சத அளவுடையதெனத் தெரிந்து கொள்ளலாம்.

### தொழிற்சாலையில் வேலை துவக்கம்

ஒரு கொதிகலனின் அளவே, இவ்வளவு பெரிய தாக இருக்கும்போது, அதன் உறுப்புக்களையெல் லாம் செய்வதற்கு எத்துணை பெரிய தொழிற்சாலை தேவை என்பதை யூகித்துக்கொள்ளலாம். அதனால் தான், திருச்சி—தஞ்சை சாலையில், திருவெறும் பூரில்; சுமார் 4,000 ஏக்கர் பரப்பில், இத் தொழில் திட்டம் சுமார் ரூ. 22 கோடி செலவில் மேற்கொள்ளப்பட்டது. இவ்வளவு பரந்த நிலம் வசதியாகக் கிடைத்ததும், அருகில் ரயில் வசதி இருப்பதும், காவிரிப் படுகையிலிருந்து தாராள மாக தண்ணீர் கொண்டுவர வசதி இருப்பதும் இந்த இடம் தேர்ந்தெடுக்கப்பட்டதற்கு முக்கிய காரணங்களாகும்.

திட்ட வேலையில், இப்போது முக்கால் பகுதிக்குமேல் பூர்த்தியாகிவிட்டது. தொழிற்சாலைப் பிரிவுகளும், குடியிருப்புப் பகுதியும் நிர்மாணிக்கப்பட்டுள்ளன. சென்ற மே; 1-ம் தேதியன்று உபராஷ் டிரபதி டாக்டர் ஜாகீர் ஹுஸேன் அவர்கள் தொழிற்சாலையை ஆரம்பித்து வைத்தார்.

குடியிருப்புப் பகுதி சுமார் 600 ஏக்கர் பரப்பி லும், தொழிற்சாலைகள் சுமார் 3,400 ஏக்கர் பரப்பிலும் அமைந்திருக்கின்றன. கொதிகலன் செய் யும் தொழிற்சாலை 23 கட்டிடங்களில் உள்ளன. 650-க்கு மேற்பட்ட பலதரப்பட்ட இயந்திரங்கள், இக்கட்டிடங்களில் இயங்குகின்றன. கொதிகலன் களைப் பூட்டும் இடத்தில் மட்டும், 47 பாரந் தூக்கிகள் ( Cranes ) உள்ளன. அவை ஒவ்வொன் றும் 120 டன் எடையைத் தூக்கவல்லது.

தொழிற்சாலைப் பகுதிக்கு, பொன்மலையிலிருந்து ஐந்தரை மைல் நீளத்தில், பிராட்கேஜ் ரயில்பாதை ஒன்று போடப்பட்டுள்ளது. இது தொழிற்சாலைக்கு நடுவே செல்கிறது. ஆகையால், தொழிற்சாலைப் பகுதியில் ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத் திற்குத் தொழிலாளர்களும், மற்றவர்களும் தங்கு தடையின்றி செல்வதற்காக, ரயில்பாதைக்குக் கீழே சுரங்கப்பாதை ஒன்று அமைக்கப்பட்டிருக் கிறது.

### இந்தியர்களுக்குப் பயிற்சி

செக்கோஸ்லோவேகியா நாட்டு உதவியுடன் நிர்மாணிக்கப்பட்டுள்ள இத்தொழிற்சாலை சம்பந் தப்பட்ட பல தொழில் நுட்பங்களில் இந்தியர் களுக்குப் பயிற்சியளிக்கப்பட்டு வருகிறது. என்ஜி னியர்கள், தொழில் நுட்ப விஞ்ஞர்கள் மொத்தம் 200 பேருக்குப் பயிற்சி அளிக்கத் திட்டமிடப் பட்டதில் இதுவரை 150 பேர் 'செக்' நாட்டுக்கு அனுப்பப்பட்டு, அவர்களில் சுமார் 100 பேர் பயிற்சி முடிந்து திரும்பி வந்து, தொழிற்சாலையில் பல அலுவல்களை மேற்கொண்டுள்ளனர். இதன்றி, தொழிற்சாலை பகுதியிலேயே பயிற்சிப் பள்ளி ஒன்று 1963 ஜூலை முதல் நடந்து வருகிறது. இங்கு 800 இளைஞர்கள் (ஏற்கனவே தொழில் பள்ளிகளில் கல்வி பெற்றவர்கள்) இத்தொழிற் சாலைக்குரிய விசேடப் பயிற்சி பெற்று வருகிறார் கள்.

### முதல் கொதிகலன் 1966-ல் தயாராகும்

திட்ட வேலை 1963-ம் ஆண்டு மே மாதம் ஆரம்ப மாயிற்று. 1965 செப்டம்பரில் வேலையை முடிக்க வேண்டும் என்பது திட்டம். ஆனால், ஆறு மாதங்

---

### புயல் காலங்களில்..

கடும் புயலாலும் வெள்ளத்தாலும் விபத்துக் கள் ஏற்படும் நெருக்கடிக் காலங்களில் துரித மாகவும் திறமையாகவும் செய்திகளை அனுப்ப, மாநிலத்தின் முக்கியமான பகுதிகளில் குறிப் பாக கிழக்குக் கடற்கரைப் பகுதிகளில் ஒயர்லெஸ் செட்டுகள் நிறுவப்படவேண்டிய அவசியம் 1961-ல் தஞ்சாவூர் மாவட்டத்தில் வெள்ளத் தால் ஏற்பட்ட விபத்தின்போது நன்கு தெரிந் தது. 1964-ம் ஆண்டு டிசம்பரில் ஏற்பட்ட கடும் புயலின் போது தனுஷ்கோடியில் அப் போதிருந்த ஓர் ஒயர்லெஸ் செட்டின் உப யோகத்தினை அனுபவபூர்வமாக அறிய முடிந் தது, எனவே மாநிலத்திலுள்ள முக்கியமான இடங்களில் ஒயர்லெஸ் டிரான்ஸ்மிட்டர்களும் டிரான்ஸ்—ரிசீவர்களும் நிறுவப்படும், இவை களை இயக்கும் முறையானது போலீஸ் தலைமை யகங்களில் செயல்படுவது போல் இருக்கும்.

---

இவ்விதழ் மூன்றுவது அட்டையின் கீழ்ப்புறத்திலுள்ள படம், ஒட்டப்பிடாரம் பஞ்சாயத்து யூனியனைச் சேர்ந்த சண்முகபுரம் என்ற ஊரில் நடைபெறும் கதர் வேலையைக் குறிப்பிடுகிறது.

களுக்கு முன்பாகவே—மே மாதத்திலேயே தொழிற்சாலை தயாராகி, இப்போது உற்பத்தியும் தொடங்கிவிட்டது. முதல் கொதிகலன், எண்ணூர் அனல் மின்சார நிலையத்திற்கு 1966 மார்ச் மாத இறுதிக்குள் வழங்கப்படும். அதே நிலையத்திற்கு இன்னொரு கொதிகலன் 1967-ல் தரப்படும். இவையன்றி, 17 கொதிகலன்களுக்கான 'ஆர்டர்'கள், கைவசம் உள்ளன. மொத்தம் ரூ. 36 கோடி மதிப்புள்ள இக்கொதிகலன்களைத் தயாரிப்பதற்கான வேலைகளும், பல்வேறு கட்டங்களில் நடைபெறும். நான்காவது ஐந்தாண்டுத் திட்ட முடிவில், அதாவது 1971-ல் இத்தொழிற்சாலையில் 15 கொதிகலன்கள் தயாராகிவிடும். தொழிற்சாலை, குடியிருப்பு உட்பட மொத்த மூலதனச் செலவு ரூ. 22 கோடியாக உள்ள இத்திட்டத்தின்மூலம், ஆண்டு ஒன்றுக்கு உற்பத்தியாகும் பொருள்களின் மதிப்பும் ரூ. 22 கோடியாக இருக்கும். கொதிகலன்கள் தயாரிப்பதற்காக நிர்மாணிக்கப்பட்டுள்ள இத் தொழிற்சாலையில், அவசியம் ஏற்பட்டால், ராணுவத்திற்கு வேண்டிய பல ஆயுதங்களையும் செய்யமுடியும் எனக் கூறப்படுகிறது.

18 ஆயிரம் பேருக்கு வேலை வாய்ப்பு

இப்போது, திருவெறும்பூர் தொழிற்சாலையில் 2,500 பேர்களுக்கு மேல் வேலை செய்கிறார்கள். விரைவில் இங்கே 6 ஆயிரம் பேர்களுக்கு வேலை வாய்ப்பு ஏற்படும். முழு உற்பத்தி துவங்கும் போது 18 ஆயிரம் பேர் வேலை வாய்ப்புப் பெற முடியும்.

இப்போதுள்ளபடி, இத்தனை வாய்ப்புகளுடன் இவ்வளவு பெரியதாக உள்ள இத்தொழிற்சாலை, நான்காவது திட்டத்தில், இரண்டு மடங்கு பெரிய தாக்கப்படுவது உறுதி என்று தொழிற்சாலை பிரதம அதிகாரி திரு. ஆர். எஸ். கிருஷ்ணன் கூறுகிறார்.

பெரம்பூர் ரயில் பெட்டித் தொழிற்சாலையும், நெய்வேலி தொழில் திட்டமுந்தான், இதுவரை தமிழ்நாட்டில் குறிப்பிடத்தக்க பெருந்திட்டங்களாக இருந்தன. இப்போது அந்த வரிசையில் திருவெறும்பூர் தொழிற்சாலையும் இடம் பெறுகிறது.

# லண்டன் பல்கலைக்கழகத்தில் இந்திய மாணவிகள்

பெண் கல்வி வளர வேண்டுமென்று பலர் எழுப்பிய குரல் வீணாகி விடவில்லை. படிப்பதோடு மட்டும் நில்லாது, இந்திய மாணவிகள் பல்வேறு துறைகளிலும் ஈடுபட்டு பட்டமும், பயனும் பெற்று திகழ்கின்றனர். இதோ ஒரு சுவையான செய்தி:

இங்கிலாந்தில் சென்ற ஆண்டு படித்த இந்திய மாணவிகள் மொத்தம் 160 பேர். இந்த ஆண்டு துவக்கத்தில், இந்திய மாணவிகள் சங்கத்திற்கும், விடுதிக்கும் எலிஸபெத் ராணி வருகை தந்தபோது தமிழ் நாட்டிலிருந்து, மருத்துவக் கல்வி மேல்படிப்புக்காகச் சென்றிருக்கும் திருமதி சித்ரலேகா ரமணன் பரத நாட்டியமாடி, ராணியை மகிழ்ச்சியில் ஆழ்த்தினார். நடனமாடிய பின் அந்த மாணவி, ஒரு தகுதி வாய்ந்த டாக்டர் என்பதை அறிந்த போது, பெரும் வியப்பேற்பட்டது. மருத்துவம் தவிர, இன்னும் கல்வித்துறை, பொருளியல் போன்ற பாடங்களிலும் இந்திய மாணவிகள் பெரும் ஆர்வம் காட்டி பயின்று வருகின்றனர்.

# சிறுவர்கள் சித்திரப் போட்டி

அகில உலகச் சிறுவர் சிறுமியர்களின் சித்திரப் போட்டி ஒன்றை சோவியத் ரஷ்யா மாஸ்கோ நகரத்தில் நடத்தவிருக்கிறது. ஏழு முதல் பதினாறு வயதுக்குட்பட்ட எல்லா தேசத்துச் சிறுவர் சிறுமிகளும் இந்த போட்டியில் கலந்துகொள்ளலாம். இயற்கைக் காட்சி, நகர வாழ்க்கை காட்சிகள், மற்றும் அன்றாட வாழ்க்கையின் எந்த அம்சத்தையும் சித்திரமாக வரைந்து அனுப்பலாம். மொத்தப் பரிசுகள் 50. ஆறுதல் பரிசுகள் 200.

**கடைசி தேதி : 30—8—1965**

*சித்திரங்களை அனுப்பவேண்டிய முகவரி:*

(1) "'யங் பயனீர்ஸ்' பிராவ்டா"
21, சுஸேவ்காயா தெரு
மாஸ்கோ ஏ—30 (சோவியத் ரஷ்யா)

(2) திரு ப. சுயென்கோவ்
சோவியத் ரஷ்யா கலாச்சாரத் தொடர்பு அதிகாரி
4—வது மெயின்ரோடு, அபிராமபுரம், சென்னை-18.






[பாரதியார், காலத்தில் தோன்றிய கவிஞர். ஆம், அப்பொழுது நமது நாட்டை பீடித்திருந்த தளைகள் அடிமைத்தனம் மட்டுமல்ல; சோம்பல், வறுமை, எதைக் கண்டாலும் அச்சம் இப்படி பாரத சமுதாயம் இருட்டுக் குகையில் அழுந்திக் கிடந்த அந்தத் துயரமான நேரத்தில்தான் பாரதியின் துடிப்பான சொற்கள் கேட்டன. "எங்கும் அஞ்சோம், எதற்கும் அஞ்சோம்" என்று ஆர்த்தெழுந்த அவரது கவிக்குரல்—"சோம்பித் திரிபவரைக் கண்டால் உடன் மோதி மிதித்துவிடு பாப்பா" என்ற அவரது ஆணை—"வெறும் சோற்றுக்கோ வந்ததிந்தப் பஞ்சம்" என்று ஏளனத்தோடு வெளிப்பட்ட இதயக் குமுறல்—இவையெல்லாம் பாரத மக்களின் விழி இமைகளைத் திறந்து அங்கே வீரத்தின் விளக்கை ஏற்றி வைத்தன. அந்தச் சுடரொளியில் சுதந்திர பாரத சமுதாயம் உருவானது. பாரதியார் இன்று நம்மிடையே இல்லை. அதனால் என்ன? அவரது பாடல்கள் இருக்கின்றன.—ஆசிரியர்]

# மகாகவி பாரதியார்

திரு. டி. எஸ். ஜெயராஜ்

"ஆடுவோமே—பள்ளுப் பாடுவோமே
ஆனந்த சுதந்திரம் அடைந்து விட்டோமென்று
—ஆடுவோமே"

எனப் பாரதம் சுதந்திரம் அடைவதற்கு முன்னமேயே பள்ளுப்பாடி, பாரத மக்களுக்குச் சுதந்திர வேட்கையை உண்டு பண்ணியவர் மகாகவி சி. சுப்பிரமணிய பாரதியார் ஆவார். பாரதத் தாயின் அடிமைத் தளைகள் அறுபட வீரக் கவிதைகள் பல இயற்றியவர் அவர்.

பாரதியார் 1882-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 11-ம் நாள் திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள எட்டயாபுரத்தில் பிறந்தார். தந்தையாரின் பெயர் திரு. சின்னச்சாமி ஐயர். தாயாரின் பெயர் திருமதி லட்சுமி அம்மாள்.

பாரதியார் சிறுவயதிலேயே நுண்ணறிவும் கவி பாடும் ஆற்றலும் மிக்கவராய்த் திகழ்ந்தார். 1893-ம் ஆண்டு எட்டயாபுரம் சமஸ்தானப் புலவர்கள் பாலகவியைப் பெருஞ்சபையில் சோதித்து வியந்து, இவருக்குப் "பாரதி" (கலைமகள்) என்ற பட்டத்தை வழங்கினார்கள். பாரதியார் 1902-ம் ஆண்டில் தமது படிப்பை முடித்து சமஸ்கிருதம், இந்தி ஆகிய மொழிகளில் தேர்ச்சி பெற்றார்.

பின், பாரதியார் மதுரை சேதுபதி உயர்நிலைப் பள்ளியில் சில மாதங்கள் தமிழாசிரியராய்ப் பணியாற்றி வந்தார். ஆனால் அவ்வேலையில் பாரதியாருக்கு விருப்பம் இல்லை. நாட்டு விடுதலைக்காகப் பாடுபடவும், சமூக சீர்திருத்தத்தில் ஈடுபடவுமே அவர் மனம் விரும்பியது. 1904-ம் ஆண்டுவாக்கில் பாரதியார் 'சுதேசமித்திரன்' பத்திரிகையின் துணை ஆசிரியரானார். பிறகு கொஞ்ச காலத்தில் அதை விட்டு விலகிவிட்டார்.

### வங்கப் பிரிவினை

இதன் பின், 1906-ம் ஆண்டு, பாரதியார் "இந்தியா" என்ற தமிழ் வாரப் பத்திரிகையைப் பொறுப்பேற்று நடத்தி வந்தார். அச்சமயம் வங்கப் பிரிவினை காரணமாக நாடெங்கும் சுயராஜ்யக் கிளர்ச்சி தீவிரமாகப் பரவியது. வெள்ளையர்களின் அடக்குமுறையும் தீவிரமாகவே இருந்தது. ஆங்கிலேயர்களின் அடாத செயல்களையும், அக்கிரமங்களையும் பாரதியார் "இந்தியா"வில் எடுத்து இயம்பினார். மேலும் அரசியலில் தீவிரவாதியானார்.

''இந்தியா'' பத்திரிகையில், நாட்டு மக்களுக்கு சுதந்திர ஆர்வத்தையும், உணர்ச்சியையும் ஊட்டும் வகையில் பல பாட்டுக்களையும், கவிதைகளையும் எழுதி வந்தார்.

பாரதியாரின் உணர்ச்சி மிக்க தேசீயப் பாடல்கள் தமிழ்நாட்டு மக்களிடத்தே நிலவிய தளர்ச்சியை விரட்டி, புத்துணர்ச்சியை ஊட்டின.

''வீர சுதந்திரம் வேண்டி நின்றார் பின்னர்
வேறொன்று கொள்வாரோ?''

என்று சுதந்திரத்தின் பெருமையை மக்களுக்கு எடுத்து இயம்பினார்.

விடுதலைப் போராட்ட வீரர் பலரை வாழ்த்தி தம் பத்திரிகையில் எழுதிவந்தார். இது கண்ட ஆங்கிலேய அரசாங்கம் ''இந்தியா'' பத்திரிகைப் பிரசுரகர்த்தாவைச் சிறையிலிட்டது. பின் பாரதியாரையும் கைதுசெய்ய ''வாரண்ட்'' பிறப்பித்தது. இந்நேரத்தில் பாரதியாரின் உணர்ச்சியூட்டும் கவிதைகள் நாட்டிற்குத் தேவை என்பதை உணர்ந்த பாரதியாரின் நண்பர்கள் பாரதியாரைப் புதுச்சேரிக்குப் போகும்படி கூறினார்கள். அச்சமயம் புதுச்சேரி, பிரெஞ்சுக்காரர்கள் ஆட்சியில் இருந்தது.

### புதுச்சேரியில் பாரதியார்

1908-ம் ஆண்டு பாரதியார் புதுச்சேரி சேர்ந்தார். புதுச்சேரியில் பாரதியார் மிகத் துன்பத்துடன் வாழ்க்கையை நடத்தி வந்தார். வீட்டு வாடகை கொடுக்கக்கூட பணமின்றி கஷ்டப்பட்டார். வீட்டுக்காரச் செட்டியார் மிக நல்லவர். ஒரு சமயம் பாரதியாரிடம் வாடகைப் பணம் வாங்க செட்டியார் வந்தார். பாரதியாரிடமோ பணமில்லை. பாரதியார் செட்டியாரிடம், ''ஓய், செட்டியாரே! இன்னும் பத்து வருடத்தில் சுயராஜ்யம் வரப்போகிறது. அந்த அரசாங்கக் கஜானாவுக்கு ஒரு செக் தருகிறேன், அங்கே பணம் வாங்கிக்கொள்ளும்'' என்று வறுமையிலும் வேடிக்கையாகச் செட்டியாரிடம் தமது சுதந்தர தாகத்தை எடுத்துக்கூறினார்.

''என்று மடியும் எங்கள் அடிமையின் மோகம்!'' என்று பாடி மக்களின் அடிமை உணர்ச்சியை விரட்டி சுதந்திர உணர்ச்சி உண்டாக்கியவர் பாரதியார். ஆங்கிலத்தைச் சரளமாகப் பேசும் திறமை படைத்தவர் அவர். எனினும் ஒரு தமிழன் மற்றொரு தமிழனிடம் ஆங்கிலத்தில் பேசுவதைப் பாரதியார் வெறுப்பவர். பாரதியாரிடம் தமிழர்கள் எவரேனும் ஆங்கிலத்தில் பேசிவிட்டால் போதும், அவருக்கு அசாத்தியக் கோபம் வந்துவிடும்.

ஒரு சமயம் புதுச்சேரி கடற்கரையில் பாரதியாரும் அவரது நண்பர்கள் சிலரும் பேசிக்கொண்டிருந்தார்கள். அப்பொழுது ஒரு நண்பர் பாரதியாரிடம் ''உங்கள் டிலக்கு இப்போ எங்கே இருக்கிறான்?'' என்று கேட்டார். உடனே பாரதியாருக்கு வந்ததே கோபம். அவர் தம் நண்பரைப் பார்த்து, ''ஏனடா நீ தமிழனா? உனக்குத் தமிழ் உணர்ச்சி இருக்கிறதா? அதென்னடா 'டிலக்'?'' என்று ஆவேசமாகக் கேட்டார். உடனே அந்த நண்பர் 'டிலக்' என்றது 'திலக'ரைத்தான் என்றார். மேலும் திலகரை அவர் ''இவன், அவன்'' என்று சொன்னார். பாரதியாரால் இதைப் பொறுக்க முடியவில்லை. சண்டை போட்டுவிட்டார்.

புதுச்சேரி வாழ்க்கை பாரதியாருக்கு அலுப்புத் தட்டவே, 1918-ம் ஆண்டு புதுவையை விட்டு தமிழகம் வர விரும்பினார். பாரதியார் புதுச்சேரியின் எல்லையைக் கடந்து பிரிட்டிஷ் இந்தியாவுக்குள் நுழைந்தவுடன் கடலூர் அருகே கைது செய்யப்பட்டார். அச்சமயம் பாரதியார் மிகவும் உடல் நலிவுற்றிருந்தார். எனவே அவருடைய விடுதலைக்காகப் பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. ஆனால் அரசாங்கம் ''பாரதியார் அரசியலில் தீவிரமாகக் கலக்கக்கூடாது'' என்றும், அவ்வாறு பாரதியார் வாக்குறுதி அளித்தால் விடுதலையளிப்பதாகவும் கூறியது. ஆனால் பாரதியார் அவ்வாறு உறுதியளிக்க மறுத்துவிட்டார்.

### பிராணிகளின் நண்பர்

கடைசியில் பலருடைய விடாமுயற்சியின் விளைவாக பாரதியார் விடுதலை செய்யப்பட்டார். ''காக்கை குருவி எங்கள் ஜாதி'' என்று பாடிய பாரதியார் ஏட்டளவில் மட்டுமின்றி செயலாலும் பறவைகளிடமும், விலங்குகளிடமும் மாறாத அன்புடையவர். பாரதியார் சென்னை திருவல்லிக்கேணியில் வசித்து வருகையில், அப்பகுதியிலுள்ள பார்த்தசாரதி கோவிலுக்கு தினமும் செல்வார். அக்கோவில் யானையைத் தம் தோழனாக எண்ணிப் பழகி வந்தார் பாரதியார். ஒருநாள் மாலை, தேங்காய் பழத்துடன் தம் தோழனை (யானையை)க் காணக் கோவிலுக்குச் சென்றார். தேங்காயை அன்புடன் கொடுத்தார் யானையிடம். ஆனால் வெறி கொண்ட யானை, தேங்காய் பழத்துடன் பாரதியாரையும் சேர்த்து இழுத்துத் தன் கோட்டத்துக்குள் போட்டது. இதனால் படுகாயம் அடைந்தார் பாரதியார். அந்த அதிர்ச்சியால் நோயுற்ற அவர் இரண்டு மாத படுக்கைக்குப்பின், 1921-ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 11-ம் நாள் தமது 39-ம் வயதில் இறைவனடி சேர்ந்தார்.

பாரதியார் உடல் மறைந்த போதிலும், அவரது ஆன்மா இன்றும் நின்று நிலவி வருகிறது. பாரதம் விடுதலையடைய வேண்டும் எனவும், பாரத மக்கள் அனைவரும் ஒன்றுபட்டு வாழ வேண்டுமெனவும், மக்களிடையே உயர்வு தாழ்வு நீங்க வேண்டுமெனவும், கல்வியில் சிறக்க வேண்டுமெனவும், பல கனவுகள் கண்டு, கவிதை இயற்றியவர் பாரதியார். அவர் கண்ட கனவு இன்று நனவாகி வருகிறது.

# தெய்வமாய் வந்தார்!

—திரு பா. வேலு.—

அழகொளி தெய்வ அருள்ஒளி, உள்ள
பழமொழிப் பேரொளி, பண்பு—விளக்கொளி
ஆகிய பல்லொளி யாவுமே மிக்குற
மோகித் திணைந்ததோர் முத்து!

முத்தும் கடலின்கண் மெத்த விளைவதால்
கத்து கடல்முத்தாய்க் காணற்க;—புத்தர்
திருநபி, ஏசுபோல் தெய்வமாய் வந்தார்
கருநெல்லி யாகக் கனி!

இயல்பில் பணமிருந்தும் ஏழையாய் வாழ்ந்தே
அயர்வில் துயிலா(து) அடிகள்—உயரிய
பாதை நடந்து பயணம் புரிந்திவர்
மேதையுமானார் மிகுந்து!

அறிந்தவர்க் கெல்லாம் அறிஞர், இதுவரை
அறியா தவர்களும் யாரோ?—வெறியார்
உலகினைப் பண்பாம் ஒழுங்கால் கவர்ந்த
குலமகன் நேருவோர் குன்று!

நமது குடியரசின் நாக்காய்த் திகழ்ந்தும்
சமரசத் தீங்குரல் தந்தும்,—அமைவுடன்
ஐந்தாண்டுத் திட்டங்கள் ஆக்கியும், இந்தியப்
பைந்தளிர் காத்தார் பகுத்து!

காண்கிறோம் நெல்லும், கரும்பும், பளிங்குக்கல்
தூண் என வாழையின் தோட்டமும்—பூண்கிறோம்
செல்வமும், மேன்மையும், செல்வர் நமக்களித்த
செல்வம் இவையன்றோ செப்பு!

*முனிவு சிறிதுள்ள மோதிலால் மைந்தர்
கனிவு மிகவுள்ள கண்ணன்—துணிவு
குருதியில் ஒன்றி உறுதிகொள் திண்ணன்,
பணியார் எவர்க்கும் பயந்து!

* முனிவு—முன்கோபம்.

# முக்கிய அறிவிப்பு

சமூக சேவை புரியும் தனியார் ஸ்தாபனங்களிடமிருந்து மத்திய சமூக நல போர்டின் மானிய உதவித் திட்டத்தின் கீழ் உதவி பெறுவதற்குரிய விண்ணப்பங்களை, அதற்கான விண்ணப்ப பாரங்களில், தமிழ்நாடு சமூக நல போர்டு வரவேற்கிறது.

மாதர்கள், குழந்தைகள் நலத்திற்காகப் பணிபுரியும் நிலையங்கள், உடல், மனம் பாதிக்கப்பட்ட குழந்தைகள் சேவை நிலையங்கள் ஆகியவை சிறப்பாக நாம் செய்து வரும் தேவைகளை ஒன்றுதிரட்டிப் பலப்படுத்துவதற்கும், அபிவிருத்தி செய்வதற்கும், விரிவாக்குவதற்கும் இம் மானியம் கோரி விண்ணப்பம் செய்யலாம்.

நன்கு ஸ்தாபிக்கப்பட்டதாய், அபிவிருத்திக்கும் முன்னேற்றத்திற்குமான திட்டங்களுக்குப் போதுமான பொருள் வருவாயைத் திரட்டும் திறமையுள்ள ஸ்தாபனங்களின் வளர்ச்சிக்கும், முன்னேற்றத்திற்குமே மானியம் வழங்குவது பற்றி ஆலோசிக்கப்படும். இந்த மானியம் ஸ்தாபனங்களின் நிலைமையைப் பொறுத்து 1966-ம் ஆண்டு ஏப்ரல் 1-ம் தேதி முதல் 1967-ம் ஆண்டு மார்ச் மாதம் 31-ம் தேதி வரையுள்ள காலத்திற்கு வழங்கப்படும். 1966-ம் ஆண்டு ஏப்ரல் 1-ந் தேதி முதல் 1971-ம் ஆண்டு மார்ச் 31-ம் தேதி முடியும் காலம் வரை ஐந்தாண்டு காலத்திற்கு மேலாகத் தொடர்ந்து சமூகப் பணிகளை செய்து வரும் ஸ்தாபனங்களுக்கு மட்டுமே, திட்ட கால முழுதுக்கும் உண்டான அனுமதி தொகை மானியம் வழங்க சிபாரிசு செய்யப்படும். தேவையான விண்ணப்ப பாரங்கள், வேண்டுகோளின் பேரில் அனுப்பிவைக்கப்படும். விண்ணப்பம் வேண்டுவோர், நிலையங்களின் கடந்த ஆண்டுகளின் சேவை, பயனடைபவரின் எண்ணிக்கை, இடவசதி முதலிய விவரங்களை கீழ்க்கண்ட முகவரிக்கு எழுதி அனுப்பவேண்டும் :—

தலைவி,
தமிழ்நாடு சமூக நல போர்டு,
சென்ட்ரல் ஆபீஸ் கட்டிடம்.
தேனாம்பேட்டை, சென்னை-6.

இவ்விண்ணப்பங்களை 1965-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 15-ம் தேதிக்குள் தமிழ்நாடு சமூகநல போர்டு அலுவலகத்திற்கு அனுப்ப வேண்டும்.

(அட்டைப் பட விளக்கக் கட்டுரை)

# அறியாமை இருள் அகல...

தமிழ்நாட்டில் தொடக்கக் கல்வியும், உயர்நிலைக் கல்வியும், கல்லூரிப் படிப்பும், தேச விடுதலைக்குப் பிறகு போற்றத்தக்க வகையில் முன்னேற்றமடைந்துள்ளன. (விவரம் கடைசி அட்டைப் படத்தில்) 1964–65-ல் இத்துறையில் ஏற்பட்ட முன்னேற்றம், அடுத்து வரும் ஆண்டின் வேலைத் திட்டம் ஆகியவை பற்றிய தகவல்களைக் இங்கே காணலாம்.

1965–66 வரவு-செலவுத் திட்டம் பொதுக் கல்விக்காக (திட்ட வேலைகளுக்காகவும், திட்டத்தில் சேராத வேலைகளுக்காகவும் சேர்ந்து) ரூ. 3,534 லட்சம் செலவு செய்ய வகை செய்கிறது. அதன் விவரம் வருமாறு ;—

| | | தொகை. (ரூபாய் லட்சத்தில்.) | சதவீதம். |
|---|---|---|---|
| 1. | ஆரம்பக் கல்வி | 1875 | 53·05 |
| 2. | உயர் நிலைக் கல்வி | 1179 | 33·36 |
| 3. | பல்கலைக் கழகக் கல்வி | 157 | 4·43 |
| 4. | சிறப்புக் கல்வி | 91 | 2·59 |
| 5. | இதர இனங்கள் | 232 | 6·57 |

1964–65 வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்கியுள்ளதைவிட, 1965–66 வரவு-செலவுத் திட்டத்தில் ரூ. 600 லட்சம் அதிகமாக ஒதுக்கப் பட்டுள்ளது.

தமிழ்நாட்டில், மொத்த ரெவின்யூ செலவில் பொதுக் கல்விக்கான செலவு சுமார் 22 சதவீதமாகும்.

## தொடக்கக் கல்வி முன்னேற்றம்

ஆறு முதல் 11 வரை வயதுள்ள எல்லாச் சிறுவர் சிறுமியர்களுக்கும் ஆரம்பக் கல்வி வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டும் என்று இம் மாநிலத்தின் மூன்றாவது திட்டம் வலியுறுத்துகிறது. கடந்த ஆண்டுகளைப் போலவே, 1965–66-ம் ஆண்டுக்குரிய திட்டச் செலவில் பெரும்பகுதி ஆரம்பக் கல்விக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. திட்ட இலக்கினை எய்துவதற்காக இம் மாநிலத்தில் எல்லோருக்கும் ஆரம்பக் கல்வி அளிப்பதற்கான வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. முன்னூறு அல்லது அதற்கு மேற்பட்ட மக்கள் தொகை கொண்ட ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு மைல் சுற்றளவிற்குள் ஆரம்பப் பள்ளிகள் துவக்கப்பட்டன. இலவசக் கல்வி, இலவச மதிய உணவு, இலவச சீருடை (Free Uniforms) வழங்குதல் காரணமாக ஆரம்பப் பள்ளிகளில் ஏராளமான சிறுவர் சிறுமியர் சேர்ந்தனர். 1964–65-ல் தொடக்கப் பள்ளிகளின் எண்ணிக்கை 30,020 (1963–64)-லிருந்து 30,300 ஆக அதிகரித்தது. அதாவது, 280 பள்ளிகள் அதிகமாக நிறுவப்பட்டன, அதே ஆண்டில் 1 முதல் 5வரை உள்ள வகுப்புகளில் சுமார் 4·7 லட்சம் மாணவர்கள் சேர்க்கப்பட்டனர். இம் மாநிலத்தில் ஆரம்பப் பள்ளிகளில் சேர்க்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கை தற்போது 88 சத வீதமாக உள்ளது. மூன்றாவது திட்ட முடிவிற்குள் 6–11 வயதுள்ள மாணவர்களில் 92 சத வீதத்திற்குக் குறையாமல் சேர்க்கப்படுவார்கள் என்று எதிர் பார்க்கப்படுகிறது. 1965–66-ல் 6—11 வயதுத்

தொகுதியிலுள்ள 5 லட்சம் சிறுவர் சிறுமியர் கூடுதலாகச் சேர்க்கப்பட வேண்டும் என்று திட்டமிடப்பட்டிருக்கிறது.

இத்துடன். 6—11 வயதுத் தொகுதியிலுள்ளவர்களுக்குக் கட்டாய ஆரம்பக் கல்வித் திட்டம் ஒன்று மேற்கொள்ளப்பட்டது. அது 1960–61-ல் அமலுக்குக் கொண்டு வரப்பட்டது. இம் மாநிலம் முழுவதிலும் மூன்றாண்டுக் காலத்தில் இத் திட்டம் பரவியது. நடப்பு ஆண்டில், இம் மாநிலத்தின் மூன்றில் ஒரு பகுதியில் 10—11 வயதுத் தொகுதியிலுள்ளவர்கள் விஷயமாக, இத் திட்டம் அமலுக்கு வந்தது. எஞ்சிய மூன்றில் இரண்டு பகுதியில் 9—10 வயதுத் தொகுதியிலுள்ளவர்கள் விஷயமாக இத் திட்டம் அமுலுக்கு வந்தது. அடுத்த ஆண்டு 6—11 வயதுத் தொகுதியிலுள்ளவர்கள் எல்லோருடைய விஷயமாகவும் இத் திட்டம் அமலுக்கு வரும்.

### மதிய உணவுப் பணி

இம் மாநிலத்தின் தொடக்கப் பள்ளிகள் அனைத்திலும் ஏழை மாணவர்களுக்கு இலவசமாக உணவு வழங்கப்பட்டுவருகிறது. ஹரிஜன நலப் பள்ளிகள், சென்னை மாநகராட்சிப் பள்ளிகள் உட்பட 30,216 லட்சம் தொடக்கப் பள்ளிகளில் இத் திட்டம் இப்பொழுது அமலில் உள்ளது. இத்திட்டத்தினால் சுமார் 16.25 சிறுவர்கள் பயனடைகின்றனர். தமிழ்நாடு பள்ளி உணவு திட்டத்தினால் மட்டும் சுமார் 15 லட்சம் சிறுவர்கள் பயனடைகின்றனர். 1965–66 வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில், இத்திட்டத்திற்காக ரூ 1,86 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. இத் திட்டத்திற்கு இந்திய அரசாங்கம், திட்டவரம்பிற்குப் புறம்பாக, செலவில் மூன்றில் ஒரு பகுதியை விசேஷ மானியமாக வழங்குகிறது.

ஐநூற்று பதினொன்று இடைநிலைப் பள்ளிகளில் (Secondary Schools) ஏழை மாணவர்களுக்கு மத்திய உணவு வழங்கப்படுகிறது. இதற்கான செலவு பொது மக்களிடமிருந்து பெறும் நன்கொடைகளிலிருந்து செய்யப்படும்.

"கேர்" (CARE) நிறுவனம் மாநிலத்தில் உள்ள தொடக்கப்பள்ளிகளில் பள்ளி உணவு திட்டத்திற்கு வேண்டிய பால் பவுடர், தாவர எண்ணெய், மாவு ஆகியவற்றைத் தொடர்ந்து வழங்கி வருகிறது, நடப்பு ஆண்டு முதற்கொண்டு ஹரிஜன நலப் பள்ளிகளுக்கும் பால் பவுடர் வழங்கப்படுகிறது. இந்த நிறுவனம் 1961–62 முதல் 1964–65 வரை ரூ 6 கோடி மதிப்புள்ள பொருள்களை வழங்கியுள்ளது.

### தொடக்கப் பள்ளி ஆசிரியர்களுக்குப் பரிசுகள்

தொடக்கப்பள்ளி ஆசிரியர்களின் திறமைவாய்ந்த பணியை மெச்சி, அரசாங்கம் பரிசு வழங்கும் திட்டம் தொடர்ந்து அமலில் இருந்து வருகிறது. இத் திட்டத்தின்கீழ் ஆண்டு தோறும் இரண்டு ஆசிரியர்கள் கல்விமாவட்டம் ஒவ்வொன்றிலிருந்தும் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்படுகின்றன.

### உயர்நிலைக் கல்வி

சமீப காலமாக இம் மாநிலத்தில் உயர்நிலைக் கல்வி பாராட்டத் தக்க வகையில் முன்னேறியுள்ளது. 1964–65ல் உயர்நிலைப் பள்ளிகளின் எண்ணிக்கை (ஆங்கிலோ-இந்திய உயர்நிலைப் பள்ளிகள் நீங்கலாக) 2,112-ஆக அதிகரித்துள்ளது. 1963–64–ல் மாணவர்களின் மொத்த எண்ணிக்கை 9·54 லட்சமாக இருக்க நடப்பு ஆண்டில் இது 11 லட்சமாக அதிகரித்தது. சிறுவர் அனைவருக்கும் தொடக்கக் கல்வி வசதி அளிக்கப்பட்டிருப்பதாலும், ஏழைச் சிறுவர்களுக்கு உயர் நிலைக் கல்விக்கு தாராளமான சம்பளச் சலுகைகள் அளிக்கப்பட்டிருப்பதாலும், உயர்நிலைப் பள்ளிகளில் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. இதன் விளைவாக, கிராமப் பகுதிகளிலும் புதிதாகப் பள்ளிகளைத் துவக்க வேண்டி வந்தது. புதிய பள்ளிகளைக் கிராமங்களில் திட்டமிட்டுப் பரவலாகத் துவக்கியதனால், கிராமச் சிறுவர்களுக்கு உயர் நிலைக்கல்வி வசதி எளிதில் கிடைக்க வழி கோலியது. 1964–65 முதற்கொண்டு அங்கீகரிக்கப்பட்ட உயர்நிலைப்பள்ளிகள் அனைத்திலும் சம்பளம் வசூலிக்கும் முறை எடுக்கப்பட்டு, சாதி மத வேறுபாடின்றி, செல்வநிலை ஏற்றத்தாழ்வின்றி மாணவர் அனைவரும் 11-வது வகுப்பு வரை இலவசக் கல்வி அளிக்கப்படுகிறது. இதனால் உயர் நிலைப் பள்ளிகளில் சேரும் மாணவர்களின் எண்ணிக்கை அதிகமாகியுள்ளது.

1964–65-ல் 180 உயர்நிலைப் பள்ளிகள் துவக்கப்பட்டன. அதன் விவரம் வருமாறு:—

| | பள்ளிகளின் எண்ணிக்கை. | |
|---|---|---|
| | ஆண்கள் பள்ளி. | பெண்கள் பள்ளி. |
| (1). அரசாங்கப் பள்ளிகள்...... | 9 | .. |
| (2) ஸ்தல ஸ்தாபனப் பள்ளிகள் | ..129 | 15 |
| (3) அரசாங்க உதவி பெறும் பள்ளிகள் | 18 | 9 |
| | 156 | 24 |

மூன்றாவது திட்டக் காலத்தில் 14—17 வயதுத் தொகுதியில் மேற்கொண்டும் 75,000 மாணவர்களைச் சேர்க்கவேண்டும் என்பது இலக்கு. இந்த இலக்கை என்றோ தமிழ்நாடு தாண்டிவிட்டது. தற்போது இந்த வயதுத் தொகுதியில் 2.15 லட்சம் மாணவர்கள் அதிகப்படியாகச் சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ளனர். நடப்புத் திட்ட முடிவில் அதிகப்படியாகச்

(28-ம் பக்கம் பார்க்க)



# மண் பாண்டத் தொழிற்பயிற்சியால் மலர்ந்த வாழ்வு!

"சென்னை பல்கலைக்கழகத்தின் பட்ட மேல் படிப்பு வகுப்புகளில், சில வகை சிறப்புக்கல்வி பெறும் மாணவர்களை, அவர்களது தகுதி—திறமை அறிந்த அமெரிக்கர்கள் கொத்திக்கொண்டு போய் விடுகிறார்கள், இதைக்காண நான் பெருமிதம் அடைகிறேன்...." என்று காலஞ்சென்ற பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் ஒரு முறை குறிப்பிட்டார்.

பல்கலைக்கழகப் பட்ட மேல் படிப்பில் மட்டுமல்ல, பாரத நாட்டில் பாரம்பரியமாக இருந்து வரும் கிராமியத் தொழில்களில் கூட, நவீன காலத்திற்கேற்பப் பயிற்சிகள் தரப்பட்டால், அத்தகைய பயிற்சி பெறுபவர்களுக்கு உள் நாட்டிலேயே நல்ல கிராக்கி இருக்கிறது என்பதற்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகத் திகழ்பவர் தங்கராஜ் என்ற இளைஞர்.

அவர் மட்பாண்டம் செய்வதைப் பரம்பரைத் தொழிலாகக் கொண்ட குலாலவகுப்பைச் சேர்ந்தவர். அவரது சொந்த ஊர், தென்னார்க்காடு மாவட்டம் மரக்காணம் பஞ்சாயத்து யூனியனைச் சேர்ந்த அனுமந்தை என்ற கிராமம். பள்ளிக்கூடம் சென்றறியாதவர். ஒரு காலத்தில் சரிவரக் கையெழுத்து கூடப்போடத் தெரியாத அளவில் இருந்தவர். இன்று சுமாரான எழுத்தறிவு பெற்று, மற்றவர்களுக்கும் தொழில் பயிற்சி போதித்து, தாமும் சொந்தத்தில் சம்பாதிக்கும் திறன் பெற்றவராக விளங்குகிறார் என்றால் அது அவருடைய வெற்றியை மட்டுமல்ல; மண்பாண்டப் பயிற்சித் திட்டத்தின் வெற்றியையும் குறிக்கிறது.

தமிழ்நாடு, கேரளம், ஆந்திரப் பிரதேசம், மைசூர் ஆகிய நான்கு மாநிலங்களுக்கும்பொதுவாகமண்டல மண்பாண்டப் பயிற்சிநிலையம் ஒன்று செங்கற்பட்டு மாவட்டம் திருவள்ளூர் பஞ்சாயத்து யூனியனைச் சேர்ந்த செவ்வாப் பேட்டையில் இயங்கி வருகிறது. இப்பயிற்சி' நிலையம், முதலில் கேரளாவைச் சேர்ந்த "முச்சுக் குன்னு" என்றவிடத்தில் ஆரம்பிக்கப்பட்டு, பிறகு செவ்வாப் பேட்டைக்கு மாற்றப்பட்டது. இதற்குக் காரணங்கள் பல. செவ்வாப்பேட்டையில் ஏற்கனவே ஒரு மண்பாண்ட உற்பத்தி நிலையம் இருப்பது, தரமான களிமண் தாராளமாகக் கிடைப்பது, ரோடு ரயில் நிலைய வசதிகள், சென்னை போன்ற ஒரு பெரிய நகரம் அருகில் [25 மைல் தூரத்திற்குள்] இருப்பது போன்ற காரணங்களால் இடமாற்றம் செய்யப்பட்டது.

கதர், கிராமக் கைத்தொழில் போர்டின் ஆதரவில் நடத்தப்படும் இந்த மண்டல மண்பாண்டப் பயிற்சி நிலையம் செவ்வாப்பேட்டையில் 1964 ஜனவரி முதல் இயங்கி வருகிறது. இதில் ஏற்கெனவே 19 பேர் பயிற்சியை முடித்து விட்டார்கள். இரண்டாவது கோஷ்டியாக, இப்போது 17 பேர் பயிற்சி பெறுகிறார்கள். இவர்கள் ஒவ்வொருவருக்கும் 5 மாத காலப்பயிற்சி அளிக்கப்படுகிறது. பயிற்சி காலத்தின் போது, மாதம் ஒன்றுக்குத் தலா ரூ. 45 உதவிப்பணம் (Stipend) தரப்படுகிறது.

இந்தப் பயிற்சியின்போது, நவீனக் கருவிகளைக்கொண்டு மண் பாண்டங்கள் செய்தல், விஞ்ஞான முறைப்படி சூளை வைத்தல், சாயம் பூசுதல், மெருகேற்றல் முதலியவை சொல்லித்தரப்படுகின்றன. இந்த முறைகளில், வீட்டு உபயோகத்திற்கான சமையல் கலன்களைச் செய்தாலும் அவை ஒழுங்கான உருவ அமைப்புடனும், சீரான செந்நிறத்துடனும் கவர்ச்சியான தோற்றத்துடன் கண்ணுக்கு அழகாக இருக்கின்றன. செய்யப்படும் பொருட்களுக்கு உடனடி கிராக்கி இருக்க வேண்டும் என்பது நோக்கம். ஆகையால், வழக்கமான சமையல் பாத்திரங்கள் மட்டுமின்றி, நவீன காலத்திற்கேற்ப புதுப்புதுப்பாணியில் அமைந்த தண்ணீர் கூஜாக்கள், காய்கறிகளைக்கெடாமல் பாதுகாக்கும் குளிர்ச்சாதனக் கலன் (Janatha Frigidaire)புகை கிளப்பாத அடுப்பு (Maghan choola) மற்றும் கறுப்புப் பாண்டங்கள், அரக்குப்பூச்சுப், பாண்டங்கள், பூச்செருகிகள் பொம்மைகள் முதலிய பற்பல பொருட்கள் செய்யும் முறைகள் எல்லாம், இங்கு சொல்லித் தரப்படுகின்றன.

## நிச்சயமான வேலை வாய்ப்பு

இத்தகைய பயிற்சிகளை இங்கு பெற்ற பின், பயிற்சியாளர்கள் மகாராஷ்டிராவைச் சேர்ந்த கானப்பூர், பத்ராவதி ஆகிய இடங்களில் உள்ள மட்பாண்ட பயிற்சி நிலையங்களுக்கு, ஒரு மாத மேல்பயிற்சிக்காக அனுப்பப்படுகின்றனர். அந்நிலையங்கள் நவீன கருவிகள் பலவற்றுடன் பெரிய அளவில் செயல்படுகின்றன. ஆகையினால்

அங்கு ஒரு மாதப்பயிற்சிக்கு ஏற்பாடு செய்யப்படுகிறது. அதோடு சாக்கடைக்குழாய்கள் செய்யும் திருவள்ளூர் நிலையம், விருத்தாசலம் 'செராமிக்' நிலையம் போன்ற இடங்களுக்கு, பயிற்சியாளர்கள் அழைத்துச் செல்லப்பட்டு அவ்விடங்களில் நடைபெறும் வேலைகளைப்பற்றித் தெரிந்துகொள்ளவும் அவர்களுக்கு வாய்ப்பளிக்கப்படுகிறது.

இவ்வாறு தொழில் நுட்பத் தகுதி பெறும் இந்தக் கைவினைஞர்கள், (Artisans) பயிற்சியை முடித்துக் கொண்டு வெளியேறியதும், இத் தொழில்துறையில், நீண்ட காலமாக பிரபல்யமாக இருந்துவரும் 'பாரி அண்டு கம்பெனி' போன்ற தனியார் நிறுவனங்களில், உடனடியாக வேலை பெறுகிறார்கள். வேலூரில் உள்ள நிறுவனம் ஒன்றில் மட்டும், இந்த நிலையத்தில் பயிற்சி பெற்றவர்கள் நான்கைந்து பேர் வேலைக்குச் சேர்ந்திருக்கிறார்கள். ஆக, பயிற்சி பெற்றவர்கள் எவரும் வேலைக்காகத் தேடி அலைய வேண்டிய நிலையில் இல்லை. மாறாக, அவர்களுக்குக் கிராக்கிதான் இருக்கிறது. இதற்கு நேரடியான இன்னொரு உதாரணம் செவ்வாப்பேட்டையில் உள்ள உற்பத்தி நிலையத்திற்கே, தொழில் தெரிந்த ஆட்கள் மூவர் தேவைப்படுகிறார்கள்; ஆனால் கிடைக்கவில்லை. ஆகையால் பயிற்சி நிலையத்தில், இப்போதைய கோஷ்டியின் பயிற்சி முடிந்ததும், அவர்களிலிருந்து மூவரை எடுத்துக் கொள்ளலாம் எனக் காத்திருக்கிறார்கள்.

ஆனால் இந்த மண்டல பயிற்சி நிலையத்தில் பயிற்சி பெறுபவர்கள் எல்லாம், தனிப்பட்ட நிறுவனங்களில் தான் போய்ச்சேருகிறார்கள் என்பதில்லை. ஏனெனில், இங்கு பயிற்சி பெற வருபவர்களில் பெரும்பாலோர் பல்வேறு பஞ்சாயத்து யூனியன்கள் அல்லது மண்பாண்டங்கள் செய்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் ஆகியவற்றினால் பயிற்சிக்காக அனுப்பப்படுபவர்கள். அத்தகையவர்கள், தங்கள் பயிற்சி காலம் முடிந்ததும், அந்தந்த பஞ்சாயத்து யூனியன்களுக்கும், கூட்டுறவு சங்கங்களுக்கும் திரும்பிச் செல்கிறார்கள். செவ்வாப்பேட்டையில் மண்பாண்ட உற்பத்தி நிலையத்தைப் போலவே பல யூனியன்களில் உற்பத்தி நிலையங்கள் உள்ளன. அவற்றிற்கு, நவீன தொழில் முறைகள் அறிந்த ஆட்கள் தேவையாதலால், சிலர் இத்தகைய பயிற்சிக்கு அனுப்பப்படுகிறார்கள். இவ்வாறு பயிற்சிக்கு அனுப்பப்படுவதால், பஞ்சாயத்து யூனியனின் தேவை பூர்த்தியாவது மட்டுமல்லாமல் பயிற்சி பெறுபவர்களின் சொந்த நிலையும் உயர்வடைகிறது.

பண்ருட்டியில் உள்ள மட்பாண்டப்பயிற்சி நிலையத்திற்குத் தான் தங்கராஜ் என்ற இளைஞர் பஞ்சாயத்து யூனியன் அதிகாரிகளின் முயற்சியால் அனுப்பப்பட்டார். ஓராண்டு பயிற்சி முடிந்ததும், அடுத்து இன்னொரு இடத்தில், அவர் ஐந்து மாதப் பயிற்சி பெற்றார். பிறகு அவர், செவ்வாப்பேட்டை சேர்ந்தார். அங்கு, இப்போது உற்பத்தி நிலையமாக மட்டும் இருப்பது, முன்பு (மண்டல பயிற்சி நிலையம் ஏற்படும் வரை) பயிற்சி நிலையமாகவும் இருந்தது. அதில் கை வினைஞருக்குரிய (Artisan) ஓராண்டு பயிற்சியைப் பெற்ற தங்கராஜ், அதே நிலையத்தில் தொழில் தெரிந்த ஊழியராக (Skilled worker) மாதச் சம்பளத்திற்கு வேலையில் அமர்ந்தார்.

### மலர்ந்த வாழ்வு

இவ்வாறு படிப்படியாக தகுதியில் மேம்பாடு அடைந்து முன்னேறிய தங்கராஜ், இன்று பெருமைப்படத்தக்க ஓர் உயர் பதவியை அடைந்துவிட்டார். நான்கு மாநிலங்களுக்கும் பொதுவாக உள்ள மண்டலப் பயிற்சி நிலையத்தில் இன்று அவர் தான் பிரதம கைவினைஞர் (Master Potter). நிலையத்தில் பயிற்சி பெறுபவர்களுக்குத் தொழில் முறைகளையெல்லாம் சொல்லித்தரும் ஆசிரியராகவும் அவர் பணியாற்றுகிறார். எழுதப்படிக்கத் தெரியாதிருந்த அவர், இந்த இடைக்காலத்தில், ஓரளவு கல்வியறிவு பெற்றிருக்கிறார். நிலையத்தின் தலைமை அதிகாரி தரும் பாடக்குறிப்புகளை, மேலோட்டமாகப் பார்த்து தெரிந்துகொண்டு, அவற்றைப் பயிற்சியாளர்களுக்குக் செயல் முறையில் போதிக்கிறார்.

ஆம், ஏட்டுப்படிப்பு கைவரப் பெறுத தங்கராஜ், இன்று கைவினைஞர்களுக்கு ஆசிரியராக இருக்கிறார்!

அவர் இப்பதவியில் கடந்த ஐந்து மாதங்களாகப் பணியாற்றி வருகிறார். பயிற்சி நிலையத்திலிருந்து உற்பத்தி நிலையத்திற்கு, வேலைமாற்றம் பெறவிருக்கிறார். அங்கு, உற்பத்தியைப்பெருக்கும் ஒரு திட்டத்தின் கீழ், ஊழியர்களுக்கு, மாதச்சம்பளம் அல்லது தினசரி ஊதியம் தருவதற்குப் பதிலாக, அவரவர் செய்து முடிக்கும் வேலை அளவுக்கு ஏற்ப ஊதியம் (Piece rate) தரப்படவிருக்கிறது. அந்த முறையில் திரு தங்கராஜ் மாதம் ரூ. 200 முதல் ரூ. 300 வரை ஊதியம் பெற வாய்ப்பிருக்கிறது.

எங்கோ ஒரு குக்கிராமத்தில், தானும் தன் பெற்றோர்களும் சேர்ந்து உழைத்தால் வருடம் பூராவுக்கும் ரூ. 500 மட்டும் வருமானம் பெறக்கூடிய ஒரு குடும்பத்தில் வந்த இந்த இளைஞர் இன்று மாதம் ரூ. 300 வரை சம்பாதிக்கும் நிலையைத் தகுதியாகப் பெற்றிருக்கிறார்.

பயிற்சித் திட்டங்களின் பலனுக்கு, வேறென்ன உதாரணம் வேண்டும்?

# எல்லையில் நாம்

◁ திரு சோம. மகாதேவன் ▷

நம் நாட்டிலுள்ள லட்சோபலட்சம் கிராமங்களில் வாழும் கோடிக்கணக்கான மக்களின் உழைப்புச் சக்திகளை ஒன்று திரட்டி, சமுதாய உயர்வுக்கான சிறந்த எண்ணங்களை—செயல்களை முன்வைத்து குறுகிய சிந்தனைகளை—பயனற்ற பூசல்களைத் தள்ளிவைத்து, வேகமான பொருளாதார முன்னேற்றத்திற்கும் சமாதான இயக்கத்திற்கும் திட்டமிட்டுச் செயலாற்றுவதுதான், கிராமத் தொண்டர் படையின் நோக்கமாகும். அந்த உயர்ந்த நோக்கத்தைத்தான் ,ஆசிரியர் இங்கே நாடக வடிவில் உருவாக்கித் தருகிறார்.

நாடக ஆசிரியர் திரு சோம. மகாதேவன் பல ஆண்டுகள் கிராம சேவக்காக இருந்து பணியாற்றி, நேரடி அனுபவம் பெற்றவர். அந்த அனுபவத்தை அடிப்படையாக வைத்து, படிப்பதற்கு மட்டுமல்லாமல், நடிப்பதற்கும் ஏற்றவகையில் இந்த ஓரங்க நாடகத்தை எழுதியுள்ளார். —ஆசிரியர்

### காட்சி 1.

காவல்குளம் கிராமத்தில் ஊர் கூட்டம் கூடி இருக்கிறது. நாட்டாமை நல்லுத்தேவர் நடுநாயகமாக அமர்ந்திருக்கிறார். கிராமப் பஞ்சாயத்து ஆரம்பமாகப் போகிறது.

கிராமத்தின் பொதுவில் போடப்பட்டிருக்கும் தழை உரப்பயிர் நெட்டியை, மாடுகளைவிட்டு அழித்ததாக மருதப்பன் மீது குற்றச்சாட்டு.

நாட்டாமை ஒரு முறை தலை நிமிர்ந்து எல்லோரையும் ஏறிட்டுப் பார்க்கிறார். அந்த கிராமத்திலே இரண்டு தலை முறைகளைப் பார்த்து விட்டவர். கிராமத்தின் முன்னேற்றமே அவரது மூச்சு.

நாட்டாமை : கிராமத்திலே ஒரு நல்ல காரியத்தை ஆரம்பிக்கணும்ன்னு அதுக்கு நாலு பக்கத்துலேயிருந்தும் இடைஞ்சல் வருது. (கூட்டத்தினரை உற்றுப் பார்த்து) எல்லாரும் வந்தாச்சா? கீழவீட்டு முத்தையா வந்திருக்கானு ?

சவரிமுத்து : (பணிவோடு எழுந்து நின்று) போய் கூப்பிட்டதுக்கு இந்தா கஞ்சியைக் குடிச்சிட்டு வாரேன்னு சொன்னரு !

நாட்டாமை : கூப்பிட்ட குரலுக்கு இப்படிச் சொல்லிப் போடுறது. அப்புறம் நான் இல்லாம எப்படி ஊர் கூட்டத்திலே தீர்மானம் செய்யிறதுன்னு முச்சந்தியிலே நின்னு கத்தறது ! போய் இன்னொரு வாட்டி சத்தம் கொடுத்திட்டு வா. (பின் பக்கம் திரும்பி) ஏலே சோணை ! அந்த சண்டியர் மருதப்பனை கையோட கூட்டிக்கிட்டு வா !

(சோணைமுத்து போகிறான்)

இந்த கொன்னவாய்ப்பய....இப்ப புதுசா சண்டியர் தனத்துக்கு ஆரம்பிச்சிருக்கான். எது நல்லது எது கெட்டதுன்னு புரிஞ்சுக்க தெரியலையின்னு எத்தனை நாளைக்கி இவனுகளைக் கட்டி மாரடிக்கிறது. உடம்பு வளையாமாதிரியனும்ன்னு நினைச்சா எவ்வளவு காலத்துக்கு ஓடப்போகுது. எதிலேயும் சோம்பேறித்தனம் தான் வளர்ந்துக்கிட்டு வருது. நமக்கெல்லாம் முக்கியம் எது ? விவசாயம்தான் ; இது படுத்துப் போச்சின்னு பிழைப்புக்கு வேறே வழி என்ன இருக்கு ?

நெல்லு விவசாயத்துக்கு புண்ணாக்கு விலை ஓசந்து போச்சு, உர உப்பு கிடைக்கலைன்னு சொல்லிக்கிட்டேதான் இருக்கோம் ! வேறே வழி இருக்கான்னு யோசிக்கிறதே இல்லே ! ஒட்டிக்கி ரெட்டியா விவசாயம் செய்து கடந்த ரெண்டு மூணு வருஷமா நஷ்டப்பட்டுக்கிட்டிருக்கோம். இதுக்கு மேலே நஞ்சைக்கு தழை உரம் போடுறது சிக்கனமான வழியின்னு தீர்மானம் செய்து, நம்ம கிராமத்திலே ஒப்பந்தமா நானூறு ஏக்கரா நஞ்சையிலே நெட்டி விதையைப் போட்டிருக்கோம். இதை நல்ல முறையிலே காப்பாத்தி போட்டோமின்னு.... இந்த வருஷம் நம்ம நஞ்சைக்கு வேறே உரம் ஒண்ணும் வேண்டாம்; பயிரும் நல்லா இருக்கு.

சவரிமுத்து : அதனலே தானே இடையிலே நுழைஞ்சு....நாலு பேரு தெரிஞ்சும் தெரியாமலும் மாடுகளை விட்டு அழிக்கிறாங்க.

நாட்டாமை : அழிக்கட்டும். அதுக்குத்தான் கிராமத் தொண்டர் படையிலேயிருந்து கட்டுக்காவல் போட்டிருக்கோமில்ல. பயிரைக் காப்பாத்தி கொடுத்திட்டா தொண்டர் படைக்கும் கிராமப்

பொதுவிலேயிருந்து நிதியா ஒரு தொகையைக் கொடுக்கலாமுன்னுதான் முடிவு செய்திருக்கோம். இதுக்கு இடையிலே தொண்டர் படை கட்டுக் காவலேயும் மீறி ஆடுமாடுகளே விட்டு அழிமாந்திரம் செய்யிறுங்க. தடுத்ததுக்கு நம்ம தொண்டர்படை தளபதி ரெங்கன் கிட்ட மருதப்பன் அடாதுடியா பேசியிருக்கான்.

சவரிமுத்து : இதை ரெண்டுலே ஒண்ணு கேட்டு முடிவு செய்யலேயின்னு..பயிர் பூராவும் பாழாப் போகுமுங்க. இந்த மருதப்பன் எந்த நேரமும் கையிலே கம்பைத் தூக்கிக்கிட்டு திரியிறது நல்லதுக்கில்லே, கில்லாடித்தனம் செய்யிற வனே ஏன்னு கேட்க கிராமத்திலே நாதி இல்லாமப்போச்சு.

நாட்டாமை : அதைக் கேட்குறதுக்குத் தான்டா இப்ப இங்கே கூடியிருக்கோம். அதுக்குள்ளே எதுக்கு அகராதித்தனமா பேசுறே !

(மருதப்பனும் சோணேயும் வருகிறுர்கள். மருதப்பன் கையில் தடியோடு இருக்கிறுன்.)


மருதப்பன் : (பணிவோடு) கும்பிடுறேன் நாட்டாமைகாரய்யா !

நாட்டாமை : வாங்க ! ஊர் கூட்டத்துக்கு வர்றப்பக் கூட இந்தத் தடியை வீட்டுலே வச்சிட்டுவர முடியலிங்களா ! ஏண்டா......நிமிந்துநின்று முட்டிக்கிறே. கொஞ்சம் நிதானமாத்தான் போ !

மருதப்பன் : நீங்க ஒண்ணு. இப்புடியே தோட்டத்துக்குக் காவலுக்குப் போறவன். ஒத்தப்பேரு இருக்கிறவனுக்கு அடிக்கிறதுக்கு சத்து எங்கேங்கே இருக்கு !

நாட்டாமை : ஏலே....இப்படி அப்பராணி போக்கிரித்தனம் செய்தே,....உனக்கு ரொம்ப ஓசந்து போச்சு ! (ரெங்கனது பக்கம் திரும்பி) ரெங்கா........இப்ப நீ சொல்லு, நேத்து, தலே வெட்டியான் மடைக்குப் பக்கத்திலே என்ன நடந்திச்சு !

ரெங்கன் : (எழுந்து) கிராமத்துக்குத் தொண்டர் படை சார்பாக இந்த நானூறு ஏக்கர் நெட்டி பயிரைக் காப்பாத்திக் கொடுக்கிறதுக்கு - கிராமத்திலேயிருந்து தொண்டர் படைக்கு கட்டுக் காவலுக்கு விட்டுறிக்கீங்க. நாங்களும் முறை வச்சு காத்துக்கிட்டு வாரோம் — இடையிலே இந்த மருதப்பன், தலேவெட்டியான் மடை பாசனத்திலே ரெண்டு மூணு தடவை மாடுகளே விட்டுப் பயிரை அழிச்சிருக்காரு. இதைப்பத்தி தொண்டர்கள் எங்கிட்ட பல தடவை சொன்னுங்க.



நேத்து நானே போயிருந்தேன். அப்பவும் மருதப்பன் மாடுகளே நெட்டியிலே விட்டுப் போட்டு வரப்பு மேலே உட்கார்ந்திருந்தாரு. ஏன்னு கேட்டப்ப பதில் சொல்லாம கண்டபடி பேசிக்கிட்டு கம்பை எடுத்து அடிக்க வர்ராரு! இதுக்கு ஒரு முடிவு செய்யலேன்னு தொண்டர் படையிலேயிருந்து இந்த நெட்டியைக் காவந்து செய்யிறதிலே அர்த்தமே இல்லிங்க.

நாட்டாமை : அதைத் தானே கேட்கப் போறேம் ! (மருதப்பனின் பக்கம் திரும்பி) ஏலே கோணங்கிப்பயலே ! இதுக்கு என்னடா சொல்றே ? நல்ல முறையிலே நாலு பேருக்கு மத்தியிலே குடி இருக்கணும்ன்னு நினேக்கிறியா இல்லேயா ?

மருதப்பன் : (எழுந்து பணிவோடு-தலேத் துணியை அவிழ்த்து நாட்டாமைக்கு முன்னல் வைத்து வணங்கி எடுத்து) கிராமத்தைக் கும்பிட்டு சொல்றேனுங்க. நேத்து இந்தத் தம்பி காவலுக்கு வந்தப்ப நான் கண்மாய்க்கரையிலே குந்திக்கிட்டிருந்தேன். என்னுடை மாடுக நெட்டியிலே மேயவுமில்லே-நான் இவனே அடிக்கிறதுக்கு கம்பை ஓங்கவும் இல்லிங்க. எனக்குப் பிடிக்காதவங்களா சேர்ந்து இட்டுக் கட்டி சொல்ற கதைங்க இது.

ரெங்கன் : வீட்டுக்குக் கூட ராத்திரி நேரத்திலே நெட்டியைத் தலே சுமையா அறுத்திக்கிட்டு வந்ததைக்கூட ஆள் பார்த்திருக்கு!

மருதப்பன் : மாரியத்தா! நீயே கேளு. இந்த மாதிரி பொய்யும் புரட்டும் சொல்லிட்டா; நான் ஒண்ணும் அசந்திடமாட்டேன், சும்மா நாலு பேரு கால் சட்டையும் கை சட்டையும் போட்டுக்கிட்டுநிண்ணுட்டா என்ன வேணும்னு லும் மரியாதை இல்லாம பேசிப்போடலாமா? பேசிப் பாருங்க. ஊர் கூட்டத்துக்கே வந்தாச்சு; இதுக்கு மேலே தலேக்கு மேலே வெள்ளம்...சாண் போனு என்ன முழம்போனு என்ன?

சவரிமுத்து : ஆமா, இவரு பெரிய சண்டியரு. கிராமத்தையே புரட்டிப்போடுவாரு! கிராமத்துக்குள்ளே அடிதடி இருக்கப்படாதுன்னு பாக்குறோம். இல்லேயின்னு தூக்கிப்போட்டு சொட்டையை முறிச்சுப்போடுவோம்.

மருதப்பன் : சும்மா இருடா சவ்வாரிமுத்து, சொட்டையை முறிச்சுப் போடுவானுமில்ல, கோழிக்குஞ்சின்னு பாத்தே! அப்படி நினைச்சு கிட்ட நெருங்காதே; மண்டை பிளந்துபோகும்.

நாட்டாமை : (கோபத்தோடு) ஏலே, மருதப்பா ஏது ரொம்ப மிஞ்சிப்போறுப்பிலே இருக்கு. மரியாதையா கிராமத்தை மதிச்சு பதில் சொல்லு. இல்லேயின்னு போலீசிலே தள்ளி விட்டு முதுகுத் தோலை உரிக்கச் சொல்லுவேன். உன் மாமன் அந்தப் பட்டாளத்து முத்தையாவுக்காகப் பாக்குறோம், ஆமா!

மருதப்பன் ; எல்லாருமா சேர்ந்துக்கிட்டு என்னைத் தொலைச்சிப்போடணும்ன்னு நினைக்கிறீங்க? கொத்தவரங்காயிக்கு காலும் தலையும் முளைச்ச மாதிரி இந்த சவ்வாரிமுத்து சொன்னதைக் கேட்டிங்களா? சொட்டையை முறிச்சுப்போடுவானுமில்ல, அதையும் பார்த்துப் போடுவோம்.

நாட்டாமை : அட அறிவு கெட்ட பயலே! நாலு பேரைப்போல நாணயமா நல்லா இருக்கணும்ன்னு நினைச்சால்ல உனக்கு நல்ல புத்தி வரப்போகுது. தொண்டர் படையின்னு உங்க வீட்டு கிள்ளுக்கீரையின்னு நினைச்சே- கேளுடா மடையா. இந்த தொண்டர் படை எல்லா பஞ்சாயத்துக்களிலேயும் நிரந்தரமா இருக்கப் போகுது. சம்சாரிகளோட சொத்து சுகம் அத்தனையும் காப்பாத்திக் கொடுக்கவேண்டிய பொறுப்பு தொண்டர் படைக்கு இருக்கு. கிராமத்துக்கு வேண்டிய எல்லாக் காரியங்களிலேயும் தலையிட்டு நல்லதைச் செய்வாங்க. அவங்களோட ஒத்துழைக்கபோறதை விட்டுட்டு அவங்க கடமை என்னன்னு புரிஞ்சுக்காம- அழிம்பு பண்ணி ஏண்டா அழிவைத் தேடிக்கிறே இப்பச் சொல்லு! நெட்டியிலே மாடுகளைவிட்டு மேய்ச்சது மெய்தானடா? எத்தனையோ சாட்சி இருக்கு, சாட்சிகளெல்லாம் விசாரிச்சுக்கிட்டிருக்க தேவையில்லேன்னு நினைக்கிறேன்.

மருதப்பன் : வரப்போரமா கையிலே பிடிச்சு மாடுகளை மேய்ச்சுக்கிட்டிருந்தது உண்மை தாங்க. நாலு பேரு சொல்றதை வச்சு நீங்க தான் கோபப்படுறீங்க.

நாட்டாமை ; அதுக்கு மேலேயும் ரங்கன் கிட்ட கலகம் செய்திருக்கே. அதனாலே இந்தக் கிராமம் விதிக்கிற தண்டனைக்கு நீ உள்ளாகணும். முறி......வை.

(மருதப்பன் தயங்குகிறான்)

நாட்டாமை ; முறி வைக்க மனசில்லையா? அப்ப நீ இங்கே நிக்கவேண்டிய அவசியமில்லே, கிராமத்திலே இதுக்கு நாங்களே முடிவு எடுத்துக்கிறோம்.

மருதப்பன் : நீங்க பாத்து இப்படிச் சொல்றப்ப நான் என்னங்க சொல்லப்போறேன். என்னமோ செய்யுங்க (பக்கத்திலிருந்த குச்சியை முறித்து நாட்டாமையின் முன்னால் வைத்து) முறி வைச்சிட்டேனுங்க.

நாட்டாமை ; இப்ப எல்லாரும் கேளுங்க. தொண்டர்படை கட்டுக்காவலையும் மீறி இந்த மருதப்பன் நெட்டிப் பயிரிலே மாடுகளைவிட்டு மேய்ச்சதுக்கும் அடாதுடியா பேசினதுக்கும் நம்ம கிராமத்து முகாமையிலே அம்பது ரூபாய் அபராதம் போடுறேன். நாளைக்கி கஞ்சிப்பொழுதுக்குள்ளே இந்த அபராதத் தொகையைக் கட்டிப்போடணும்.

மருதப்பன் ; (கும்பிட்டு விழுந்து) அவ்வளவுக்குத் தாங்காது, சுமக்கத்தக்கனே போடுங்க.

சவரிமுத்து ; அதெல்லாம் பாவலா போடுறான். கிராமத்தை மதியாம செய்த காரியம். நீங்க குறைக்காதீங்க நாட்டாமைக்காரய்யா.

மருதப்பன் : ஏலே பொறம்போக்குப் பயலே, போற காலம் நெருங்கிப்போச்சு. ஒழுங்கா நடந்துக்கோ சவ்வாரிமுத்து.

நாட்டாமை : அதுக்குள்ளே மறுபடியும் என்னடா சத்தம், இனிமேலாவது வம்புதும்பு இல்லாம புத்தியா பிழைச்சுக்கோ, மூப்பது ரூபா போடுறேன். கொண்டாந்து கட்டிப்போடு.

மருதப்பன் : (மறுபடியும் கும்பிட்டு விழுந்து) அவ்வளவு பணம் இந்த நேரத்திலே ஏதுங்க கட்டணும்மில்ல, குறைச்சுச் சொல்லுங்க.

நாட்டமை : ஏலே இதுக்கு மேலே வேறே பேச்சில்லே. ஒரே முடிவு இருபது ரூபாய் போட்டிருக்கேன், கட்டிப்போட்டு, பதினெட்டாம் படி கருப்பசாமி கோயிலுக்கு நாலு தேங்காய் உடைச்சுப்போடு.

சவரிமுத்து : ரொம்ப குறைச்சிட்டீங்க நாட்டாமைக்காரய்யா.

மருதப்பன் : நீ சும்மா இருடா சவ்வாரிமுத்து.

[காட்சி முடிவு]

(தொடரும்)

# இரண்டாயிரம் பொருள்களை

விவசாயிகளுக்கு

## நியாய விலையில் வழங்கும்

## கூட்டுறவுச் சங்கம்

மைசூர் மாநிலம் மண்டியா தாலுகாவைச் சேர்ந்த விவசாயிகள், இடைத் தரகர்களான வியாபாரிகளின் சுரண்டலிலிருந்து அறவே விடுதலை பெற்று விட்டார்கள். விவசாயிகள் ஒன்று சேர்ந்து, பலம் பொருந்திய கூட்டுறவுச் சங்கம் ஒன்றை அமைத்ததன் மூலம், இந்த நிரந்தர நிவாரணம் கிடைத்திருக்கிறது. இப்போது, விவசாயிகள் தாங்கள் உற்பத்தி செய்யும் பொருட்களை எல்லாம், இச் சங்கத்தின் மூலமே விற்பதால், அவர்களுக்கு நல்ல விலை கிடைக்கிறது. அது மட்டுமல்ல, தங்களுக்குத் தேவையான பற்பல பொருட்களையும், சங்கத்தின் மூலம் நியாய விலையில் பெறுகிறார்கள்.

### 17 ஆண்டுகளுக்கு முன்

இந்த அரிய சேவை செய்து வரும் சங்கம் சுமார் 17 ஆண்டுகளுக்கு முன் ஆரம்பிக்கப்பட்டது. 'மண்டியா விவசாயிகள் வேளாண்மைப் பொருள் கூட்டுறவு விற்பனைச் சங்கம்' என்பது அதன் பெயர். பொருட்களின் அவ்வப்போது பற்றாக்குறை ஏற்படுவதும், விலைகள் உயர்வதும், இடைத்தரகர்களான வியாபாரிகளால்தான் என்பதை மண்டியா விவசாயிகள் உணர்ந்தனர். எனவே தங்கள் நிலை சீர்பட ஒரே வழி வியாபாரிகளுக்கு இடந்தராமல், தங்கள் பொருட்களைத் தாங்களே விற்பனை செய்து கொள்வதுதான் என முடிவு செய்தனர். அந்த முடிவின் விளைவாக, சில முன்னணி விவசாயிகளின் முயற்சியின் பயனாக, விவசாயிகள் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் ஒன்று 1948-ல் உருவாயிற்று. அது, தன் அலுவல் வரம்பாக, மண்டியா தாலுகா முழுமையும் கொண்டிருந்தது. பிறகு, இச் சங்கம் விவசாயிகளின் பொருட்களை நல்ல விலையில் விற்றுத் தருவதும், நெல்லை அரிசியாகக் குத்துவது, வேர்க்கடலையை எண்ணெய்யாக ஆட்டுவதுமான பணிகள் மேற்கொண்டது. அதையொட்டி சங்கத்தின் பெயர், மண்டியா விவசாயிகள் வேளாண்மைப் பொருள் கூட்டுறவு விற்பனைச் சங்கம் என மாறியது.

### முக்கிய இலட்சியங்கள்

சங்கம், தன் ஆரம்ப நாட்களிலேயே சில முக்கிய இலட்சியங்களை மேற்கொண்டது. குறிப்பாக, விவசாயிகள் உற்பத்தி செய்யும் பொருட்களுக்கெல்லாம் நல்ல விலை கிடைக்கச் செய்வதும், விவசாயிகளுக்குத் தேவையான '' எல்லாப் பொருட்களையும் '' நியாய விலையில் பெற்றுத் தருவதும் பிரதான இலட்சியங்கள். இந்த இலட்சியப் பிடிப்போடு பணியாற்றி வரும் சங்கம், குறுகிய காலத்திற்குள் பொருட்களை விவசாயிகளுக்கு வழங்கும் பொறுப்பினை, அதிசயிக்கத்தக்க முறையில் நிறைவேற்றி வருகிறது. விவசாயிகளுக்குத் தேவையான எல்லா விவசாயக் கருவிகளையும், பூச்சி மருந்துகள், ரசாயன உரம், பொறுக்கு விதை போன்றவற்றையும் மற்றும் இரும்பு உருக்கு சாமான்கள், சிமெண்டு, துணி, சர்க்கரை, உப்பு, மண்ணெண்ணெய்—இப்படி வெவ்வேறு விதமான 2,000 பொருட்களைச் சங்கம் நியாய விலையில், வழங்கி வருகிறது.

இத்தகைய பொருட்களையெல்லாம், அதனதன் உற்பத்தியாளர்களிடமிருந்தே சங்கம் வாங்குகிறது. ஆகையால், நடுத்தரகர்கள் (வியாபாரிகளின்) இலாபவேட்டைக்கு இடம் இல்லாமல், பொருட்கள் குறைந்த விலையில் கிடைக்கின்றன. அதோடு விவசாயிகளுக்குத் தேவையான ரசாயன உரம் போன்ற பொருட்கள் போதிய அளவிலும், உரிய காலத்திலும் கிடைக்கின்றன. இது விவசாயிகளுக்கு மிகப் பெரிய நன்மையாகும்.

### கிளைச் சங்கங்கள்

இப்படி உற்பத்தியாளர்களிடமிருந்தே மொத்தமாக, பெருத்த அளவில் பொருட்களை வாங்கும் மண்டியா சங்கத்திற்கு, சில்லறை வியாபார ஏஜெண்டுகளாக அலுவல் புரிய கிராமங்களில் 40 சேவைக் கூட்டுறவுகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இதன்படி ஒவ்வொரு பஞ்சாயத்திலும் ஒரு சேவைச் சங்கம் இருக்கிறது. இவையன்றி 6 பெரிய சங்கங்களும் இருக்கின்றன. இவை விவசாயிகளுக்குத் தேவையான பொருட்களை சில்லரை வியாபார அளவில்—விநியோகம் செய்வது மட்டுமல்ல; சங்க உறுப்பினர்களுக்கு கடன்களும் தரப்படுகின்றன. இச்சங்கங்கள் மூலம் 1962—63-ல் ரூ. 19 லட்சம் கடன்கள் வழங்கப்பட்டன. ரசாயன உர வகைகள், 7,500 டன் அளவுக்கு விநியோகிக்கப்பட்டன.

### கிடங்கு வசதிகள்

விவசாயிகள் உற்பத்தி செய்யும் பொருட்களைக் கெடாமல் சேமித்து வைப்பதற்கான கிடங்கு வசதிகளையும், மண்டியா சங்கம்

செய்து கொடுத்திருக்கிறது. இந்த வகையில் 50 சிறிய கிடங்குகளும், 7 பெரிய கிடங்குகளும் கட்டப்பட்டுள்ளன. 1962–63-ல் விவசாயிகளுக்குச் சொந்தமான 50 ஆயிரம் குவிண்டல் நெல்லும், 25 ஆயிரம் குவிண்டல் வேர்க்கடலையும் சேமித்து வைக்க கிடங்கு வசதி தரப்பட்டது.

விவசாயிகளுக்கு அதிக வருவாய் கிடைக்கச் செய்வதே சங்கத்தின் விருப்பம். ஆகையால் விவசாயப் பொருட்களை அப்படியே விற்பதற்குப் பதிலாக, மக்களுக்கு உடனடியாக உபயோகமாகும் பண்டங்களாக மாற்றும் பணியையும் மேற்கொண்டது. இந்த வகையில் அரிசி மில்களும் நிறுவப்பட்டன. இவற்றிற்கான கட்டிடங்கள் கட்டுவது, இயந்திரங்களை வாங்கிப் பொருத்துவது, உலர்த்தும் திடல்கள் அமைப்பது போன்றவற்றிற்காக, சங்கம் ரூ. 5 லட்சம் மூலதனச் செலவு செய்தது.

சேவைகள் பற்பல

சங்கத்திற்குச் சொந்தமாக, ஏழு போக்குவரத்து வாகனங்கள் இருக்கின்றன. பொறுக்கு விதைகள், ரசாயன உரங்கள், விவசாயக் கருவிகள் முதலியவற்றைக் கிராமச் சங்கங்களுக்கு ஏற்றிச் செல்லவும், கிராமங்களிலிருந்து கிடங்கு உள்ள இடங்களுக்கு விவசாயப் பொருட்களை ஏற்றிச் செல்லவும், இந்த வாகனங்கள் பயன்படுகின்றன.

விலைவாசி நிலவரத்தை விவசாய மக்கள் அவ்வப்போது அறிந்து கொள்வதற்கும் சங்கம் ஏற்பாடு செய்கிறது. மைசூர், சன்னபத்ரா ஆகிய இடங்களிலுள்ள ஒழுங்கு மார்க்கெட்டுகளிலிருந்து ஏல விலைகளைக் கேட்டறிந்து, அவற்றின் பட்டியல் தயாரித்து, அதைத் தபால் மூலம் தினசரி கிராமச் சங்கங்களுக்கு அனுப்பி, அச்சங்கங்கள் மூலம் விவசாயிகள் தெரிந்து கொள்ள வழி செய்யப்படுகிறது.

அதிக நிலம் உள்ளவர்கள், தங்கள் மாசூலைச் சேமித்து வைத்து, நல்ல விலை வரும் போது விற்பதற்குச் சௌகரியமாக கிடங்கு வசதி செய்யப்பட்டிருக்கிறது என்றால், குறைந்த நிலம் உள்ளவர்கள் தங்கள் மாசூலை உடனே விற்றுப் பணம் பெறுவதற்கும் சங்கம் உதவுகிறது. அதாவது, அத்தகையவர்களின் உற்பத்திப் பொருட்களைச் சங்கமே பணம் கொடுத்து வாங்கிக் கொள்கிறது. இவ்வாறு 1962-63-ல் சிறிய விவசாயிகளிடம் இருந்து 30,000 மூட்டை நெல் வாங்கப்பட்டது. அதேபோல் வேர்க்கடலையும் கொள்முதல் செய்யப்பட்டு, சங்கத்தின் மில்களில் பருப்பாக உடைக்கப்பட்டு, எண்ணெய் ஆட்டப்படுகிறது. இவ்வகையில் 300 டன் வேர்க்கடலை எண்ணெய், அரசாங்க வர்த்தகக் கார்ப்பரேஷனுக்கு, மாண்டியா சங்கத்தால் வழங்கப்பட்டது.

விவசாயக் கருவிகள் உற்பத்தித் திட்டம்

தாலுகாவில் உள்ள விவசாயிகளுக்குத் தேவையான எல்லா விவசாயக் கருவிகளையும், தானே உற்பத்திச் செய்ய சங்கம் ஆவல் கொண்டு, திட்டமிட்டுச் செயலாற்றவும் தொடங்கியிருக்கிறது. எல்லா வசதிகளோடும் கூடிய தொழிற்சாலை ஒன்றை நிறுவியிருக்கிறது. இப்போது அங்கு இயந்திரக் கலப்பை, பரம் படிக்கும் பலகை, விதைத் தெளிப்புக் கருவி, தழைமிதி யந்திரம், களை பறிக்கும் கருவி, வரப்பு மடிக்கும் கருவி முதலியவை செய்யப்படுகின்றன. சிறிய டிராக்டர்கள் உற்பத்தி செய்யும் எதிர்கால திட்டங்களில் ஒன்றாகும். 1962–63-ம் ஆண்டில், ரூ. 92,000 மதிப்புள்ள விவசாயக் கருவிகள் செய்யப்பட்டு விவசாயிகளுக்கு விநியோகிக்கப்பட்டன.

நிலத்திற்கேற்ப உரக்கலவை

நிலத்திற்குத் தேவையான எல்லா சத்துக்களும் உரிய அளவில் கிடைக்கச் செய்வதற்காக, பற்பல பயிர்களுக்கும் ஏற்ற மாதிரியில் ரசாயனக் கலப்பு உரங்களைத் தயாரிக்கும் வேலையிலும் சங்கம் இறங்கியிருக்கிறது. விவசாய இலாகா குறிக்கும் நிர்ணய அளவுக்கு ஏற்ப இந்தக் கலப்பு உரங்கள் தயாரிக்கப்படுகின்றன. 1962-63-ல் இந்த உர வகைகள் 5,000 டன் அளவுக்குத் தயாரிக்கப்பட்டன. எந்தெந்தக் கலப்பு உரத்தை, எந்தெந்தப் பயிருக்கு, எப்படி உபயோகிப்பது என்பதை விவசாயிகள் தெரிந்து கொள்ளும் பொருட்டு, செய்முறை காட்சிகள், ஆங்காங்கு சங்கத்தின் சார்பில் நடத்தப்படுகின்றன.

விவசாயிகள், தங்களுக்கு வீடுகள், மாட்டுக் கொட்டகைகள் கட்டிக் கொள்வதற்காகச் சங்கம், சிமெண்டு, இரும்பு, துத்தநாகத் தகடுகள் முதலிய கட்டுமானச் சாமான்களை நியாய விலையில் வழங்குகிறது.

சமூக நலப் பணிகள்

சமூகநலப் பணிகளிலும் சங்கம் முக்கிய பங்காற்றி வருகிறது. மண்டியா தாலுகாவில் மாணவர்களின் உபயோகத்திற்கான பொது விடுதி ஒன்று நிர்மாணிப்பதில் சங்கம் உதவி அளித்தது. கிராமப்புறங்களில் குழந்தை பராமரிப்பு நிலையங்களுக்கு உதவவும் சங்கம் திட்டமிட்டிருக்கிறது. தாலுகா போர்டு ஒத்துழைப்புடன், இந்த நிலையங்களுக்கான கட்டிடம் கட்டும் வேலைக்கு ரூ. 1,500 நன்கொடை தரப்படவிருக்கிறது. இத்தகைய உதவிகளுக்கென, சங்கம் தன் லாபத்திலிருந்து ரூ. 16,000-ஐ தருமநிதியாக ஒதுக்கியிருக்கிறது. இதன்றி கணிசமான நன்கொடை ஒன்றையும் சங்கம் வழங்கியிருப்பது குறிப்பிடத்தக்கதாகும். மண்டியாவில் ஒரு பொறியியல் கல்லூரி நிறுவுவதற்காக ரூ. 30,000 தந்துதவியது. மண்டியா ஒரு மாவட்ட

(அடுத்தப் பக்கம் பார்க்க)

கிராம மக்கள், கூட்டு முயற்சியால் தங்கள் நிலையை உயர்த்திக்கொள்ள முடியும், 'தடைக்கற்கள்' இடையில் குறுக்கிட்டாலும் அவற்றைக் கடந்துசென்று காரியம் சாதிக்க முடியும் என்பதற்கு, ஆந்திரப்பிரதேசம் குண்டூர் மாவட்டத்தைச் சேர்ந்த டங்குட்டூர் என்ற சிறு கிராமம், ஒரு வழிகாட்டியாய்த் திகழ்கிறது.

# வரண்ட நிலம் வாழ்வளிக்கிறது

டங்குட்டூர் கிராம மக்களில் மிகப் பெரும் பாலோர் விவசாயிகள். அவர்களது நிலங்கள் பாசன வசதியில்லாமல் வரண்டு கிடக்கும். அவற்றில் புகையிலை தவிர, நெல் போன்ற நன்செய்ப் பயிர்களைச் சாகுபடி செய்ய முடியாது, இந்த நிலையில் அவர்கள் வாழ்க்கை நடத்துவதே பெரும் பிரச்னையாக இருந்தது. அவர்கள் ஊருக்குப் பக்கத்தில் 'முஸி' நதி ஓடுகிறது. ஆனால் அந்த நதியினால் விவசாயிகளுக்கு நன்மை எற்படுவதற்கு பதிலாகத் தீமைதான் அடிக்கடி நேரிடும். மழைக் காலத்தில் நதியின் வெள்ளம், நிலங்களில் புகுந்து நாசம் விளைவிக்கும். அதோடு, நதியின் போக்கு ஆண்டுதோறும் மாறிக் கொண்டிருப்பதால் நிலங்களில் மண் அரிப்பு, பெரிய அளவில் நேரிட்டு வந்தது, கோடைக் காலத்தில், கடலிலிருந்து நிலத்தை நோக்கிப் பாயும் உப்பங்கழித் தண்ணீர், ஆற்றில் கலப்பதால், நதியிலும் தண்ணீர் உப்பாகி விடுகிறது.

### எத்தனை தொல்லைகள்

சில ஆண்டுகளுக்கு முன் வரை, இதுதான், டங்குட்டூர் மக்களின் பரிதாப நிலை. இதற்கு முற்றுப்புள்ளி வைக்க அவர்கள் முடிவு செய்தார்கள் விவசாய நிலங்களுக்கு, பயிர் ஏற்றும் காலத்தில், தண்ணீர் இல்லாமை, புகையிலை போன்றதொரு புஞ்சைப் பயிர் வளர்ந்திருக்கிற நேரத்தில் நிலங்களில் வெள்ளம் புகுதல், மற்றும் மண் அரிப்பு, ஆற்றுநீர் உப்பாக மாறுவது இப்படி எத்தனை தொல்லைகளை, எத்தனை காலத்திற்கு அவர்கள் பொறுத்துக்கொள்ள முடியும்? ஆற்று வெள்ளம் நுழையும் பக்கம் உயரமான வரப்பு எழுப்பினால் வெள்ள நீரைத் தடுத்துவிடலாம் என்றும், அதே போல் நதியின் ஓட்டப் போக்கு மாறாதபடி செய்யமுடிந்தால் மண் அரிப்பு இராது என்றும், அவர்கள் உணர்ந்தனர்.

இத்தகைய பணிகளைச் செய்து முடித்து, ஆற்றிலிருந்து இரைவை நீர்ப்பாசனத்திற்கு வழி செய்யவேண்டும் என்ற நோக்கத்தில் டங்குட்டூர் நீர்ப்பாசன கூட்டுறவுச் சங்கம் அமைக்கப்பட்டது. அச் சங்கம் 1961 நவம்பரில் பதிவாயிற்று. ஆற்றுப் பாசன ஆயக்கட்டில் உள்ள விவசாயிகள் 80 பேர் மட்டும், சங்க உறுப்பினராகச் சேர்த்துக்கொள்ளப் பட்டனர். இந்த உறுப்பினர்கள் தங்கள் பங்கு மூலதனமாக ரூ. 980 செலுத்தினர்.

### முயற்சிக்கு முட்டுக்கட்டை

ஆற்றோர நிலங்கள் பெரும்பாலும், ஆற்று மட்டத்திலிருந்து 15 அடி உயரத்தில் இருந்தன. அந்த அளவு உயரத்திற்கு, தண்ணீரை இரைப்பது ஒரு பிரச்சினையாக இருந்தது. எனவே பம்பு செட்டுகளைப் பொருத்துவது அவசியமாயிற்று. மேலும் இன்னொரு சங்கடம் என்னவென்றால், இந்த நிலங்கள் ஒன்றன் பக்கம் ஒன்றாகச் சேர்ந்து இருக்கவில்லை. அவற்றிற்கு நடுவே குண்டூர்—சென்னை நெடுஞ்சாலை செல்கிறது. ஆகையால் இந்த சாலைக்குக் குறுக்காக, பெரிய தண்ணீர்க் குழாய் பொருத்தி, நிலங்களுக்குப் பாசன இணைப்புத் தரும்படி நேரிட்டது. அதே போல், சென்னை—விஜயவாடா ரயில் பாதையையும் கடக்கவேண்டியிருந்தது.

(முன் பக்கத் தொடர்ச்சி.)

தலைமைப் பட்டணம். ஆகையால் அங்கு அடிக்கடி வரும் கிராம விவசாயிகளின் தங்கும் வசதிக்காக, விருந்தினர் விடுதி ஒன்றையும் சங்கம் நடத்தி வருகிறது.

இத்தகைய அரும்பெரும் சாதனைகளை, இச்சங்கம் செய்து வருகிறதென்றால், அதற்குக் காரணம் சங்கத்தை நிர்வகிப்பவர்கள் பொதுச்சேவைப் பண்புடன், திறமையுடன் செயலாற்றி வருவது தான். மாண்டியா சங்கம், மைசூரில் மட்டுமல்ல, நாட்டிலுள்ள ஏனைய கூட்டுறவுச் சங்கங்களுக்கு ஒரு முன் மாதிரியாகத் திகழ்கிறது. இந்தச் சிறப்பான பணியின்மூலம், மக்கள் செல்வ வள வாழ்வுக்குக் கூட்டுறவு சிறந்த முறை என்பதும் மெய்ப்பிக்கப்படுகிறது.

இந்தத் தடங்கல்கள் ஒரு புறமிருக்க, பம்புசெட்டுகளை இயக்க, மின்சார சப்ளை பெறுவதே பெரும் பிரச்னையாகி விட்டது. இது சம்பந்தமாக, ஆந்திரப் பிரதேச மின்சார இலாகாவை அணுகியபோது, துணை மின்சார நிலையம் (Sub-station) ஒன்று நிறுவி, மின்சார கம்பிகள் இழுக்கவும் ரூ. 56,000 வரை செலவாகும் என்றும், இந்த தொகையை டிபாசிட்டாகச் செலுத்தியாக வேண்டும் என்றும் மின்சார இலாகா கூறியது. நெடுஞ்சாலைக்குக் குறுக்காக, நீர்க்குழாய்களைப் பொருத்த, நெடுஞ்சாலை இலாகாவின் அனுமதியைப் பெற ரூ. 10,000 பணம் செலுத்த வேண்டியதாயிற்று. இவ்வாறு 'மூஸி' நதியிலிருந்து இரைவை நீர்ப்பாசனம் செய்யும் திட்டத்தைச் செயல்படுத்த மொத்தம் ரூ. 1,20,000 நிதி திரட்டியாக வேண்டும் எனத் தெரிந்தது. இது ஒரு மிகப் பெரிய சவாலாக இருந்தது. எனினும், டங்குட்டூர் மக்கள், நெருக்கடியை ஏற்றுச் சமாளிக்கத் தயாராகி, முன்வைத்த காலைப் பின்வாங்காமல் உறுதியுடன் இருந்தனர்.

### செலவை ஏற்க பங்கு மூலதனம்

மொத்த ஆயக்கட்டு அடிப்படையில் ஒரு ஈவு கணக்கு போடப்பட்டு, உறுப்பினர்கள் தங்கள் நிலத்தின் அளவிற்கு ஏற்ப, ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 400 வீதம் முதலீடு போட்டனர். பாசனத் திட்டம், விவசாய உற்பத்தியைப் பெருக்கும் நோக்கத்தைக் கொண்டதாகையால், டங்குட்டூர் சங்க உறுப்பினர்களுக்குத் தனித்தனியாக கடன்கள் வழங்க ஓங்கோல் நில அடமான பாங்கு சம்மதம் தந்தது. அதன்படி உறுப்பினர்களுக்கு அனுமதிக்கப் பட்ட கடன்களின் மொத்தத் தொகை சங்கத்திடம் ஒப்படைக்கப்பட்டது. பிறகு, ஆந்திரப் பிரதேச மின்சார போர்டும் தன்னாலியன்ற உதவியைச் சங்கத்திற்கு அளிக்க முன்வந்தது. ரூ. 56,000 முன் பணம் கட்ட வேண்டும் என்ற நிபந்தனையைக் கைவிட்டு, வேறு எளிய நிபந்தனை விதித்தது. அதாவது, சங்க உறுப்பினர்களான விவசாயிகள் ஆண்டு ஒன்றுக்கு குறைந்த பட்சம் ரூ. 3,400 அளவுக்கு மின்சாரம் உபயோகிக்க வேண்டும் எனப் போர்டு கூறியது. இந்தச் சலுகையால் மிச்சப்படும் முன்பணத் தொகையை சங்கம், நில மீட்சி, குழாய் அமைத்தல் போன்ற வேலைகளுக்குப் பயன்படுத்திக் கொள்ள வசதி தரப்பட்டது.

மின்சார மோட்டார்களை வரவழைத்த சங்கம் ஆற்றோரமாக மூன்று இடங்களில் நான்கு பம்பு செட்டுக்களை அமைத்தது. சென்னை செல்லும் நெடுஞ்சாலைக்கு மேற்குப்புறமாக 20 குதிரை ஒட்டச் சக்தியுள்ள 2 மோட்டார்கள் ஒரே கொட்டகையில் நிறுவப்பட்டன. இவற்றின் பயனாக, இப்போது 150 ஏக்கர்கள் பாசனம் பெறுகின்றன. ரயில் பாதைக்குக் கிழக்குப் புறமாக, இரண்டு பம்பு செட்டுகள் பொருத்தப்பட்டு, அதன் மூலம் 150 ஏக்கர்களுக்குப் பாசன வசதி கிடைத்திருக்கிறது. ஆற்றலிருந்து தண்ணீர் எடுக்கப்படும் இடத்திலிருந்து சுமார் 80 அடி தள்ளிய இடத்தில் 12 அடி விட்டமுள்ள பெரிய கிணறு ஒன்று எடுக்கப்பட்டது. இந்தக் கிணற்றுக்கு ஆற்று நீர் வரும்படியாக குழாய் அமைக்கப்பட்டது. நீர் இரைக்கப்படும் மற்ற இரு இடங்களில்—ஆற்றங்கரைக்கு, மழைக் காலத்தில் சேதம் ஏற்படாமல் தவிர்ப்பதற்காக, கரையிலிருந்து சற்று தள்ளி, இரு கிணறுகள் எடுக்கப்பட்டன. இந்தக் கிணறுகள் எல்லாம் எடுப்பதற்கு ரூ. 20,000 செலவாயிற்று அவற்றிலிருந்து சுமார் 6 பர்லாங் நீளத்திற்குப் பாசனக் கால்வாய்கள் வெட்ட சங்கம் ரூ. 10 ஆயிரம் செலவு செய்தது.

### வரட்சித் தாகம் தணிந்தது

வரட்சியின் தாகம் தணிந்ததுதான் தாமதம், உடனே, நன்றியுணர்வு மிக்க நிலங்கள், விவசாயிகளின் விருப்பத்திற்கு நல்ல மாசூல் கொடுக்கத் தொடங்கிவிட்டன. டங்குட்டூரில் நெல் சாகுபடி என்பது இயலாத காரியம் என்று தான், சில ஆண்டுகளுக்கு முன் வரை யாரும் நினைக்கும்படியாக இருந்தது. ஆனால் இன்றோ, எங்கு பார்த்தாலும் பசுமை நிரம்பிய நெல் வயல்கள் காட்சியளிக்கின்றன. நெல் மட்டுந்தானா! சோளம், புகையிலை, மிளகாய் முதலிய புஞ்சை தானியங்களும் பயிரிடப்படுகின்றன,

டங்குட்டூர், இப்போது செல்வ வளத்தை நோக்கி, நம்பிக்கையோடு முன்னேறுகிறது, திடமான உள்ள உறுதியும், சரியான தலைமையும் இருந்தால், இவ்வுலகில் சாதிக்க முடியாதது ஒன்றுமில்லை என்பதை டங்குட்டூர் மக்கள் செயல் முறையில் நிரூபித்துக் காட்டிவிட்டார்கள்.

---

### மீனள அபிவிருத்தியில் மகாராஷ்டிரா தீவிரம்

மாநிலத்தில் மீனள அபிவிருத்தி வேகத்தை அதிகப்படுத்துவதற்காக, மகாராஷ்டிர அரசாங்கம் விரைவுத் திட்டம் (Crash Programme) ஒன்றைத் தயாரித்திருக்கிறது.

அதன்படி மீனவர்களுக்கு இயந்திரப் படகுகளும், மீன் பிடிப்பதற்கான நவீன கருவிகளும் வழங்குவதோடு, அவர்களது உபயோகத்திற்காக உடனடி மார்க்கட்டுகளுக்கு அனுப்ப முடியாத மீன்களைக் கெடாமல் வைப்பதற்காக குளிர்பதன அறைகளைக் கட்டித் தரவும் நடவடிக்கைகள் எடுக்கப்படும். மீன் பிடிக்கும் தொழிலில், இந்தியாவிலேயே கேரளாவுக்கு அடுத்த இடத்தைப் பெற்றுள்ள மகாராஷ்டிரம், தனக்குள்ள 700 கிலோ மீட்டர் நீள கடற்கறையைப் பயன்படுத்தி மேலும் அபிவிருத்திகாண விரும்புகிறது.

# காப்பது காணீர்!



**1962-ம் ஆண்டு அக்டோபர் 20-ம் தேதியை இந்திய மக்கள் எவரும் மறக்க முடியாது. ஏனென்றால் அந்த நாளில்தான், வெகு காலமாக நண்பனைப்போல் நடித்து வந்த சீனா, தனது வேஷத்தை வெளிப்படுத்தி, நம் நாட்டின்மீது பகிரங்கமான ஆக்ரமிப்பைத் தொடங்கியது. அப்போது இந்திய மக்கள் அனைவரும் ஓரணியாகத் திரண்டு நின்று, சீனாவின் ஆக்ரமிப்பை முறியடிக்கும் முயற்சிகளில் இறங்கினர். அதன்பயனாக, சீனப் படைகள் பின்வாங்கி ஓடிவிட்டன. அதற்குப் பிறகு, நமது படைகள் இரவு பகல் என்று பாராது எந்நேரத்திலும் நமது எல்லைகளைக் காவல் புரிந்துகொண்டிருக்கின்றன. இது வடக்கிலும், வடமேற்கிலும் உள்ள நமது எல்லைப்புறப் பாதுகாப்பாகும்.**

இனி, நம் நாட்டின் மேற்கு, மற்றும் கிழக்கு எல்லைகளை மிகக் கவனிப்பாகக் கண்காணித்துப் பாதுகாக்க வேண்டிய கடமையும் நமது ராணுவ வீரர்களுக்கு ஏற்பட்டுள்ளது. இதற்குக் காரணம் பாகிஸ்தான் ஆகும். காஷ்மீர் தனக்குச் சொந்தமாக வேண்டுமென்று சொல்லிக் கொண்டு வருகிற பாகிஸ்தான், தொடர்ந்து நமது எல்லைகளில் தொல்லை கொடுத்து வருவதை அனைவரும் அறிவோம். காஷ்மீர் பகுதியில் பாகிஸ்தான் படைகள் அத்துமீறிப் பிரவேசிப்பதும், காஷ்மீர் மக்களைத் துன்புறுத்துவதும், பிறகு நமது படையினரைப் பார்த்து பயந்தோடி விடுவதும் ஏறக்குறைய அன்றாட நிகழ்ச்சிகளாக இருந்து வருகின்றன. இது இவ்வாறிருக்க, அண்மையில், பாகிஸ்தான், ஒரு புதிய-துணிச்சலான-ஆக்ரமிப்பில் இறங்கி இருக்கிறது. இந்தியப் பிரதேசமாகிய கட்ச் பகுதிக்குள் பாகிஸ்தான் படைகள் பிரவேசித்து வந்து, ஒரு சில காவல் நிலையங்களை ஏற்படுத்திக் கொண்டன. பிறகு இந்தியப் படையினர் மீது அங்கங்கே தாக்குதல்கள் நடத்தின. ஆனால் நமது படையினரின் எதிர்த்தாக்குதலைத் தாங்கிக்கொள்ளும் தைரியமில்லாமல், காவல் நிலையங்களைக் காலி செய்துகொண்டு பின்வாங்கி விட்டன. இப்போது என்னவென்றால், தான் காவல் நிலையம் அமைத்திருந்த பகுதிகள் தனக்குத்தான் சொந்தம் என்று விசித்திரமான வாதத்தில் பாகிஸ்தான் இறங்கியிருக்கிறது.

சிறிது காலத்துக்கு முன்பு கட்ச்—சிந்து எல்லைப் பகுதியில் பாகிஸ்தான் துருப்புகள் நடமாட்டம் சற்று அதிகமாக இருந்தது. இதைத் தொடர்ந்து இந்தியப் பகுதியாகிய கஞ்சர்கோட் என்னுமிடத்தைக் கைப்பற்றிக்கொண்டு அங்கே ஒரு காவல் நிலையம் அமைத்துக் கொண்டது. பிறகு, நமது எல்லைப்புறக்காவல் நிலையமாகிய சர்தார் போஸ்டை, ஏப்ரல் 9-ம் தேதி பயங்கரமாகத் தாக்கியது. இந்தத் தாக்குதலானது, முன்பே திட்டமிடப்பட்டு நடத்தப்பட்டது என்பதை இந்திய அரசாங்கம் சந்தேகத்துக்கிடமின்றி நிரூபித்திருக்கிறது. எப்படியென்றால் மார்ச் மாதத்திலேயே இதற்கான முன்னேற்பாடுகள் செய்யப்பட்டன என்றும், தாக்குதலைத் தொடங்கும்படி ஏப்ரல் 7-ம் தேதி உத்தரவு பிறப்பிக்கப் பட்டது என்றும். அதன்பிறகு ஏப்ரல் 9-ம் தேதி தாக்குதல் ஆரம்பிக்கப் பட்டது என்றும், பாகிஸ்தான் யுத்தக் கைதிகளே கூறியுள்ளனர்.

பாகிஸ்தானுக்கு எதிராக நமது ராணுவம் ஆவேசமுற்று எழுந்தது; பாகிஸ்தானின் தாக்குதலுக்குத் தகுந்த பதிலடி கொடுத்தது. இந்த ஒரு இடத்தில் மட்டுமின்றி எல்லைநெடுக பாகிஸ்தான் தனது தாக்குதலை விஸ்தரித்தது. ஏப்ரல் 26-ம் தேதி நமது காவல் நிலையங்களில் முக்கியமான ஒன்றாகிய பியாட்பெட் போஸ்ட் மீது, பயங்கரத் தாக்குதல் நடத்தப்பட்டது.

மொத்தத்தில், நியாயமான எல்லைக் கோட்டைத் தாண்டி, பாகிஸ்தான் படைகள், இந்திய மண்ணில், எட்டுமைல் தூரம் பிரவேசித்திருந்தன. பாகிஸ்தானின் கூற்றுப்படியே, இந்தப் பிரதேசம் ஒரு போதும் பாகிஸ்தான் வசம் இருந்ததில்லை. இருப்பினும், ஏதோ ஒரு சதி திட்டத்தோடுதான் அது இவ்வாறு செய்து வருகின்றது என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை.

ஆனால் ஒன்று மட்டும் நிச்சயம். பாகிஸ்தான் ஆகட்டும் அல்லது சீனா ஆகட்டும், இனிமேல் இந்திய எல்லைகளில் அத்துமீறிப் புகுந்து வாலாட்டுவது என்பது ஒரு போதும் முடியாத காரியம். ஏனென்றால் அஹிம்சை, சமாதானம், அமைதி வழி, ஆகிய வற்றில் அசையாத நம்பிக்கை கொண்டுள்ள நமது தலைவர்கள், தகராறுகளை பேச்சுவார்த்தைகளின் மூலமாகவேதான் தீர்த்துக் கொள்ள வேண்டும் என்று நினைத்து, அந்த ரீதியில் பணியாற்றி வருகிறார்கள். சீனா, பாகிஸ்தான் படைகளின் போர்த் தன்மையோடு கூடிய போக்கை அவர்கள் பொறுமையாகக் கண்காணித்து வருகின்றனர். ஆனால் பொறுமைக்கும் ஓர் எல்லை உண்டு அல்லவா?




# எல்லைப் பாதுகாப்பு

கட்ச் பகுதியில் அந்நிய ஆக்கிரமிப்பைத் தடுத்து நிறுத்துவதில், பாரதநாட்டு ராணுவம் உன்னிப்பாக இருக்கிறது.



படங்களை எடுத்து, அருஞ்செயலாற்றிய இந்திய விமானப் படை அதிகாரி யு. பார்பாரா (U. Barbara).



வடமேற்கு எல்லையில், ராஜஸ்தானை அடுத்த கட்ச் பகுதியில் பாகிஸ்தான் ராணுவ ஊடுருவல்—(மேலே) பாகிஸ்தான் 'டாங்கி'கள் இரண்டு, (கீழே) ஊடுருவி வந்த இன்னொரு டாங்கி. இவ்விரண்டும், ஊடுருவல் நடைபெற்ற அதே நேரத்தில், இந்திய விமானப் படையினரால் வானத்திலிருந்து எடுக்கப்பட்ட படங்கள்.





படம் 1.—வாழை நாரிலிருந்து கயிறு திரிக்கும் தொழில் பயிற்சி நிலையம். (காருண்யபுரம், வள்ளியூர் ப.யூ. திருநெல்வேலி மாவட்டம்.)

படம் 2.—திட்டமிடப்பட்ட வகையில், உருண வீடுகள் கொண்ட புதிய குடியிருப்பு (கூட்டப்புளி, வள்ளியூர் ப. யூ.)

படம் 4.—சாக்குக் குச்சிகள் தயாரிப்பில் பயிற்சி: சங்கனன்தளத்தில் மறவர் சமுதாய வளர்ச்சிக்காக, மர் நல இலாகா சார்பில் நடக்கும் பணி.

படம் 5.—புதிய விவசாய முறைகளில் ஆர்வம் காட்டும் இளைஞர் விவசாய சங்கம். (வெங்கடாசலபுரம், ஓட்டப்பிடாரம் ப. யூ.)








# தொழில் பல பெருக்கும் எழில் மிகு 'நெல்லை'




படம் 3.—கிராமங்களில் சாரணர் இயக்கம்— குருளையர் ஆசிரியர் பயிற்சி முகாம் (பத்மனேரி, களக்காடு ப. யூ.)

படம் 6.—பனைநாரிலிருந்து 'பிரஷ்கள் செய்யும் தொழில் பயிற்சி நிலையம் (திசையன்விளை, ராதாபுரம் ப. யூ.) அந்நியச் செலாவணி ஈட்டும் கிராமத் தொழில்களில் இதுவும் ஒன்று.








படம் 1.—க. டதூரில் உள்ள பனை ஓலைத் தொழில் பயிற்சி நிலையம். (ராதாபுரம் ப. யூ.)

படம் 2.—கயத்தார் கூடைமுடைவோர் கூட்டுறவு சங்கம். (ஹரிஜனங்களுக்காக).

படம் 3.—உடையார்குளம் — மழவராயநத்தம் கிராமங்களை இணைக்கும் இரண்டு மைல் சாலை உருவாகிறது. (ஆழ்வார் திரு நகரி ப. யூ.)



# வானமும் அழுததோ!

திரு காந்தி சீடன்

" தனிப்பட்ட ஒருவரின் எண்ணமும் செயலும் மட்டும் கீழ்நிலையி லிருக்கும் ஒரு சமுதாயத்தை உயர்வுபடுத்த அவ்வளவாக முடிவதில்லை" என்பதுதான் சித்தாந்தம். ஆனாலும், மக்களைப் பொதுநலப்பாதையில் செல்லுமாறு ஊக்கமும், உற்சாகமும் ஊட்டி, நாமும் அவர்களுக்குத் துணையாகச் செல்வோம் என்னும் புனித எண்ணம் கொண்ட எந்தத் தனியொருவரின் திட்டமும், செயலளவில் பரிணமித்து வெற்றி பெற முடியும்." இதுதான் கதையின் கருப்பொருள். கதையைப் படித்து முடித் ததும், அந்த கிராம மக்களோடு, வானம் மட்டுமல்ல, நமது நெஞ்சங் களும் சேர்ந்து அழுகின்றன.

—ஆசிரியர்.

அந்தி மங்கும் வேளை. இருட்கவிந்து வரும் வானத்தில் கரிய மேகக் கூட்டங்கள் குழுமிக்கிடந் தன. லேசாக மழை தூறிக்கொண்டிருந்தது.

கிராமச் சாலையில் மக்கள் கூட்டம் நிரம்பி நின்றது. மழையையோ, வாடைக்காற்றையோ அந்த மக்கள் கூட்டம் பொருட்படுத்தவில்லை. ஏதோ முக்கியமான செய்தியொன்றை ஆவலுடன் எதிர்பார்ப்பவர்கள் போல் கூடி நின்ற அனைவரது கண்களிலும் நீர்த்துளிகள் மல்கி நின்றன. பார்வை, இருண்டுவரும் நெடிய பாதையில், எட்டிய தூரம் வரை படிந்து கிடந்தது.

" அதோ யாரோ வருகின்றார்கள் !" கூட்டத்தில் நின்ற ஒருவர் கூவினார். கூட்டத்தினர் விழிகள் மிகமிக ஆவலுடன் சாலையை நோக்கின. அங்கு வெகு தூரத்தில் கன வேகத்துடன் ஒருவர் சைக் கிளில் வந்து கொண்டிருந்தார்,

' என்ன செய்தியோ?' பரபரக்கும் உள்ளத்துடன் மக்கள் நிலை குலைந்து நின்றனர். கூட்டத்தில் நின்ற பலர் சைக்கிளில் வருபவரை முந்திச்சென்று காண் பதற்காக முன்னேறினர்.

அடைமழையில் நனைந்து கனக்கும் உடைகளுடன் மூச்சு இரைக்க மிக மிகக் களைப்புடன் வந்திறங் கினார், சைக்கிளில் வந்தவர்.

"என்னப்பா? எப்படி இருக்கின்றார் ?" அளவுக்கு மீறிய கவலையுடன் கூட்டத்தில் நின்ற சிலர் வின வினர்.

" முந்திக்கு இப்போ கவலையில்லை; ஆனால் என்ன நடக்கும்னு யாரும் உறுதியா சொல்ல முடியாது. டாக்டர் எப்பவும் பக்கத்தில் இருந்து பார்த்துக் கொண்டேயிருக்கிறார். ஆனால், அவர்கூட திட்ட வட்டமா எதுவும் கூற முடியாதுன்னு திணறிக் கொண்டிருக்கிறார்!" கூற வந்த துயரச் செய்தியை மிகமிகச் சுருக்கமாகச் சொல்லி முடித்தார் அவர். கூட்டத்தினர் முகத்தில் சிந்தனை தேங்கியது. தத்தம் விசனக் கண்களை ஒருவர் மீது ஒருவர் படியவிட்டுக் கொண்டனர். யாரும் எதுவும் பேசவில்லை.

" ஒருவேளை நல்லதுபோல் கெட்டது நடந்து விட்டால்....?" அவர்கள் எண்ணங்கள் பற்பல திசைகளிலும் சென்று குழம்பிக்கொண்டிருந்தன.

புஞ்சையூர் நெல்லை மாவட்டத்தின் தென்பகுதி யில் மேற்குத் தொடர்ச்சி மலையடிவாரத்திலுள்ள ஒரு சிறு கிராமம். அதன் பெயர்தான் புஞ்சை யூரே தவிர, ஊரின் நான்கு புறங்களிலும் சூழ்ந் திருக்கும் நன்செய் நிலங்களும், வளங்கொழிக்கும் தோட்டங்களும் தோப்புக்களும் அச் செழுநிலத்தை ஒரு சொர்க்க பூமியெனக் காட்டி நின்றன. சுமார் பத்துப்பதினைந்து ஆண்டுகளுக்கு முன்புகூட வெற்று வளைகளும், தரிசு நிலங்களுமே உடையதாக இருந்த அந்தக் கிராமம், சமுதாய வளர்ச்சித் திட்டங்க ளால் படிப்படியாக முன்னேறி, இன்று முன்னேற்ற நிலைக்குச் சான்றாக விளங்குகின்றது.

அன்று ஒற்றுமை குறைந்து, சதா சண்டையும் சச்சரவுகளுமாக வாழ்ந்துவந்த மக்கள், சமீப காலத் தில் மிகமிக நேசமுள்ளவர்களாக, ஒருவருக்கொரு வர் உதவி செய்யும் நல்ல மனப்பான்மை படைத் தவர்களாகத் திகழுகின்றனர். தரிசு நிலங்களாகக் கிடந்தவற்றைத் தானியச் சுரங்கங்களாக ஆக்குவ தற்கும், ஒற்றுமை குன்றி, கட்சிகளாய்ப்பிரிந்து, அடிதடி சண்டை, போலீஸ் நிலையம், நீதிமன்றம்

என்று அலைந்து கொண்டிருந்த ஊர் மக்களை உறவு மனப்பான்மை கொண்டவர்களாக மாற்றுவதற்கும் உறுதுணையாக இருந்தவர்கள் யாவர்? சமுதாய நலத்திட்டங்களும், அவற்றைச் செவ்வனே செயல்படுத்தும் தொண்டர்களும்தாம் என்று பொதுவாகக் கூறிவிட்டாலும், அவற்றின் பிரதானப் பொறுப்பும் பெருமையும் இன்று மரணப்படுக்கையில் கிடக்கும் கிராமநல ஊழியர் முத்தையாவையே சாரும்.

தனிப்பட்ட ஒருவரின் எண்ணமும் செயலும் மட்டும், கீழ்நிலையிலிருக்கும் ஒரு சமுதாயத்தை உயர்வு படுத்த அவ்வளவாக முடிவதில்லை என்பது தான் சித்தாந்தம். ஆனாலும், மக்களைப் பொது நலப்பாதையில் செல்லுமாறு ஊக்கமும் உற்சாகமும் ஊட்டி, நாமும் அவர்களுக்குத் துணையாகச் செல்வோம் என்னும் புனித எண்ணம் கொண்ட எந்தத் தனியொருவரின் திட்டமும், செயலளவில் பரிணமித்து வெற்றிபெற முடியும் என்பதற்கு முத்தையா தன் முயற்சிகளால் ஈட்டிய முன்னேற்றங்களே சான்று,

முத்தையா தனது கிராமநல தொண்டிற்கான பயிற்சிகள் முடிந்தவுடன், முதன் முதலாக வேலையில் சேர்ந்தது அந்த ஊரில் தான். அவர் பிறந்து வளர்ந்து படித்ததெல்லாம் நகரத்திலாதலால், கிராம வாழ்க்கை எப்படி எப்படி இருக்குமோ என்று அவருக்கு முதலில் அச்ச உணர்வுகள் தோன்றியதுண்டு. அவற்றை அதிகப்படுத்தி அதைரியமூட்டுவது போல் ஆரம்ப காலத்தில் அந்தக் கிராமத்தில் ஏற்பட்ட சிற்சில சம்பவங்கள் அவரை நிலை கலங்க வைத்தன.

முத்தையா வேலையில் சேர்ந்த முதல் நாள், அவருக்கு முன், அந்தக் கிராமத்தில் பணியிலிருந்த கிராமநல ஊழியர், அந்த ஊர் மக்கள் அனைவரும் முரடர்கள் என்றும், நல்லது சொன்னாலும் அசட்டை தான் செய்வார்கள் என்றும் கூறி, அவரை மிகவும் கவனமாக இருக்கும்படியாக எச்சரிக்கை செய்திருந்தார். அவரது கூற்றை நம்ப வைக்கும் வகையிலேயே ஊர்மக்கள் நடந்து கொண்ட விதமும் இருந்தது. முத்தையா, தன்னை கிராமத்தில் புதிதாக வந்திருக்கும் தொண்டர் என்ற முறையில் மக்களுக்கு அறிமுகப்படுத்திக் கொண்டபோது, அவர்கள் பார்த்த ஏளனப்பார்வையும், பேசிய விதமும் உள்ளத்தை வருத்துவதாக இருந்தன.



"கிராமநல ஊழியராம்! இவர் வந்துதான் ஊரை உருப்படியாக்கப் போகிறார்; வெறும் தண்டச் சம்பளம்!" என்று முத்தையாவின் முன்னிலையிலேயே காது கேட்கவே, இழித்து உரைத்தவர்களும் உண்டு. அது அவருக்குப் புது அனுபவம். கிராம நல ஊழியர்கள் என்றால், மக்கள் அனைவரும் கண்ணியத்துடன் நடந்து கொள்வார்கள் என்றுதான் அவர் கற்பனையில் கணித்திருந்தார்; தங்களுக்கு முற்ற முழுக்க நன்மை செய்வதற்கென்றே அரசாங்கம் நியமித்துள்ள பணியாளர்களிடம் கிராம மக்கள் இப்படி வேண்டா வெறுப்பாக இருப்பார்கள் என்று அவர் எதிர்பார்க்கவில்லை.

அவர் அந்த ஊருக்கு வந்தபோது ஊர் மக்கள் போட்டியும் பொறாமையும் கொண்டவர்களாய் இரண்டு மூன்று கட்சிகளாகப் பிளவுபட்டுக் கிடந்தனர்.

இந்தப் பிளவு, முத்தையாவின் உள்ளத்தை மிகவும் உறுத்தியது. அதை எப்படியும் சுமுகமாகத் தீர்த்து வைக்க வேண்டுமென்று அவர் விரும்பினார். ஆனால் மக்கள் அதற்கு ஒத்து வர வேண்டுமே!

ஊரில் அப்பொழுது சமுதாய வளர்ச்சித் திட்டங்களின்கீழ் பலன் பெற்று, ஒரு சிலர் அரசாங்க உதவிகளுடன் தரிசாகக் கிடந்த தம் நிலங்களில் கிணறுகள் வெட்டி, நீர்ப்பாசன வசதிகளைப் பெருக்கி நன்மை கண்டுவந்தார்கள். ஆனாலும் விழிப்பின்மை காரணமாகவும், உள்ளூர இருந்த பூசல் மனப்பான்மைகள் காரணமாகவும் ஊர் மக்கள் அனைவரும் வளர்ச்சி வாய்ப்புகளைப் பரிபூரணமாகப் பெற வாய்ப்பில்லாது இருந்தது.

ஊரின் மேற்குப் புறத்தில் அருகிலிருந்த மேற்குத்தொடர்ச்சி மலையிலிருந்து மழைக்காலத்தில் மட்டும் நாலைந்து மாதங்கள் தண்ணீர் வரும் காட்டாறு ஒன்று இரு பிரிவாகி, ஊரின் இரு புறங்களிலும் அழகுபட பாய்ந்தபோதிலும், அந்நீரைச் சரியாகப் பயன்படுத்தும் முயற்சிகளில் மக்கள் அதிகமாகக் கவனம் செலுத்தவில்லை. அதற்கும் ஒற்றுமை யின்மையே காரணம்.

முத்தையா, மக்களை ஒருமித்த கருத்துடையவர்களாய் அச்செயலில் ஈடுபடத் தூண்டி, சிறு சிறு

கால்வாய்களும் மடைகளும் அமைத்து, நீர்ப்பாசன வசதிகளைப் பெருக்குவதில் வழி காட்டிவிட்டார். ஊரில் சாகுபடிக்கு ஏற்ற தனிப்பட்டோர் நிலங்களை யெல்லாம் பார்வையிட்டு அவற்றில் கிணறுகள் வெட்டும்படி அறிவுறுத்தி அரசாங்கச் சலுகை களுக்கும் சிபாரிசு செய்தார். அவரது அரிய முயற்சியால் பாழ்நிலங்கள் பல, பச்சை வயல்களா கவும், கட்டாந்தரைகள் பல கனிமரத் தோப்புக் களாகவும் மாறிவந்தன. பிறருக்கு அடிமைத் தொழில் புரிவதில் வேட்கையுள்ளவர்களாக இருந்த பலர், சொந்த நிலங்களில் உழைத்துச் செல்வமும் சுகமும் பெருகக்கண்டனர். புறம்போக்கு நிலங்கள் பல பொன் கொழிக்கும் சொத்தாயின. சோம்பேறி கள் தொண்டர்களாக உருவெடுத்தனர்.

முத்தையாவின் முயற்சியால், ஊரின் அருகிலி ருந்த மலையில் அதிக அளவில் வளரும் மூங்கில் களைக் கொண்டுவந்து பக்குவப்படுத்தி, கூடை, நாற் காலி போன்ற பலவிதப் பொருட்கள் தயாரிக்கும் கூட்டுறவு குடிசைத் தொழிற் கூடம் ஒன்றும் அவ் வூரில் ஏற்படுத்தப்பட்டது. அதன் வாயிலாக, இன்று அந்த ஊர் மக்களுக்கு மட்டுமல்ல, பக்கத் துக் கிராமங்களிலுள்ள பலருக்கும் வேலை வாய்ப் புக்கள் கிடைத்திருக்கின்றன. கோழிப்பண்ணைகள், தேனி வளர்ப்பு, மாதிரிப் பண்ணை போன்ற எத்த னையோ புதிய பல ஆக்கங்கள் தோன்றியிருக்கின் றன. மொத்தத்தில் ஏதோ விந்தையான மந்திர சக்தியால் மாறுபட்டதுபோல் காட்சியளிக்கும் அவ் வூருக்கு, அரசாங்கம், மக்களுக்கென்று வகுத்திருக் கும் அத்தனை நன்மைகளையும் வாங்கித் தந்து, திட்ட வளர்ச்சி நிலைக்கு ஒருமாதிரி இடமாக முத் தையா அவ்வூரை முன்னேறவைத்திருக்கிறார்.

மூன்றாண்டுகட்கு முன்னர் முத்தையா அவ்வூருக்கு வந்த புதிதில், அவர் முன்னிலையிலேயே ''இவர் வந்துதானா ஊரை உருப்படியாக்கப் போகிறார்?'' என்று ஏளனம் செய்த ஒரு சில வாய்கள் மட்டு மல்ல, இன்று ஆயிரமாயிரம் வாய்கள் அவர் ஊருக்கு ஈட்டிவைத்துள்ள முன்னேற்றங்களை வானளாவப் புகழ்கின்றன. ஓர் உண்மையான தொண்டனுக்கு இந்தப் புகழ் மொழியிலும் இன்பம் வேறென்ன இருக்கின்றது?

ஆனால் என்னதான் அரிய பெரிய காரியங்களை நிறைவேற்றுவதற்கு உறுதுணையாக இருந்தபோதி லும் அவர் விரும்பிய ஒரு செயல் மட்டும் இன்னும் முழுமையாக ஈடேறாமல் இருந்துவந்தது. அதுதான் ஊரின் ஒற்றுமை. ஆரம்பகாலத்தில் இருந்துவந்த அதிகமான வேற்றுமைகள் மாறி, மக்கள், ஊரின் உயர்வுக்கு ஒருவாறு ஒத்துழைத்தார்களேயாயினும் அவர்கள் உள்ளத்தில் வேரூன்றிக் கிடந்த, அந்தப் பேத உணர்ச்சிகள் இன்னும் பரிபூரணமாக அகலாதிருந்தன. ஆனாலும், அதிலும் ஒரு மறு மலர்ச்சி ஏற்படக்கூடிய கால கட்டம் வந்தே தீர்ந்தது.

ஒரு நாள் மாலை. அடை மழை காலம். இடை விடாது பெய்த மழையினால் ஆற்றில் கரைபுரண்டு வெள்ளம் ஓடியது. அதற்கு முன் அவ்வளவு பெரிய மழையைக் கண்டதேயில்லை. பேய் மழை யில், பெருகிவந்த பயங்கர வெள்ளத்தைத் தாங் கிக்கொள்ள இயலாது, காட்டாற்றின் கரை உடைந்து ஊரில் நீர்பெருக்கெடுக்க ஆரம்பித்தது. தாழ்வான இடங்களிலுள்ள வீடுகளை எல்லாம் மூழ்கவைக்கும் அளவுக்குத் தண்ணீர் பெருகி விட்டது. மக்கள் அனைவரும் திகைத்துத் திண்டா டினர்.

அப்போது முத்தையா, ஏற்கனவே இரண்டு நாட்களாகக் கொடூரமாக வாட்டிய காய்ச்சல் காரணமாக, உடல் நலம் குன்றியிருந்தார். பெருகி வரும் வெள்ளத்தில் பிள்ளை குட்டிகளுடன் புகலின் றித் தவிக்கும் மக்களைக் காப்பாற்ற வழி என்ன? ஆபத்துக்காலத்தில் யாருக்கும் எவ்வித எண்ணங் களும் உதிக்கவில்லை. மக்கள் பலரும் ஊரில் சற்று மேட்டுப்பாங்காக இருந்த பள்ளிக்கூடக் கட்டிடத்தில் வந்து ஒதுங்கினர். நேரம் நன்றாக இருட்டிக்கொண்டிருந்தது. மழையோ சற்றுங் குறைவதாக இல்லை. வரவர பள்ளியிலும் நீர் பெருக ஆரம்பித்தது. நிலைமை கணத்திற்குக் கணம் மோசமாகிக்கொண்டிருந்தது.

இனி செய்யவேண்டியது என்ன? உடனடியாக ஊரிலிருந்து சுமார் பத்துமைல் தொலைவிலிருக்கும் நகரத்திற்குச் சென்று ஆள் உதவி பெற்றுவந்து மக்களையும், அவர்களது சொத்து சுகங்களையும், காக்கவேண்டியதுதான்! சிக்கல் காலத்திலும் முத்தையாவுக்கு அந்தத் தெளிவான திட்டம் உதித் தது. ஆனால் அதைச் செயல்படுத்துவது யார்? பாதுகாப்போடு இருந்தவர்களுக்கு, பரிதவிக்கும் மக்களைப் பற்றிய கவலை இல்லை. மேட்டுப்புற வாசிகளுக்கு, வெள்ளத்தில் மூழ்கிவந்த பகுதிகளைப் பற்றி அக்கறை இல்லை. காரணம் அந்த அளவுக்கு அவர்களிடையே பிளவுகள்! இந்த நிலையில் யாரிடம் போய் உதவி கேட்பது? யாரைத் துணைக்கு அழைப்பது? அல்லது யாரிடம் ஒரு வேலை சொல்வது? முத்தையா யாரையும் எதிர்பார்க்க வில்லை. தானே, அந்த நல்ல காரியத்தில் ஈடுபடத் துணிந்துவிட்டார்.

உடலைச் சில்லிட்டுப்போக வைக்கும் வாடையில், தீர்ந்தும் தீராத காய்ச்சலோடு, தள்ளாடும் உட லின் பரிதாப நிலையில், மன உறுதியென்னும் ஒரே துணையுடன் விரைந்தார் முத்தையா. நல்ல இருட்டு. நீரை முகத்தில் பீச்சியடிப்பதுபோல் காற்றுடன்

கலந்து கொட்டும் மழை: மேலே மேலே பெருகி வரும் வெள்ளத்தில் சரியான பாதை எதுவெனக் காண்பது? எப்படியோ விடாமுயற்சியுடன், உடலே உருட்டி இழுத்துச் செல்லும் ஆற்று வெள்ளத்தையும் குண்டுங் குழியுமான காட்டுப்பாதையில் பத்து மைலேயும் கடந்து ஒருவாறு நகரத்தை அடைந்தார் அவர்.

வெள்ளக்காடாகியிருக்கும் புஞ்சையூரின் செய்தியறிந்த நகரத் தொண்டர் படையினரும் மற்றும் ஆபத்துக்கால வீரர்களும் புஞ்சையூருக்கு மிகத் துரிதமாக விரைந்தனர். அவர்கள் முயற்சியால் வெள்ளத்தை நிறுத்த முடியாவிட்டாலும், மக்கள் அனைவரையும் உயிர்ச்சேதமின்றி காப்பாற்ற முடிந்தது.

நாலைந்து நாட்களில் வெள்ளம் நன்ருக வற்றி விட்டது. ஊரில் சில மண் வீடுகள் சிதைந்து விட்டனவே தவிர, அதிகமாகப் பொருட்சேதங்கள் இல்லே. வயல் பயிர்களுக்கு அவ்வளவாக அழிவு இல்லே.

மக்கள் தங்கள் உயிரையெல்லாங் காப்பாற்ற, தம் உயிரையும் பொருட்படுத்தாது உதவியாற்றிய முத்தையாவையும் பிற தொண்டர்களேயும் வாயாரப் புகழ்ந்து வாழ்த்தினர். ஆனுல், அந்தப் புகழுரைக்குரிய முத்தையாவோ, அன்று காய்ச்சலோடு காய்ச்சலாக கடுமழையில் நனேந்த காரணத்தால் நோய் முற்றி, இன்று மருத்துவ மனேயில் மரணப் படுக்கையில் கிடக்கின்ருர்.

மக்கள் நெஞ்சம் துடித்தனர். ஊரிலிருந்த ஒற்றுமைக்குறைவு, பேதா பேதம் எல்லாம் ஒழிந்து போயின. ஊரின் உயர்வுக்குப் பலவாறும் உதவியாக இருந்து, தங்கள் உயிரையும் காப்பாற்றித் தந்த உத்தமர்—அவர் பிழைக்க வேண்டுமே! அந்த ஏக்கத்தை அவர்களால் சகித்துக்கொள்ள முடியவில்லே. அந்த ஒருமித்த கவலேயில் ஒற்றுமை பூரணமாக நிலவியது.

* * *

சாலேயில் நின்று கொண்டிருந்த மக்கள், இருட்டி வெகு நேரமாகியும் தங்கள் வீடுகளுக்குச் செல்லவில்லே. முத்தையா குணம் அடைந்துவிடுவார் அல்லது பிழைத்துவிடுவார் என்று கேள்விப்படும் வரையில் அவர்களுக்குத் துக்கம்தான் உண்டு. தூக்கம் இல்லே. நகரத்து மருத்துவ மனேயில் பிரத்தியேகக் கவனிப்பில் சேர்க்கப்பட்டிருக்கும் அவரது உடல் நலத்திற்காக, இங்கு நூற்றுக்கணக்கான மக்களின் உள்ளங்கள் பிரார்த்தனே செய்து கொண்டிருந்தன.

ஆனுல் இயற்கை? மக்களின் விருப்பு வெறுப்புக்களேக் கேட்டுக்கொண்டு அது காரியங்களேச் செய்வதில்லேயே! என்ன நடக்கக்கூடாது என்று மக்கள் ஏக்கமுற்றுக் கிடந்தார்களோ, அந்தத் துக்கச் செய்தியை கடைசியில் சிலர் தாங்கிவந்தனர்.

கிராமமே அழுதது. அதற்கு நேர்ந்திருக்கும் பேரிடி சாதாரணமாகப் பொறுத்துக்கொள்ளக் கூடியதா? பொது நலத்திற்காகப் பாடுபட்ட ஊழியனே-ஒப்பற்ற தொண்டனே-நண்பனே இழந்து விட்டோமே என்று குமுறிக் குமுறி அழுதது. அந்த அழுகையில், தானும் கலந்து கொண்டதால் தானே என்னவோ, வானமும் கண்ணீர் சொரிந்து கொண்டிருந்தது.

---

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

சேர்த்துக்கொள்ளப்படும் மாணவர்களின் எண்ணிக்கை 2.8 லட்சமாகிவிடும். 1965–66-ல் (இது மூன்ருவது திட்டத்தின் இறுதி ஆண்டாகும்) மேற்கொண்டும் 1,500 வகுப்புகள் துவக்கப்பட்டு, 14—17வயதுத் தொகுதியில் 60,000 மாணவர்களேச் சேர்த்துக் கொள்ளத் திட்டமிட்டுள்ளது. உயர் நிலேக் கல்வியின் தரத்தை உயர்த்துவதற்கு மூன்ருவது ஐந்தாண்டுத் திட்டத்தில்,திட்டங்கள் வகுக்கப்பெற்றன. அவை தொடர்ந்து நிறைவேற்றப் படுகின்றன. 1965–66 வரவு செலவுத் திட்டமதிப்பீட்டில் 15 பள்ளிகளில் விஞ்ஞானம் போதிக்கும் முறைகளேச் சீரமைத்தல், 60 பள்ளிகளில் முக்கியபாடங்களேப் போதித்தல், 100 பள்ளிகளில் நூல் நிலேயங்களேச் சீரமைத்தல் முதலியவற்றிற்காகத் தொகை ஒதுக்கம் செய்துள்ளது. மாநில திட்டத்திற்குப் புறம்பான ஒரு புதிய திட்டமும் இவ்வாண்டு மேற்கொள்ளப் பட்டுள்ளது. இது மத்திய அரசாங்கப் பொறுப்புள்ள ஒரு சிறப்பு திட்டமாகும். இது விரைவுத் திட்டம் (Crash Programme) என அழைக்கப்படுகிறது. உயர்நிலேப் பள்ளிகளில் விஞ்ஞானக் கல்வியின் தரத்தை அதிகரிப்பதற்கான ஒரு திட்டம் இது. இதன்கீழ், முதலில் பள்ளி ஒன்றுக்கு ரூ. 10,000 செலவில் 70 பள்ளிகளுக்காக விஞ்ஞானம் போதிப்பதற்குரிய கருவிகள் வாங்கப்படும். இத் திட்டத்திற்காக ரூ. 6·93 லட்சம் செலவிடப்படும். இதற்கு இந்திய அரசாங்கம் 100 சத வீதம் நிதி உதவி அளிக்கும். இத் திட்டம் ரூ. 38 லட்சம் உத்தேச செலவில் 1965–66-ல் 380 பள்ளிகளுக்கு விரிவு படுத்தப்படும்.

# புத்துணர்வைக் காட்டும் சிறு கண்ணுடி

**மத்திய பிரதேசத்தைச் சேர்ந்த ரெய்ப்பூர் மாவட்டத்தில் பலோதாபஜார்—படபாரா சாலை யில் செல்ல நேரிடுபவர்கள், சற்று சிரமம் பாராமல், சில மைல்கள் கிராமச் சாலை மூலம் கர்மதா கிராமத்திற்குச் செல்வார்களானல், அவர்களுக்கு 'மதியா' ஆதிவாசி மக்களின் இனிய ஆடல் பாடல் வரவேற்பு கிடைக்கும்.**

நவீன இந்தியாவில், இன்று நாடெங்கும் தோன்றியுள்ள புத்துணர்வைப் பிரதிபலிக்கும் ஒரு சிறு கண்ணுடியாக, கர்மதா கிராமம் விளங்கு கிறது. இது ஒரு சாதாரண குக்கிராமந்தான். இங்கு வாழ்பவர்களின் எண்ணிக்கை 1,300 தான். ஆனல் எண்ணிக்கையை மிஞ்சுகிறது மக்கள் உற்சாகம். மூன்றே நாட்களில் அவர்கள் இரண்டு மைல் நீளச் சாலையைப் போட்டு முடித்தனர், சாதா ரணப் போக்குவரத்துக்கும், வியாபார வசதிக்கும் இந்தச் சிறு இணைப்புச் சாலை இன்றியமையாத தாக இருந்தது. ஆனல் இது நாள் வரை, கிராம மக்கள் கோஷ்டிப் பிளவுகளில் சிக்குண்டு, பொதுக் காரியங்களில் நாட்டம் செலுத்தாமல் இருந்தனர். இந்த நிலையில், தீவிர விவசாயத் திட்டத்தின் கீழ் இக்கிராமம் சேர்த்துக் கொள்ளப்பட்டது. தீவிர விவசாயத்திற்கான காரியங்களை மேற் கொள்வ தற்குமுன், கிராமத்திற்கு இணைப்புச் சாலை எவ் வளவு அவசியம் என்பதை வட்டார அபிவிருத்தி அதிகாரியும், விவசாய விஸ்தரிப்பு அலுவலரும் கிராமப் பஞ்சாயத்து உறுப்பினர்களுக்கு எடுத்துக் கூறினர். பஞ்சாயத்துத் தலைவர் முன் நிற்க, கிராம மக்கள் அனைவருமே சாலை அமைக்கும் வேலையில் உற்சாகத்துடன் ஈடுபட்டனர். அவர்கள் ராமநாமப் பாடல்களைப் பாடிக் கொண்டும் இதர பஜனைகளைச் செய்து கொண்டும், தினசரி விடியற் காலையில் வேலைக்குப் புறப்பட்டனர். ஒருவரோடு ஒருவர் தோழமை உணர்வோடு பழகி, சிறப்பாகச் செயல்புரிந்ததில் இரண்டு மைல் நீள சாலை, மூன்றே நாட்களில் உருவாயிற்று. சில ஆண்டுகளுக்கு முன் வரை அசாத்தியம் என்றிருந்த ஒன்று, இன்று கை கூடிய காரியமாயிற்று—கிராமத்தில் இருந்த கோஷ்டிப்பூசல் ஒழிந்து, ஒற்றுமையும் மலர்ந்தது.

சுவையான சம்பவங்கள்

இந்தச் சிறிய பணியில் சில சுவையான சம்பவங் களும் நிகழ்ந்தன. உதாரணமாக, சிரமதானம் செய்த சில நபர்கள், உணவு ஏதும் கொள்ளாமலே வேலை செய்தனர். காரணம், அதற்கு முன் தினம் ஊதியம் பெறக் கூடிய வேலை எதற்கும் அவர்கள் செல்லவில்லை, கையில் காசு இல்லாததால், மறு நாள் சாப்பாட்டுக்கு வழியில்லாமற் போய்விட்டது. இதை அறிந்த கிராம மக்கள், அவர்களுக்கு உணவளித்து உபசரித்தனர்.

இந்தச் சாலைபோடும் பணியில், பள்ளி செல்லும் சிறுவர்—சிறுமியரும், மூதாட்டிகளும் கூட தங்க ளால் இயன்ற வேலைகளைச் செய்தனர்.

முக்கிய சாலையுடன், இப்போது கிராமத்திற்குத் தொடர்பு ஏற்பட்டு விட்டதால், கிராம மக்க ளிடையே ஒரு புதிய தெம்பு, நம்பிக்கை பிறந்திருக் கிறது. இதே போல் கூட்டு முயற்சியின் மூலம், தங்கள் விவசாய உற்பத்தி அளவை இரண்டு மடங் காகப் பெருக்க உறுதி பூண்டிருக்கிறார்கள். இப்போது பொறுக்கு விதைகள், ரசாயன உரங்கள் முதலியவற்றை உபயோகிப்பது கிராமத்தில் பரவி வருகிறது. ஆர்வம் மிக்கப் பஞ்சாயத்துத் தலை வரின் தலைமையின் கீழ், இக்கிராமம் தனது இலட்சியத்தை நிறைவேற்றும் எனத் தாராளமாக நம்பலாம்.

---

## 4-வது திட்டத்தில் 50 லட்சம் பேருக்கு வேலை வாய்ப்பு

நான்காவது திட்டத்தின் மூன்ருவதுஆண்டில், சாகுபடி நடைபெருத பருவங்களில் 25 லட்சம் பேருக்கு வேலை வாய்ப்புக்கு வகை செய்யும் படி கிராமப்புற மனித ஆற்றலைப் பயன்படுத்திக் கொள்ளும் திட்ட மொன்றை, திட்டக் கமிஷன் வகுத்து வருகிறது. நான்காவது திட்டத்தில், 50 லட்சம் பேருக்கு வேலை செய்யும் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கும் திட்டத்தின் முதல் கட்டமாக இது இருக்கும். தற்போது சுமார் 3.5 லட்சம் பேர் கிராமப்புற வேலைத் திட்டத்தின் கீழ் வேலை வாய்ப்பைப் பெற்று வருகின்றனர்.

# மாசூல் அளவு

டில்லி நகருக்கு வடமேற்காக 20 மைல் தூரத்தில் பஞ்சாப்கார் என்ற கிராமம் இருக்கிறது. அவ் வூரைச் சேர்ந்த கன்வார் மகிந்தர்பால் சிங் என்ற முற்போக்கு விவசாயி, கூட்டுறவு விவசாயப் பண்ணை யொன்றில் நில மீட்சிப் பணிக்குப் பக்க பலமாக இருந்து ஆவன செய்வதுமட்டுமல்ல, விளைச்சல் அளவை இரண்டரை மடங்காக அதிகரிக் கவும் செய்தார்.

திரு. கன்வார் மகிந்தர்பால் சிங், பஞ் சாபைச் சேர்ந்த பெரிய விவசாயக் குடும்பத்தில் வந்தவர். அவரது தந்தை சர் தத்தார்சிங், தம் மகனை விவசாயத்துறையில் தகுதிமிக்க பயிற்சிகள் பெறச் செய்தார். ஆகையால் விவசாயத்தில் விசேடத் தேர்ச்சி, அனுபவம், அறிவு பெற்ற வரான கன்வார் மகிந்தர்பால் சிங், 1960—61-ல் கஞ்சவாலா வட்டாரத்தில் நடத்தப்பட்ட கோதுமை விளைச்சல் போட்டியில், முதற் பரிசு பெற்றார். அவர் ஏக்கர் ஒன்றுக்கு 57 மணங்கு கோதுமை மாசூல் காட்டினார்.

வெற்றிமேல் வெற்றி

அதன் பிறகு, அவருக்கு வெற்றிமேல் வெற்றி யாகக் கிடைத்து வந்தது. டில்லி மாநிலத்திற்குள்

# இரண்டரை மடங்காக

மிகச் சிறந்த தரமுள்ள பட்டாணி பயிரிட்டதற் காக, அவர் கடந்த மூன்றாண்டுகளாகத் தொடர்ந்து முதற்பரிசு பெற்று வருகிறார். இவ்வாண்டும் பட்டாணி சாகுபடியில் அதிக மாசூல் காட்டியதற்காக டில்லி மலர்க் கண் காட்சியிலும், மூன்றாவது அகில-இந்திய காய்கறி கண்காட்சியிலும் முதற்பரிசுகள் பெற்றார்.

தேசப் பிரிவினையால் பாதகமடைந்த குடும்பம்

நாடு பிரிவினைக்குப்பின், திரு. மகிந்தர்பால் சிங் மாண்டோகொமரியிலிருந்து டில்லிக்குத் தம் குடும்பத்தினருடன் வந்து சேர்ந்தார். மாண்டோ கொமரியிலிருந்தபோது 10 ஆயிரம் ஏக்கர் நிலம் சொந்தமாக வைத்திருந்த அக்குடும்பத்தினர்க்கு, டில்லிக்கருகில் பஞ்சாப்கார் கிராமத்தில் 300 ஏக்

# அதிகரித்தது

கர் நிலம் ஒதுக்கப்பட்டது. இந்த நிலங்கள் வெவ் வேறு இடத்தில் இருந்தன, பிறகு 1958-ல், இக்குடும்பத்தினர் தங்கள் நிலவுடைமைகள் எல்லாம் ஒரு சேர அமையும்படிச் செய்து கொண்டனர்.

பிறகு, அவர்கள் ஒன்று சேர்ந்து கூட்டுறவு விவசாயப் பண்ணை ஒன்றை அமைத்தனர். அந்தக் கூட்டுறவுச் சங்கத்திற்கு, கன்வார் மகிந்தர்பால் சிங், நிர்வாகத் துணைத்தலைவராக, ஒரு மனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்,

பண்ணை அமைத்து பாடுபட்டனர்

பண்ணை அமைக்கப்பட்ட முதல் இரண்டு ஆண்டுகளில். இரண்டே இரண்டு டிராக்டர்களைக் கொண்டு இராப்பகலாக வேலை செய்து, நிலங் களின் மேடு பள்ளங்களை நிரவி, விவசாயத்திற்கு ஏற்றபடி செய்யப்பட்டன. மற்றும் சாகுபடிக்குத் தேவையான வசதிகள் எல்லாம் திட்டமிட்டுச் செய்யப்பட்டன. பாசனக் கால்வாய்கள், வடி கால்கள் வெட்டப்பட்டு, நிலம் பல்வேறு தளை களாகப் பிரிக்கப்பட்டு, வரப்புகள் கட்டப் பட்டன. இந்த நிலங்களின் மண் சத்து பற்றி ஆராய்ந்தறிவதில் புதுடில்லியில் உள்ள விவசாய ஆராய்ச்சிக் கழகம் உதவி செய்தது. இவ்வாறு ஆராய்ச்சி செய்ததில் பல நிலங்கள் மிகவும் களராக இருப்பது தெரியவந்தது. இதுபோன்ற காரணங்களால் 120 ஏக்கர் பரப்புள்ள நிலங் கள், கொஞ்சமும் சாகுபடிக்குத் தகுதியில்லா தவையாக இருந்தன. இவற்றையெல்லாம் பண் படுத்திப் பக்குவப்படுத்தும் வேலை இரண்டாண்டு கள் நடைபெற்றதில், இன்று எல்லா நிலங்களிலும் பயிர் செய்யப்படுகிறது.

பலன் கிடைத்தது

டில்லி பிரதேசத்தைச் சேர்ந்த கிராமப் புறங் களில், ஆண்டு தோறும் வெள்ளத்தினால் தொல்லை ஏற்படுவது சகஜம். ஆகையால், நன்கு திட்ட மிட்ட ரீதியில், பெருத்தச் செலவில் வடிகால்கள் வெட்டப்பட்டன. இதன் பலனாக, இப்போது நிலங்களில் வெள்ள நீர் தேங்கும் நிலைமை அகன்று விட்டது.

கூட்டுறவு விவசாயப்பண்ணை, ஆரம்ப முதலே திருந்திய முறைகளில் விவசாயம் செய்ய முயற்சி எடுத்தது. மாடுகளுக்குப் பதில், கூடுமானவரை எல்லா காரியங்களுக்கும் இயந்திரச் சாதனங்கள் உபயோகிக்கப்பட்டன. இவ்வகையில் 3 டிராக் டர்களும், பல்வேறு வகையான 24 கருவிகளும் வாங்கப்பட்டன.

பரிகசித்தவர் பிரமித்து நின்றனர்

பண்ணையில் ரசாயன உரங்கள் உபயோகிக்கப் பட்டபோது, பக்கத்திலுள்ள விவசாயிகள் ஓர் அச்சத்தைக் கிளப்பினர். அதாவது, ரசாயன உரங்களை உபயோகித்தால் நாளடைவில் மண்ணின் சத்து குறைந்துகொண்டேபோய், கடைசியில்

சாகுபடியே செய்ய முடியாத அளவுக்கு ஆகி விடும் என்று கூறினர். ஆனால் அத்தகைய அச்சத்திற்கு இடமில்லாத வகையில், பூமி சத்து குறையாதபடி பாதுகாப்பதற்காக கோதுமை, கரும்பு, புகையிலை, பட்டாணி, துவரை முதலிய பயிர் ஒவ்வொன்றுக்கும் ஏற்றபடி நைட்ரஜன், பாஸ்பேட், பொட்டாஷ் முதலிய உரச்சத்துக்கள் உபயோகிக்கப்பட்டன.

இந்த முறையில், கூட்டுறவு பண்ணையில் விளைச்சல் தரம், ஆண்டுக்கு ஆண்டு முன்னேறிக் கொண்டே வந்தது. உரமிடுதல் போன்ற நவீன முறைகளைப்பற்றி முதலில் குறைகூறி வந்த பக்கத்து நிலத்து விவசாயிகள், பிறகு வாயடைத்து நிற்க வேண்டியதாயிற்று. ஏனெனில், பண்ணையில் மாசூல் அளவு, மூன்றாண்டுகளுக்குள், மிகவும் பெருகியதையும், களராக இருந்த நிலங்களில் பெரும்பகுதி விவசாயத்திற்குத் தகுதியாக மாறியதையும் அவர்கள் நேரடியாகக் கண்டனர். எனவே, பண்ணையின் துணைத்தலைவரான கன்வர் மகிந்தர்பால் சிங்கை அவர்கள் அணுகி, தங்களுக்கும் ரசாயன உரம் தரும்படிக் கேட்டனர். மகிந்தர்பால் சிங்கும் உதவியளிக்கத் தயங்கவில்லை. ஆக, இன்று இந்தக் கூட்டுறவுச் சங்கம் டில்லி மாநில கூட்டுறவுச் சம்மேளனத்தின் ஒரு ஏஜண்டாக இருந்து, சுற்று வட்டார கிராமங்களுக்கெல்லாம் உரங்களை விநியோகம் செய்து வருகிறது.

### பாசனத்திற்கு எளிய முறை

பண்ணையின் பாசனத்திற்கான தண்ணீர், மேற்கு யமுனைக் கால்வாயிலிருந்து கொண்டுவரப்படுகிறது. ஆனால் இது போதுமானதாக இல்லாததால், குழாய்க்கிணறுகள் எடுக்கப்பட்டுள்ளன. இதிலும் மகிந்தர்பால் சிங் தான் வழிகாட்டினார். பல பரிசோதனைகளுக்குப் பிறகு, அவர் 8 குழாய்க் கிணறுகள் எடுத்தார். அவரைப்பார்த்து, பக்கத்து விவசாயிகள் பலரும் இப்போது குழாய்க்கிணறுகள் எடுத்து, நல்ல பலனடைந்து வருகின்றனர். இவற்றிற்கு மூலதனச் செலவு அதிகம் ஆவதில்லை.

மகிந்தர்பால் சிங், டிராக்டர்களை எந்த அளவுக்கு அதிகபட்சமாக உபயோகிக்க முடியுமோ, அந்த அளவுக்குப் பயன் படுத்துகிறார். நிலத்தை உழுவது, விதைப்பது போன்ற வேலைகள் முடிந்த பிறகு, கிணறுகளிலிருந்து நீர் இரைக்கவும் டிராக்டர்களை உபயோகிக்கிறார். இந்த முறையில் செலவு அதிகந்தான். ஆனால் இந்தக் கிராமத்திற்கு இன்னும் மின்சார வசதி கிடைக்கவில்லையாதலால், வேறு வழியும் இல்லை.

(அடுத்த பக்கம் பார்க்க)

### ஒரு கிராமத்தில் இத்தனை மரங்களா ?

ஆண்டுதோறும் கொண்டாடப்படும் வன மகோத்சவத்தின்போது, அதிக மரங்களை நடும் கிராமத்திற்கு அகில இந்திய ஜவஹர் பதக்கம் வழங்கப்படுகிறது. அத்தகைய பதக்கத்தை 1961-ம் ஆண்டில் பெற்ற மேற்கு வங்க கிராமம் பரோஜ், மரம் நடுவதில் ஒரு புதிய சாதனையைச் செய்து காட்டிவிட்டது.

அக் கிராமத்தைச் சேர்ந்த 237.68 ஏக்கர் பரப்புள்ள நிலங்களில் 86,076 கன்றுகள் நடப்பட்டன. இதுகூட அதிசயம் அல்ல. அவற்றில் 75,060 பிழைத்து மரமாக வளர்ந்து வருகின்றன என்ற பாராட்டுக்குரிய தகவல் இப்போது கிடைத்திருக்கிறது. தட்ப வெப்ப பாதக நிலைமைகள், கவனக் குறைவு, ஆடு மாடுகளின் மேய்ச்சல், ஆக்கிரமிப்பு ஆகியவற்றிலிருந்து தப்பிப்பிழைத்த மரங்களின் அளவு, நடப்பட்ட கன்றுகளின் எண்ணிக்கையுடன் ஒப்பிட்டுப் பார்த்தால் 87 சதவிகிதமாகிறது. இது ஓர் அரிய சாதனை. அந்த அளவுக்கு செடிகள், மிக்க கவனத்துடன், அக்கறையுடன் பராமரிக்கப்பட்டன என்பது தெளிவாகிறது.

* * *

### உத்திரப் பிரதேசத்தில் கரும்பு மாசூல் விகிதம்

ஆனந்த நகர் சர்க்கரை ஆலையுடன் இணைப்பு கொண்டதான சேரிப் பண்ணை, உத்திர பிரதேச மாநிலத்திலேயே கரும்பு சாகுபடியில் முதல் இடத்தைப் பெற்றிருக்கிறது. இந்தப் பண்ணை கோரக்பூர் மாவட்டத்தில் இருக்கிறது. அங்கு ஏக்கர் ஒன்றுக்கு 2,681 மணங்கு கரும்பு மாசூல் கிடைத்திருக்கிறது. இந்தப் பண்ணையில் பி.ஓ. 17 என்ற ரகத்தைச் சேர்ந்த கரும்பு விதை உபயோகிக்கப்பட்டது. இதற்கு முன், இந்த மாநிலத்தில் ஏற்பட்ட அதிகப்படி கரும்பு மாசூல் அளவைவிட 260 மணங்கு (ஏக்கருக்கு) அதிகமாகும்.

* * *

### பம்பு செட்டுகளுக்காக பஞ்சாயத்து கடன்

ராஜஸ்தான் மாநிலத்தைச் சேர்ந்த ஜுன், ஜுனு என்ற மாவட்டத்தில் உள்ள பிப்ராலி என்ற பஞ்சாயத்து யூனியன் தனது பிரதேசத்திலுள்ள ஏழை விவசாயிகள், தங்கள் நிலங்களுக்கு நீர்ப்பாசன பம்பு செட்டுகள் வாங்க, கடன் உதவி செய்வதற்காக, தனது 1965-66-ம் வருட வரவு செலவுத் திட்டத்தில் ரூ. 1 லட்சம் நிதி ஒதுக்கியிருக்கிறது. மொத்த பட்ஜெட் தொகையான ரூ. 6,22,000 யூனியன் கவுன்சிலின் அங்கீகாரத்தைப் பெற்றது.

(முன் பக்கத் தொடர்ச்சி)

பண்ணையில் கோதுமை மாசூல் அளவு, முதலில் ஏக்கர் ஒன்றுக்கு 12 மணங்காகத்தான் இருந்தது. ஆனால் ரசாயன உரங்கள், பொறுக்கு விதைகள், பூச்சி மருந்துகள் ஆகியவற்றை உபயோகித்து, நீர்ப்பாசன வசதி, வடிகால் வசதி முதலியவற்றிற்கு ஏற்பாடு செய்து, திருந்திய முறைகளில் விவசாயம் செய்ததால், இப்போது சராசரி மாசூல் அளவு, ஏக்கர் ஒன்றுக்கு 31 மணங்காக உயர்ந்திருக்கிறது—அதாவது முதலில் இருந்ததைப்போல் இரண்டரை மடங்காக பெருகியிருக்கிறது. இதேபோல், இதர பயிர் வகைகளின் மாசூலும் இரண்டு மடங்காகியிருக்கிறது.

இந்தக் கூட்டுறவுப் பண்ணை, ஆரம்ப முதலே, கோதுமை சாகுபடியில் சிறந்து விளங்குவதால். இதன் தரமுள்ள கோதுமை விதைகளை உத்திரப் பிரதேச அரசாங்கமும், டில்லி நிர்வாகமும் விலை கொடுத்து வாங்கிக்கொண்டன. எனவே சங்கம் ஒரு விதை உற்பத்தியாளராக வட்டார அபிவிருத்தி அதிகாரியிடமும், இந்திய தேசிய விதைக் கார்ப்பரேஷனிடமும் பதிவு செய்து கொண்டிருக்கிறது.

### காய்கறி சாகுபடி மூலம் அதிக லாபம்

இந்தப்பண்ணை, டில்லி நகரின் சுற்றுப்புற பகுதியில் அமைந்திருப்பதால், இங்கு தானிய வகைகளை விட காய்கறிகள், கால்நடைத் தீவனப் பொருள்களைப் பயிர் செய்வது லாபகரமாக இருக்கிறது. எனவே பண்ணையின் சுமார் முக்கால் பகுதி பரப்பில் காய்கறிகளும், தீவனங்களும் பயிர் செய்யப்படுகின்றன.

ஆனால், இவற்றைச் சீரான முறையில் விற்பனைக்கு ஏற்பாடு செய்வது ஒரு பெரும் பிரச்னையாக இருக்கிறது என்கிறார் கன்வார் மகிந்தர்பால் சிங். இப்போது காய்கறிகள் வியாபாரம் தனிப்பட்ட நபர்களிடம் முழுமையாகக் சிக்கிக்கொண்டிருக்கிறது. இதன் விளைவு என்னவென்றால், பண்ணையிலிருந்து வியாபாரிகள் காய்கறிகளை வாங்கும் விலையைப் போல், சில்லறை விற்பனைவிலை மூன்று மடங்காக இருக்கிறது. எனவே இதற்கு மாற்று ஏற்பாடு செய்தாகவேண்டும் என்கிறார், மகிந்தர் பால் சிங்.

நம் நாட்டில் விவசாய உற்பத்தியை அரை மடங்கு அதிகரிப்பது, குறுகிய காலத்தில் சாத்தியம் என மிகுந்த நம்பிக்கையோடு கூறுகிறார், மகிந்தர் பால்சிங். ''நாங்கள் ஒன்றரை மடங்கு அதிக மாசூல் கண்டிருக்கும்போது. மற்றவர்கள் அரை மடங்கு கூடவா உற்பத்திப் பெருக்கம் காண முடியாது?'' என்பது அவரது கேள்வி, ஆனால் ரசாயன உரங்கள், பூச்சிமருந்துகள் முதலியவற்றை உரிய காலத்தில் விவசாயிகளுக்கு வழங்குவதும், சிறு சிறு பாசனத்திட்டங்களை மேற் கொள்வதும், எளிய முறையில் விவசாயிகளுக்குக் கடன்கள் வழங்குவதும் முக்கியம் என்பதையும் அவர் வலியுறுத்தத் தவறுவதில்லை.

### குக்கிராமத்திற்கு குழாய் மூலம் குடி நீர்

மத்திய பிரதேச மாநிலம், சிம்கா அபிவிருத்தி வட்டாரத்தைச் சேர்ந்த சிறு கிராமந்தான் கேசதா. எனினும், நகரங்களில் உள்ளது போல், குழாய் மூலம் குடிநீர் வசதி இந்தக் கிராமத்திற்கு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

ரூ. 32,760 செலவில் நிறைவேற்றப்பட்ட இந்தக் குடிநீர் திட்டத்தின் கீழ், கிராம வீதிகளில் மக்களின் பொது உபயோகத்திற்காக 13 குழாய்கள் பொருத்தப்பட்டுள்ளன. இத் திட்டத்திற்காக உள்ளூர் மக்கள், தங்கள் பங்காக ரூ. 3,500 செலுத்தினர்.

### குறுகிய காலத்தில் பெரிய சாதனை

விவசாய உற்பத்தி விசேட முக்கியத்துவம் பெற்றுள்ள இன்றைய நிலைமையில், நீர்ப்பாசன வசதிகளைப் பெருக்குவது அத்தியாவசியமாகிறது. மத்தியப் பிரதேச மாநிலத்தில் தண்ணீர் கிடைக்கக்கூடிய ஆதாரங்களையெல்லாம் முழுமையாகப் பயன்படுத்தத் தீவிர முயற்சிகள் நடந்து வருகின்றன. இந்த வகையில் ஷஜாபூர் வட்டாரம் மிகக் குறுகிய காலத்தில் 9,063 கிணறுகளை வெட்டி அருஞ்சாதனை செய்து காட்டியது.

கிராம மக்களும், கிராம சேவக்குகளும், வட்டார அபிவிருத்தி விஸ்தரிப்பு அதிகாரிகளும் ஒருவரோடு ஒருவர் நெருக்கமான ஒத்துழைப்புடன், இடைவிடாமல் உறுதியுடன் பாடுபட்டதால் இந்த அபார சாதனையைப் புரிய முடிந்தது. இந்த வட்டாரத்தில் 5,000 கிணறுகள் எடுப்பது என்றுதான் இலட்சிய அளவு நிர்ணயிக்கப்பட்டது. ஆனால் அனைவரும் உண்மையான உற்சாகத்துடன் பணி புரிந்ததால், இலட்சிய அளவைப்போல் சுமார் இரு மடங்கு எண்ணிக்கையுள்ள கிணறுகளை எடுக்க முடிந்தது.

இதன் மூலம் இரட்டிப்புப் பலன் ஏற்பட்டிருக்கிறது. உணவு உற்பத்தி பெருக நீர்ப்பாசன வசதி கிடைத்தது மட்டுமல்ல, குடி தண்ணீர் பிரச்னையும் சமாளிக்கப்பட்டது.

"பஞ்சாயத்து ராஜ்" இதழிலிருந்து இடம் பெறுபவை :

பக்கங்கள்—16, 17, 18, 19, 29, 30, 31, 32 (8 பக்கங்கள்)

**Articles reproduced from "Panchayati Raj" on Pages 16, 17, 18, 19, 29, 30, 31 and 32** (8 pages)

கிராம நலம் பகுதி 2
*
GRAMANALAM PART 2

பஞ்சாயத்து அரசிதழ்
PANCHAYAT GAZETTE

(பஞ்சாயத்து அபிவிருத்தி பற்றிய அரசாங்க ஆணைகள், விதிகள் முதலியவற்றின் சுருக்கம் இந்தப் பகுதியில் இடம் பெறுகிறது.)

## பஞ்சாயத்து யூனியன் மன்ற நிகழ்ச்சி நிரல்களை அச்சடிக்கும் வழக்கம் நிறுத்தப்படவேண்டும்.

## Panchayat Union Councils—Meeting agenda—Printing of—Practice discontinuance—Instructions.

**(Memorandum No. 224582, R. D. Accts.—9/R. D. and L.A., dated 7th May 1965.)**

பஞ்சாயத்து யூனியன் மன்ற கூட்டங்களின் நிகழ்ச்சி நிரல்களை அச்சடிக்கும் விஷயம் கூட்டு அபிவிருத்திக் கமிஷனரின் கவனத்திற்கு வந்துள்ளது. இம்மாதிரியான நிகழ்ச்சி நிரல்கள் போன்றவற்றின் நகல்களை தயாரிப்பதற்காகவே, அரசாங்க நிதியிலிருந்து பஞ்சாயத்து யூனியன் மன்றங்களுக்கு, கையினால் இயக்கக்கூடிய நகல் எடுக்கும் கருவிகள் அளிக்கப்பட்டுள்ளன. ஆகவே பஞ்சாயத்து யூனியன் மன்றக் கூட்டங்களின் நிகழ்ச்சி நிரல்களை அச்சடித்துக்கொள்வதற்கான தேவையே இல்லை.

எனவே, நிகழ்ச்சி நிரல்களின் நகல்கள் அச்சடிக்கப்படக்கூடாது என்றும், இவ்வுத்தரவுகளுக்கு எதிராகச் செய்யப்படும் எந்தச் செலவும் அதற்கு பொறுப்பாக இருந்தவர்களிடமிருந்து வசூலிக்கப்படும் என்றும், எல்லாப் பஞ்சாயத்து யூனியன் ஆணையாளர்களுக்கும் தெரிவிக்கப்படுகிறது.

(கிராம நல தல நிர்வாகத் துறையின் 1965-ம் ஆண்டு மே மாதம் 7-ம் தேதியிட்ட அரசாங்க அறிக்கை எண். 224582)

---

## பஞ்சாயத்துக்கள், பஞ்சாயத்து யூனியன் மன்றங்கள் கல்லூரி கல்விக்காக நன்கொடை அளிப்பதில் இப்போதுள்ள கொள்கை வலியுறுத்தப்படுகிறது.

## Contribution—Payment by Panchayats and Panchayat Union Councils to Collegiate Education—Existing Policy—Reiterated.

**(G.O. Ms. No. 988, R. D. and L. A., dated 29th April 1965.)**

தங்களின் நேரடி நிர்வாகத்தில் இல்லாத கல்லூரிகளுக்கு, தல நிர்வாகங்கள் நன்கொடை அளிக்கலாகாது என்று, தல நிர்வாகத்துறையின் 1952-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 12-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 1836-ல் அரசாங்கம் ஆணைப் பிறப்பித்துள்ளது. இந்த உத்தரவுகளை மாற்றி, தங்கள் பகுதிகளில் கல்லூரிகளை திறக்கவும், நிர்வகிக்கவும் அன்பளிப்பு அளிக்க, பஞ்சாயத்து யூனியன் மன்றங்களுக்கு அனுமதி அளிக்க வேண்டும் என்று, அரசாங்கத்திற்கு முறையீடுகள் செய்யப்பட்டுள்ளன. இந்த முறையீடுகளை கவனத்தில் கொண்டு, நிலைமையை அரசாங்கம் கவனமாக பரிசீலனை செய்தது.

(2) பஞ்சாயத்துக்கள், அல்லது பஞ்சாயத்து யூனியன் மன்றங்களைப் பொருத்தவரையில், கல்லூரிக் கல்வியானது, அவற்றின்மீது ஏற்படுத்தப்பட்ட சட்டம் அல்லது விருப்பமான கடமைகளில் ஒன்றல்ல. பஞ்சாயத்துக்களுக்கும், பஞ்சாயத்து யூனியன் மன்றங்களுக்கும், ஏராளமான செலவுகள் இருக்கின்றன. இந்த செலவினங்கள்—அதிலும் முக்கியமாக ஆரம்பக்கல்வியைப் பொருத்தவரையில்—நான்காவது திட்டக் காலத்தில் அதிகரிக்கும். ஆகவே இந்த அதிக செலவை சமாளிக்க திட்ட வேலைகளுக்கான செலவினங்களை குறைக்காமலேயே, பஞ்சாயத்துக்களும் பஞ்சாயத்து யூனியன் மன்றங்களும், தங்களின் வருவாய்களை

ஒன்று திரட்டி, சேமித்துவைத்தல் சாலச் சிறந்த தாகும். இந்த நிர்வாகங்கள், தங்களின் வருவாய் களை, கல்லூரிகள் ஆரம்பிப்பதற்கே ஒன்று திரட்ட அனுமதிக்கப்பட்டால், ஒரு கல்லூரியை துவக்க அன்பளிப்பு என்ற நோக்கமே இல்லாது போய்விடுகிறது. ஆகவே, தங்களின் நேரடி நிர்வாகத்தில் இல்லாத கல்லூரிகளை துவக்கவும் நிர்வகிக்கவும், பஞ்சாயத்துக்கள் மற்றும் பஞ்சாயத்து யூனியன் மன்றங்கள், தங்களின் நிதியிலிருந்து நன்கொடை அளிப்பதைப்பொருத்து அரசாங்கம் அனுமதிக்காத இப்போதைய நிலையை நீடிப்பது என்று அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

3. இவ்வுத்தரவை எல்லா பஞ்சாயத்துக்கள் மற்றும் பஞ்சாயத்து யூனியன் மன்றங்களின், கவனத்திற்கு கொண்டுவரும்படி, மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

(கிராம நல தல நிர்வாகத்துறையின் 1965-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 29-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை எண். 988.)

——o——

## மீனளத்துறை ஆய்வாளர், துணை ஆய்வாளர் ஆகியோர் பஞ்சாயத்து யூனியன் கூட்டங்களில் பங்கு பெறுவது பற்றி விளக்கம்.

## Panchayat Union Councils—Attendance of meetings by Inspector and Sub—Inspector of Fisheries—Instructions—Issued.

### (Memorandum No. 63152 C2/R.D. and L.A., dated 28th April 1965.)

பஞ்சாயத்துக்களில் மீன் வளர்ப்புத் திட்டம் நிறைவேற்றப்படுவதாலும், பஞ்சாயத்து குளங் களில் சேகரிக்கப் படுவதற்காக மீன்குஞ்சுகள், வினியோகிக்கப் படுவதாலும் மீனளத்துறை ஆய்வாளர் (Inspector of Fisheries) அல்லது துணை ஆய்வாளர் பஞ்சாயத்து யூனியன் மன்றங்களில் அங்கத்தினராக நியமிக்கப்பட வேண்டும் அல்லது சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும் என்று மீனளத்துறை இயக்குநர் கருத்துத் தெரிவித் துள்ளார்.

2. பஞ்சாயத்து யூனியன் மன்றங்களில் மீனளத்துறை ஆய்வாளர் மற்றும்/அல்லது துணை-ஆய்வாளர் அங்கத்தினராக நியமிக்கப்பட அல்லது சேர்த்துக்கொள்ளப்பட, 1958-ம் ஆண்டு தமிழ் நாடு பஞ்சாயத்துச் சட்டத்தில் வகை ஏதும் இல்லை. ஆகவே மீனளம் பற்றிய பொருள் பஞ்சாயத்து யூனியன் கூட்டங்களில் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும்போது மீன் வளர்ப்புத் திட்டத்தின் முன்னேற்றம் பற்றி விளக்கம் அளிக்க, மீனளத்துறை ஆய்வாளர் மற்றும்/அல்லது துணை ஆய்வாளர், பஞ்சாயத்து யூனியன் கூட்டங்களில் பங்குபெற அழைக்கப் படலாம் என்று அரசாங்கம் கருதுகிறது. ஆகவே மீனளத்துறை பற்றிய பொருள்பஞ்சாயத்து யூனியன் கூட்டத்தில் விவாதத்திற்காக எடுத்துக் கொள்ளப்படும் போது, மீனளத்துறை ஆய்வாளர் மற்றும்/அல்லது துணை ஆய்வாளர், அதில் கலந்துகொள்ள அழைக்கப்பட வேண்டும் என்று பஞ்சாயத்து யூனியன் ஆணையாளர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

(கிராம நல-தல நிர்வாகத்துறையின் 1965-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 28-ம் தேதியிட்ட அரசாங்க அறிக்கை எண் 63152.)

——0——

## மனித ஆற்றலை பயன்படுத்தும் திட்டம்

## Rural Works Programme—Utilisation of Man power—Implementation of—Completion of spill-over works during 1965-66—Instructions issued.

### (G. O. Ms. No. 853, R.D. and L.A., dated 9th April 1965.)

மனித ஆற்றலை பயன்படுத்தும் கிராம வேலைகள் திட்டம் இவ்வாணையின் இணைப்பு I-ல் கொடுக்கப் பட்டுள்ளவாறு தமிழ்நாட்டில் 55 வட்டாரங்களில் செயல்பட்டு வருகிறது. இந்த வட்டாரங்களில் இத் திட்டத்தை, 1965–66-ம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தி வரலாம் என்று இந்திய அரசாங்கத்தின் சமூதாய அபிவிருத்தி, கூட்டுறவு அமைச்சகம் கருத்துத் தெரிவித் துள்ளது.

2. அதன் பேரில், மனித ஆற்றலை பயன்படுத்தும் இந்த வேலைத் திட்டம் இவ்வாணையின் இணைப்பு I-ல் உள்ள 55 வட்டாரங்களிலும் தொடர்ந்து 1965–66-ம் ஆண்டிலும் நடைபெற வேண்டு மென்று அரசாங்கம் ஆணை பிறப்பிக்கிறது. ஆனால் 1964–65-ம் ஆண்டில் எஞ்சியிருந்த வேலைகள் மட்டுமே 1965–66-ம் ஆண்டில் நிறைவேற்றப்பட எடுத்துக்கொள்ளப்படவேண்டும். இத் திட்டம், கிராம நல தல நிர்வாகத்துறையின் 1964-ம்

ஆண்டு ஏப்ரல் மாதம் 29-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 1012, 1964-ம் ஆண்டு ஜூலை மாதம் 24-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 1529, 1964-ம் ஆண்டு ஜூலை மாதம் 30-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 1570, 1964-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 22-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 2712 ஆகியவற்றில் வெளியிடப் பட்டுள்ள உத்தரவுகளுக்கு ஏற்ப நிறைவேற்றப் படவேண்டும்.

## இணைப்பு 1

கிராம வேலைகள் திட்டம் நிறைவேற்றப்படுவதற்காக தேர்ந்தெடுக்கப்பட்ட வட்டாரங்களின் பெயர்கள்.

| மாவட்டத்தின் பெயர். (1) | வட்டாரத்தின் பெயர். (2) |
|---|---|
| வட ஆர்க்காடு .. | 1. செங்கம் |
| | 2. புதுப்பாளையம் |
| | 3. தண்டராம்பட்டு |
| | 4. தெள்ளார் |
| தென் ஆர்க்காடு .. | 5. கள்ளக்குறிச்சி |
| | 6. சங்கராபுரம் |
| | 7. ரிஷிவந்தியம் |
| | 8. தியாகதுருகம் |
| | 9. சின்னசேலம் |
| செங்கல்பட்டு .. | 10. பூண்டி |
| | 11. ஊத்துக்கோட்டை |
| | 12. லத்தூர் |
| கோயம்புத்தூர் .. | 13. பவானிசாகர் |
| | 14. தாளவாடி |
| | 15. நம்பியூர் |
| | 16. அந்தியூர் |
| | 17. குண்டடம் |
| | 18. மூலனூர் |
| | 19. அன்னூர் |
| | 20. அவினாசி |
| கன்னியாகுமரி .. | 21. முன்சிறை |
| மதுரை .. | 22. தொப்பம்பட்டி |
| | 23. ஒட்டன்சத்திரம் |
| | 24. பழனி |
| | 25. வேடசந்தூர் |
| நீலகிரி .. | 26. உதகமண்டலம் |
| இராமநாதபுரம் .. | 27. மண்டபம் |
| | 28. இராமநாதபுரம் |
| | 29. திருப்புல்லாணி |
| | 30. முதுகுளத்தூர் |
| | 31. கடலாடி |
| | 32. கமுதி |
| | 33. பரமக்குடி |
| சேலம் .. | 34. மொரப்பூர் |
| | 35. பாப்பிரெட்டிபட்டி |
| | 36. அரூர் |
| | 37. பெண்ணாகரம் |
| | 38. வேப்பனபள்ளி |
| | 39. பர்கூர் |
| | 40. ஊத்தங்கரை |
| | 41. இடைப்பாடி |
| | 42. கொங்கணாபுரம் |
| | 43. தர்மபுரி |
| தஞ்சாவூர் .. | 44. அறந்தாங்கி |
| | 45. ஆவுடையார்கோவில் |
| | 46. பட்டுக்கோட்டை |
| திருச்சிராப்பள்ளி .. | 47. அன்னவாசல் |
| | 48. விராலிமலை |
| | 49. குன்னாண்டார் கோவில் |
| | 50. அரிமலம் |
| திருநெல்வேலி .. | 51. ஒட்டப்பிடாரம் |
| | 52. விலாத்திக்குளம் |
| | 53. புதூர் |
| | 54. கயத்தாறு |
| | 55. குருவிகுளம் |

(கிராம நல-தல நிர்வாகத்துறையின் 1965-ம் ஆண்டு எப்ரல் மாதம் 9-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 853-ன் சுருக்கம்.)

---

### கிராமசேவக்குகள் நிர்வகிக்க வேண்டிய பதிவேடுகளும் அறிக்கைகளும்.

## Community Development Programme—Registers and Periodicals—Maintenance by Gramasevaks— Orders issued.

### (G. O. Ms. No. 632, R. D. and L. A., dated 15th March 1965)

"கிராம சேவக்குகள் தஸ்தாவேஜுகள் நியதி" (Manual of Village Level Workers Records) யில் சேர்க்கப்பட்டுள்ள பல்வேறு தஸ்தாவேஜுகளுக்கு இந்திய அரசாங்கம் மாற்றம் தெரிவிக்கும் வரையில், இந்த நியதியில் "கிராம தஸ்தாவேஜுகள்" என்ற தலைப்பின் கீழ் கொடுக்கப்பட்டுள்ள பதினொரு கையெழுத்துப் பதிவேடுகளையும் (VI to VII) கிராம சேவக்குகள் நிர்வகிக்க வேண்டும் என்று பொதுத்

துறையின் 1958-ம் ஆண்டு ஜூன் மாதம் 2-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை 1618-ல் அரசாங்கம் உத்தரவு பிறப்பித்துள்ளது. இந்திய அரசாங்கம். அனுபவத்தின் பயனாக, கிராம பதிவேடு வடிவத்தை (Draft Village Register) மாற்றியமைத்து, மாநிலத்தின் விசேஷ தேவைகளுக்கேற்ப திருத்த வேண்டியிருப்பின் அவ்வாறு செய்து, அதை ஏற்றுக் கொள்ளும்படி கருத்துத் தெரிவித்துள்ளது. இப்பிரச்னையை கிராம, வட்டார, தாலூகா கணக்குகள் அபிவிருத்தி கமிட்டி ஆராய்ந்தது. அது, அதனுடைய அறிக்கையின் 6-வது அத்தியாத்தில், கிராம சேவக்குகள் நிர்வகிக்க வேண்டிய பதிவேடுகளைப்பற்றி சிபாரிசு செய்துள்ளது. இக்கமிட்டியின் சிபாரிசுகளை சென்னை புள்ளி விவர இயக்குநருடனும், சென்னை விவசாய இயக்குநருடனும், கிராம நல தல நிர்வாகத் துறையின் 1964-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 21-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை 949-ல் உள்ள உத்தரவுகளுக்கு இணங்க, அரசாங்கம் பரிசீலனை செய்தது. அதன்படி, கீழ்க்காணும் பத்தி 2-ல் கொடுக்கப்பட்டுள்ள பதிவேடுகளையும், அறிக்கைகளையும் (Periodicals) கிராம சேவக்குகள் நிர்வகிக்க வேண்டுமென்று அரசாங்கம் ஆணை பிறப்பிறக்கிறது:

(2) (a) ''கிராமசேவக்குகள் தஸ்தாவேஜுகள் நியதி''யில் ''கிராம தஸ்தாவேஜுகள்'' என்ற தலைப்பின் கீழ் உள்ள V-1 முதல் V-11 வரையிலான கையெழுத்துப்பதிவேடுகளை, இம்மாநிலத்திலுள்ள கிராம சேவக்குகள் பொதுத் (ஆர்.டி.பி) துறையின் 1958-ம் ஆண்டு ஜூன் மாதம் 2-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை 1618-ன்படி நிர்வகித்து வருகிறார்கள். கிராமக் கணக்குகள் அபிவிருத்திக் கமிட்டி அதனுடைய சிபாரிசில் V-1, V-2, V-6, V-8 மற்றும் V-11 பதிவேடுகள் தொடர்ந்து இருக்க வேண்டும் என்றும், V-3, V-4, V-5 மற்றும் V-7 பதிவேடுகள் ஒன்று சேர்க்கப்படவேண்டும் என்றும், V-10 பதிவேடு ஒழிக்கப்பட வேண்டும் என்றும் கூறியுள்ளது. இந்த சிபாரிசுகளை அரசாங்கம் ஏற்றுக் கொண்டு, கிராம சேவக்குகள் இனிமேல் கீழ்க்கண்ட பதிவேடுகளை மட்டும் தான் நிர்வகிக்கவேண்டும் என்று, ஆணை பிறப்பிக்கிறது:

(i) பொதுத்தகவல் பதிவேடு (Register of General Information)

(ii) மக்கள் தொகைப் பதிவேடு (Population Register)

(iii) விவசாய அடிப்படை புள்ளி விவரப்பதிவேடு (Register of Basic Agricultural Statistics)

(iv) கால்நடைப் பதிவேடு (Register of Livestock)

(v) பஞ்சாயத்து அபிவிருத்தித்திட்டம் நிறைவேற்றப்படும் பதிவேடு (Panchayat Development Plan Implementation Register)

(vi) இருப்புப் பதிவேடு (Stock Register)

(vii) கிராமசேவக்குகளின் நாட்குறிப்பு 2 பாகங்கள் (The Diary of the Gramasevak in two parts)

குறிப்பு: இந்தப் பதிவேடுகளைப் பற்றிய படிவங்கள் இவ்வாணையின் பிற்சேர்க்கையில் (I முதல் VII வரை) கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றை இவ்வாணையில் காண்க.

(b) ''கிராம சேவக்குகள் தஸ்தாவேஜுகள் நியதி''யில் கண்டுள்ள உத்தரவுகள்படி, கிராம சேவக்குகள் நான்கு 'F' பதிவேடுகளை, நிர்வகிக்க வேண்டும். இப்பதிவேடுகளை, நிர்வகிப்பது சிறிது காலம் தள்ளி வைக்கப்பட வேண்டுமென்று ஏற்கனவேயே உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. கிராமக்கணக்குகள் அபிவிருத்திக் கமிட்டியும் இப்பதிவேடுகளை ஒழித்து விடவேண்டுமென்று சிபாரிசு செய்துள்ளது. இந்த சிபாரிசை, ஏற்றுக் கொண்டு இந்த 'F' பதிவேடுகளை இனிமேல் கிராம சேவக்குகள் நிர்வகிக்க வேண்டியதில்லை என்று அரசாங்கம் ஆணை பிறப்பிக்கிறது.

(c) பல திறப்பட்ட அபிவிருத்தித்திட்டங்களை ஒட்டி, கீழ்க்கண்ட பதிவேடுகளை கிராம சேவக்குகள் நிர்வகிக்க வேண்டும் என்று வரையறுக்கப்பட்டிருந்தது;—

(1) மாதமிருமுறை அபிவிருத்தி அறிக்கை—உதகமண்டலம் அமைந்தபடிவம் [Fortnightly Progress Report-Ooty Proforma]

(2) கலவை உர உற்பத்திப்பதிவேடு (Compost Production Register)

(3) உர பரீக்ஷார்த்த பதிவேடு (Fertiliser Demonstration Register)

(4) மற்ற பரீட்க்ஷார்த்த பதிவேடுகள் (Other Demonstration Register)

(5) கிராம விதைப்பண்ணைப் பதிவேடு (Village Seed Farm Register)

(6) வேலைகள் பதிவேடு (Works Register)

(7) பசுந்தழை உரப்பதிவேடு (Green Manure Register)

மேற்கண்ட பதிவேடுகள் (2 முதல் 7 வரை) ஒழிக்கப்பட்டு, அவற்றிற்குப் பதிலாக, வேறு புதிய பதிவேடுகள் நிர்வகிக்கப்படலாம் என்று கிராமக் கணக்குகள் அபிவிருத்திக்கமிட்டி சிபாரிசு செய்துள்ளது. இந்த சிபாரிசையும் அரசாங்கம் பரிசீலனை செய்தது. அபிவிருத்தியைப் பொறுத்து

15 நாட்கள் அறிக்கை மிகக் குறுகியதாதலால், மேற்கண்ட முதல் பதிவேடு, அதாவது உதக மண்டலம் அமைந்த படிவத்திலுள்ள மாதமிரு முறை அறிக்கை, நிறுத்தப்பட வேண்டுமென்று அரசாங்கம் ஆணை பிறப்பிக்கிறது. அதற்குப் பதிலாக அந்த அறிக்கையை, திருத்தப்பட்டுள்ள படிவத்தில், மாதம் ஒருமுறை, கிராம சேவக்குகள் அனுப்பவேண்டும். இந்த அறிக்கை பஞ்சாயத்தின் மாதாந்திர கூட்டத்தில் வைக்கப்படவேண்டும். அடுத்து, கிராம நல தல நிர்வாகத்துறையின் 1961-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 8-ம் தேதி யிட்ட அரசாங்க ஆணை 2460-ல் உள்ள ஆணைகளுக்கு ஏற்ப, மேற்கூறப்பட்டுள்ள பதிவேடுகள் அதாவது 2 முதல் 7 வரை-நிர்வகிக்கப்படுவது உடனடியாக நிறுத்தப்படவேண்டும். அந்த இடங்களில், மேற்கூறிய ஆணையின்படி அபிவிருத்தியைக் கவனித்து வர, இவ்வாணையின் பிற்சேர்க்கையில் (பிற்சேர்க்கை 8 முதல் 16 வரை) கொடுக்கப்பட்டுள்ள படிவத்தில் பதிவேடுகள் நிர்வகிக்கப்படவேண்டும்.

(3) கிராமசேவக்குகள் தங்கள் வரம்பிலுள்ள பஞ்சாயத்துக்களின் அபிவிருத்தி வேலைகளைப் பொறுத்து, ஒரு சுருக்கமான-ஆனால் எல்லாவற்றையும் தழுவி-அறிக்கையை இரண்டு மாதத்திற்கு ஒரு முறை தயாரித்து, அந்த அறிக்கையை சம்பந்தப்பட்ட வளர்ச்சி அதிகாரி மூலமாக, பஞ்சாயத்து யூனியனுக்கு அனுப்பி வைக்கவேண்டுமென்றும், பஞ்சாயத்து யூனியன்களும், மாவட்ட அபிவிருத்தி மன்றமும் அதை புனராலோசனை செய்தபின், மாவட்ட அபிவிருத்தி மன்றத்தின் தலைவர், அரசாங்கத்திற்கு ஒரு அறிக்கையை சமர்ப்பிக்க வேண்டும் என்றும் கிராமக்கணக்குகள் அபிவிருத்திக்கமிட்டி, அதனுடைய அறிக்கையின் 10-வது அத்தியாயத்தில் சிபாரிசு செய்துள்ளது. ஆனால் கிராம நல தல நிர்வாகத்துறையின் 1964-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 21-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை 949-ல் கிராம சேவக்குகள் விவசாய சம்பந்தப்பட்ட வேலைகளுக்கு மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டுமென்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. ஆகவே இந்த சிபாரிசை ஏற்றுக்கொள்வதானது, கிராமசேவக்குகளின் வேலைகளை அதிகரிப்பதோடு மட்டுமல்லாமல், அவர்கள் மேல் அதிகப் பொறுப்புகள் ஏற்படுத்தப்பட்டு, அவற்றை அவர்கள் சரிவர நிறைவேற்ற முடியாமல் போய்விடுமாதலாலும், அபிவிருத்தித் திட்டங்களைப்பற்றி பல நிலைகளிலும் புனராலோசனை செய்ய பல வழிகள் ஏற்கனவேயே இருந்து வருவதாலும், கமிட்டியின் மேற்கண்ட சிபாரிசை ஏற்றுக்கொள்ளத் தேவையில்லை என்று அரசாங்கம் கருதுகிறது.

(குறிப்பு: இவ்வாணை 16 பிற்சேர்க்கைகளை கொண்டுள்ளது. இவ்வாணை சம்பந்தப்பட்ட எல்லோருக்கும் அனுப்பப்பட்டுள்ளது. அதில் இப் பிற்சேர்க்கைகளைக் காண்க)

(கிராம நல தல நிர்வாகத்துறையின் 1965-ம் ஆண்டு மார்ச்சு மாதம் 15-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை 632.ன் சுருக்கம்.)

---

## கிராம, வட்டார, தாலுகா கணக்குகள் அபிவிருத்திக் குழுவின் சிபாரிசுகள் ஏற்றுக்கொள்ளப்பட்டு, உத்தரவுகள் பிறப்பிக்கப்படுகின்றன.

## Community Development Programme—Periodicals—Prescription of—Recommendation of the Committee for the improvement of Village, Block and Taluk Accounts—Accepted—Instructions—Reiterated.

**(Memorandum No. 185093/P5/, R. D. and L. A., dated 16th March 1965.)**

மேற்கண்ட கமிட்டி சிபாரிசு செய்து, தொடர்ந்து இருக்கவேண்டிய அல்லது புதிதாக நிர்ணயிக்கப்பட்டுள்ள பல்வேறு பதிவேடுகளையும், அறிக்கைகளையும், அவற்றை தயார் செய்வதில் சம்பந்தப்பட்டுள்ள அதிகாரிகள் அவற்றை சோதித்து, புனராலோசனை செய்து, தேவையான பொறுப்பேற்று, கவனம் செலுத்தினலொழிய அப்பதிவேடுகளும் அறிக்கைகளும் எவ்வித பயனையும் தரப்போவதில்லை என்று கிராம, வட்டார, தாலுகா கணக்குகள் அபிவிருத்திக் கமிட்டி அதன் அறிக்கையின் பத்தி 11-5-ல் எடுத்துக்காட்டியுள்ளது. பல்வேறு நிலைகளிலும் உள்ள அதிகாரிகள், தற்போது, பதிவேடுகளையும், அறிக்கைகளையும் வரையறுக்கிறார்கள். ஆனால் அவை நிர்வகிக்கப்பட்டு வருவது எதிர்பார்க்கக்கூடிய முறையில் இல்லை; காரணம் இந்த ஏடுகளை அதிகாரிகள் ஒழுங்காகவும், தொடர்ந்தும் சோதனைகள் செய்வதில்லை. ஆகவே, மிகமிக அவசியம் என்று தோன்றினல் தவிர, எந்த ஒரு பதிவேடும், அறிக்கையும் ஏற்படுத்தப்படக்கூடாது என்றும், அப்படி ஏற்படுத்தப்பட்டபின் அவை, நிர்ணயிக்கப்பட்ட முறையில் தயாரிக்கப்பட்டு, நிர்வகிக்கப்பட்டு வருவதை கவனிப்பது மிக அவசியம் என்றும், இக்கமிட்டி வலியுறுத்தியுள்ளது.

2. அரசாங்கம் இந்த சிபாரிசை ஏற்றுக்கொள்கிறது. அதற்கேற்ப, கிராம நல தல நிர்வாகத் துறையின் 1960-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 4-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை 74-ல் உள்ள, பத்தி 4-க்கு, எல்லா மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் துறைத்தலைவர்களின் கவனம் கொண்டுவரப்படுகிறது. அதில், பல்வேறு அபிவிருத்தித் திட்டத்தைப்பற்றி வட்டார அளவில் கூடுதலான எந்த ஒரு அறிக்கையையும் நிர்ணயிக்குமுன், புள்ளி விவரத்துறை இயக்குநரை முதலில் கலந்தாலோசித்தபின், அரசாங்கத்தின், கிராம நலதல நிர்வாகத்துறையின் அனுமதியை முன்கூட்டியே பெறவேண்டும் என்று உத்தரவிடப்பட்டுள்ளது. ஆகவே இனி வட்டார அளவில், சமர்ப்பிப்பதற்காக எந்த ஒரு அறிக்கையை நிர்ணயிக்கும் போதும், இந்த விளக்கங்களை கவனத்தில் கொள்ளுமாறு தெரிவிக்கப்படுகிறது.

(கிராம நல-தல நிர்வாகத் துறையின் 1965-ம் ஆண்டு மார்ச் மாதம் 16-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 185093.)

---

## கிராமத்தொழில்கள், கூட்டுறவு, பஞ்சாயத்து ஆகியவற்றில் கிராம சேவக்குகள் பெறும் பயிற்சி நிறுத்தப்படுகிறது.

## Training—Inservice training to Gramasevaks in Village Industries, Co-operation and Panchayat—Discontinuance—Orders—Issued.

### (G. O. Ms. No. 672, R.D. and L.A., dated 19th March 1965.)

கிராம சேவக்குகளுக்கு அளிக்கப்பட்டுவரும் நினைவூட்டும் பயிற்சியில், (Refresher Course), விவசாயத்திற்கு அதிக முக்கியத்துவம் அளிக்கவேண்டுமென்றும், ஒவ்வொரு பயிற்சியிலும் குறைந்தது 200 வகுப்புகளாவது விவசாயத்திற்கு ஒதுக்கப்படவேண்டும் என்றும், எஞ்சியுள்ள 87 வகுப்புகளை, பிற பாடங்களுக்கு பயன்படுத்திக்கொள்ளலாம் என்றும், 1964-ம் ஆண்டு நவம்பர் மாதம் கிருஷ்ணகிரியில் கூடிய கிராமிய விஸ்தரிப்பு பயிற்சி நிலைய முதல்வர்களின் மகாநாட்டில் கருத்துத் தெரிக்கப்பட்டுள்ளது.

கிராமத் தொழில்கள், கூட்டுறவு, பஞ்சாயத்து ஆகியவற்றில் கிராம சேவக்குகளுக்கு அளிக்கப்படும் ''பணியாற்றும் காலப்பயிற்சி''யை (Inservice training) நிறுத்திவிடலாம் என்று உதவி அபிவிருத்திக்கமிஷனர் (பயிற்சி) கூறியுள்ளார்.

உதவி அபிவிருத்திக் கமிஷனரின் (பயிற்சி) கருத்தை அரசாங்கம் ஏற்றுக்கொள்கிறது. அதற்கிணங்க, கிராமசேவக்குகளுக்கு அளிக்கப்பட்டுவரும் நினைவூட்டும் பயிற்சியில் விவசாயத்திற்கு அதிக முக்கியத்துவம் அளித்து, பயிற்சிக் காலத்தில் குறைந்தது 200 வகுப்புகளை விவசாயத்திற்கு ஒதுக்கவேண்டும் என்றும், எஞ்சியுள்ள 87 வகுப்புகளை மற்ற பாடங்களுக்கு பயன்படுத்திக்கொள்ளவேண்டும் என்றும், அரசாங்கம் ஆணை பிறப்பிக்கிறது.

மேலும் கூட்டுறவு, பஞ்சாயத்து ஆகியவற்றில் கிராம சேவக்குகளுக்கு அளிக்கப்பட்டு வரும் ''பணியாற்றும் காலப்பயிற்சி''யும், கிராமத் தொழில்களில் அளிக்கப்பட்டு வரும் ''நினைவூட்டும் பயிற்சி''யும் நிறுத்தப்படவேண்டும் என்று அரசாங்கம் ஆணைப்பிறப்பிக்கிறது.

(கிராம நல-தல நிர்வாகத்துறையின் 1965-ம் ஆண்டு மார்ச் மாதம் 19ம்-தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 672.)

---

## பஞ்சாயத்தில் வானொலிப் பெட்டியும், பஞ்சாயத்து யூனியனில் ஒலிபெருக்கி சாதனங்களும் அமைப்பது பற்றிய உத்தரவு.

## Panchayat Radio Maintenance Organisation—Installation of radio receivers in the Panchayats and Public Address system in Panchayat Unions—Approval of new models of radio receivers and public address equipment—Orders—Issued.

### (G. O. Ms. No. 971, R. D. and L. A., dated 28th April 1965.)

கிராம நல-தல நிர்வாகத் துறையின் 1964-ம் ஆண்டு ஜூன் மாதம் 29-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 1263-ல் சில ஒலிபெருக்கிச் சாதனங்களின் ரகங்கள், விதங்கள் ஆகியவைப் பற்றியும், பஞ்சாயத்து யூனியன்கள், 'ஆம்பிளிபயர்' (Amplifier) மற்றும் 'மைக்' (Microphone) சாதனம் உள்பட இரண்டு ஒலிபெருக்கிக் கருவிகள் வாங்கிக்கொள்ள அனுமதி அளித்தும், அரசாங்கம் ஆணைப் பிறப்பித்தது. மேலும் பஞ்சாயத்துக்களில் அமைப்பதற்கு ஏற்றவாறு சில புதிய

வானொலிப் பெட்டிகளைப்பற்றி, கிராம நல-தல நிர்வாகத் துறையின் 1964-ம் ஆண்டு ஜூலை மாதம் 28-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை 1555-ல் (இவ்வாணையின் தமிழாக்கம் 1964-ம் ஆண்டு டிசம்பர் மாத 'கிராம நலம்' இதழ், பாகம் II, பக்கம் (vii)-ல் பிரசுரிக்கப்பட்டுள்ளது) அரசாங்கம் ஆணைப் பிறப்பித்தது. அடுத்து, குக்கிராமங்களைக் கொண்ட பஞ்சாயத்துக்களில் வானொலிப் பெட்டிகளை அதிகப்படியாக அமைத்துக்கொள்வதைப் பொருத்து, மேற்கண்ட துறையின் 1965-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 26-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 480-ல் (இவ்வாணையின் தமிழாக்கத்தை சென்ற இதழ் பாகம் II, பக்கம் (ii)-ல் காணலாம்) அரசாங்கம் ஆணைப் பிறப்பித்தது. புதுவிதமான வானொலிப் பெட்டிகள், ஒலிபெருக்கிக் கருவிகள் ஆகியவற்றைப் பொருத்து, அங்கீகாரம் அளிக்க, அரசாங்கத்தால் ஏற்படுத்தப்பட்ட குழு, தலைமை வானொலி அதிகாரி மூலமாக ஒரு அறிக்கையை, அரசாங்கத்திடம் சமர்ப்பித்துள்ளது. அந்த அறிக்கையில், ஏற்கெனவேயே இக்கமிட்டியால் அங்கீகாரம் செய்யப்பட்டுள்ள வானொலிப் பெட்டிகள், ஒலிபெருக்கிச் சாதனங்கள் ஆகியவற்றின் தற்போதைய நிலைமையையும் இப்போது புதிதாக கிடைக்கக்கூடிய புதுவித வானொலிப் பெட்டி, ஒலிபெருக்கிக் கருவிகள் பற்றியும் மற்றும் ஏற்கெனவேயே அரசாங்கத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட சில ரகங்களின் விலைகளில் ஏற்பட்டுள்ள மாறுதல் பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது. இக்குழு கீழ்க்கண்ட சிபாரிசுகளை செய்துள்ளது ;—

(i) ஏற்கெனவேயே ஏற்றுக்கொள்ளப்பட்டு, இவ்வாணையின் இணைப்பு I-ல் இப்போது கொடுக்கப்பட்டுள்ள வானொலிப் பெட்டி ரகங்கள், இப்போது கிடைக்காததால், அவை அங்கீகரிக்கப்பட்ட பட்டியலிலிருந்து நீக்கப்படலாம்.

(ii) இவ்வாணையின் இணைப்பு II-ல் கொடுக்கப்பட்டுள்ள வானொலிப் பெட்டிகளின் ரகங்கள், பஞ்சாயத்துக்களில் அமைப்பதற்கு ஏற்றவை என்று தெரிவதால், அவற்றை வாங்கி பஞ்சாயத்துக்களில் அமைக்க அரசாங்கம் அனுமதிக்கலாம்.

(iii) கிராம நல தல நிர்வாகத்துறையின் 1964-ம் ஆண்டு ஜூலை மாதம் 28—ம் தேதியிட்ட அரசாங்க ஆணை 1555-ல் அனுமதிக்கப்பட்ட 'மர்பி' (Murphy) வானொலிப் பெட்டியின் (Model TAO 774 for 230 Volt Operation) விலை ரூ. 568·33-லிருந்து ரூ. 515-க்கு (ரூபாய் ஐந்நூற்றுப் பதினைந்து மட்டும்) குறைக்கப்படலாம். இந்த விலை எக்ஸைஸ் வரி (Excise duty) விற்பனை மற்றும் இதர வரிகளையும் சேர்த்தாகும்.

(iv) கிராம நலதல நிர்வாகத்துறையின் 1964-ம் ஆண்டு ஜூன் மாதம் 29-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 1263-ல் அனுமதிக்கப்பட்ட ஒருபெருக்கிச் சாதன ரகங்களுடன், இவ்வாணையின் இணைப்பு III-ல் கொடுக்கப்பட்டுள்ள ஒலிபெருக்கி சாதனங்களையும் பஞ்சாயத்து யூனியன்கள் வாங்கிக் கொள்ள அனுமதியளிக்கலாம்.

(v) கிராம நல தல நிர்வாகத் துறையின் 1964-ம் ஆண்டு ஜூன் மாதம் 29-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 1263-ல் அங்கீகரிக்கப்பட்ட அஹூஜா ஒலிபெருக்கிக் கருவி (Ahuja Loudspeaker Unit UHC 15 with Re-entrant horn) அந்த ஆணையிலிருந்து நீக்கப்படலாம்.

2. அரசாங்கம் இந்த விஷயத்தை பரிசீலனைசெய்த பிறகு, மேற்கண்ட பத்தி 1-ல் கண்டுள்ளஇக்குழுவின் எல்லா சிபாரிசுகளையும் அரசாங்கம் ஏற்றுக்கொள்கிறது. அதன்படி, இவ்வாணையின் இணைப்பு II, III ஆகியவற்றில் குறிப்பிட்டுள்ள வானொலிப் பெட்டிகள், கருவிகள் ஆகியவை இப்போது அனுமதிக்கப்பட்டுள்ள வானொலிப் பெட்டிகள் மற்றும் ஒலிபெருக்கிக் கருவிகளுக்கான பட்டியலுடன் சேர்த்துக்கொள்ளவேண்டும் என்று அரசாங்கம் ஆணைப் பிறப்பிக்கிறது. மேலும் இவ்வாணையின் இணைப்பு I-ல் கண்டுள்ள வானொலிப் பெட்டிகளும், மேற்கண்ட பத்தி (V)-ல் கண்டுள்ள கருவிகளும் அனுமதிக்கப்பட்ட பட்டியலிலிருந்து நீக்கப்பட வேண்டும் என்றும் 'மர்பி' வானொலிப் பெட்டியின் (Model TAO 774 for 230 Volts Operation) விலை ரூ. 515-க்கு (ரூபாய் ஐநூற்று பதினைந்து மட்டும்) குறைக்கப்பட வேண்டும், (இந்த விலை எக்ஸைஸ் வரி விற்பனை மற்றும் இதர வரிகளையும் சேர்த்து) என்றும் அரசாங்கம் மேலும் ஆணைப் பிறப்பிக்கிறது.

குறிப்பு.—இவ்வாணையில் சொல்லப்பட்டுள்ள இணைப்புகள் I, II, III ஆகியவை இங்கு பிரசுரிக்கப்படவில்லை. இவ்வாணை, சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் நீங்கலாக, எல்லா மாவட்ட ஆட்சித் தலைவர்கள், வருவாய்க் கோட்ட அதிகாரிகள், பஞ்சாயத்து யூனியன் மன்றத் தலைவர்கள் மூலமாக எல்லா பஞ்சாயத்து யூனியன் ஆணையாளர்கள் மற்றும் சம்பந்தப்பட்டவர்கள் ஆகியோருக்கு அனுப்பப்பட்டுள்ளது. அதில் மேற்கண்ட இணைப்புகளை காண்க.

(கிராம நல—தல நிர்வாகத் துறையின் 1965-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 28-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 971 ன் சுருக்கம்).

## பஞ்சாயத்து, பஞ்சாயத்து யூனியனின் மீனள உரிமைகள்.

## Fisheries—Fishery rights of Panchayats and Panchayat Unions—Assignment of fishery rental revenue to Panchayats and Panchayat Unions—Further Orders—Issued.

### (G. O. Ms. No. 1014, R.D. and L.A., dated 4th May 1965)

கிராம தல நல நிர்வாகத்துறையின் 1961-ம் ஆண்டு மே மாதம் 16-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 1370-ல், மீனளத்தைப் பொறுத்து, மாறுபாடுகள் மீண்டும் செய்யப்பட்டு கீழ்க்கண்டவாறு உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டன :—

I. பொதுப்பணித்துறையினரால் நிர்வகிக்கப்படும் நீர்ப்பாசன ஆதாரங்களில் (Sources)—

(A) மாநில ரீதியான ஆதாரங்கள், அல்லது

(B) மீன்களை சேகரிக்கவும், அவற்றை அபிவிருத்தி செய்யவும், மாநில ரீதியற்ற ஆதாரங்களாக கொள்ளப்பட்டவை;

II. பஞ்சாயத்து யூனியன்களிடம் ஒப்படைக்காதவரை, வருவாய்த்துறையினரால் நிர்வகிக்கப்பட்ட நீர்ப்பாசன ஆதாரங்கள்;

III. 1958-ம் ஆண்டு தமிழ்நாடு பஞ்சாயத்துச் சட்டத்தின் 85(1)-வது பிரிவின் கீழ், பஞ்சாயத்து யூனியன்களிடம் ஒப்படைக்கப்பட்டு, அவற்றால் நிர்வகிக்கப்படும் நீர்ப்பாசன ஆதாரங்கள்,

IV. 1958-ம் ஆண்டு தமிழ்நாடு பஞ்சாயத்துச் சட்டத்தின் பிரிவு 85 (1)-ன்கீழ், பஞ்சாயத்து யூனியன்களிடம் ஒப்படைக்கப்பட்டு, ஆனால் அவை பஞ்சாயத்துக்களாலேயே (பஞ்சாயத்து யூனியன்களின் சார்பாக) நடைமுறையில் நிர்வகிக்கப்பட்டு வரும் நீர்ப்பாசன ஆதாரங்கள்;

V. நீர்ப்பாசன ஆதாரங்களைத் தவிர்த்து, மற்ற எல்லா ஆதாரங்களில்—

(A) பஞ்சாயத்துக்களிடம் ஒப்படைக்கப்பட்டவை, மற்றும்

(B) பஞ்சாயத்துக்களிடம் ஒப்படைக்கப்படாதவை;

2. கிராம தல நல நிர்வாகத்துறையின் 1961-ம் ஆண்டு மே மாதம் 16-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை 1370-ன்படி, மேற்கண்ட இனங்கள் III, IV, V (A) ஆகியவற்றின்கீழ், மீனள ஏலங்கள் விடும் அதிகாரங்கள், பஞ்சாயத்து யூனியன்கள் அல்லது பஞ்சாயத்துக்களிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தாலும், உணவு-விவசாயத்துறையின் 1961-ம் ஆண்டு ஜனவரி மாதம் 31-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 304-ல் உத்தரவிட்டுள்ளபடி, 1964-ம் ஆண்டு வரை மீனள கூட்டுறவுச் சங்கங்களுக்கு, சலுகைகள் அளிக்கும் கோரிக்கை, பஞ்சாயத்துக்களால் நிறைவேற்றப்படவேண்டும் என்று அரசாங்கம் விரும்பியது.

(3) இது சம்பந்தமாக, 1964-ம் ஆண்டுக்குப் பிறகு கடைப்பிடிக்கவேண்டிய நடைமுறைபற்றி, அரசாங்கம் பரிசீலனை செய்தது. அதன் பேரில், மேற்கண்ட பத்தி 2-ல் கூறப்பட்டுள்ள மூன்று வகைகளில், மீனள ஏலம் விடும் உரிமை, பஞ்சாயத்துக்கள், அல்லது பஞ்சாயத்து யூனியன்களிடம் மாற்றப்பட்டுள்ளதால், மேற்கண்ட இனங்கள் III, IV மற்றும் V (A) ஆகியவற்றின்கீழ், மீனள ஏலம் விடும் விஷயத்தில், பஞ்சாயத்துக்கள், மற்றும் பஞ்சாயத்து யூனியன்களுக்கு முழு விருப்பம் அளித்து, அரசாங்கம் ஆணை பிறப்பிக்கிறது;

(4) மற்ற ஆதாரங்களில், மீனள குத்தகையைப் பொருத்து, கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறைகளை, அரசாங்கத்தின் உணவு-விவசாயத்துறை அதன் 1965-ம் ஆண்டு மார்ச் மாதம் 6-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 865-ல் பிறப்பித்துள்ளது;

(கிராம நல தல நிர்வாகத்துறையின் 4—5—1965 தேதியிட்ட அரசாங்க ஆணை 1014-ன் சுருக்கம்.)

---

## குறிப்பிட்ட காரியத்திற்காக ஒதுக்கப்பட்ட பஞ்சாயத்து யூனியன் மன்ற நிதிகளை தற்காலிகமாக பிற காரியங்களுக்குப் பயன்படுத்துதல்.

## Accounts—Earmarked funds by the Panchayat Union Councils—Temporary diversion subject to certain restrictions—Orders issued.

### (G.O. Ms. No. 990, R.D. and L.A., dated 30th April 1965.)

குறிப்பிட்ட காரியத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ள, மாவட்ட கழகங்கள் மற்றும் நகராண்மை மன்றங்களின் (District Boards and Municipal Councils) நிதிகளை பிற காரியங்களுக்குப் பயன்படுத்திக்கொள்வது தடுக்கப்பட்டு, 1924-ம் ஆண்டு உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டன. ஆனால் பஞ்சாயத்து யூனியன் மன்றங்கள் அமைக்கப்பட்ட பிறகு, மேற்கண்ட உத்தரவுகள் இம்மன்றங்களுக்கும் பொருந்துமா என்பது, அரசாங்கத்தால் பரிசீலனை செய்யப்பட்டது. பஞ்சாயத்து யூனியன்

மன்றங்களின் அலுவல்கள், முந்தைய மாவட்டக் கழகங்கள் மற்றும் நகராண்மை மன்றங்களின் அலுவல்களிலிருந்து மாறுபட்டவை. பஞ்சாயத்து யூனியன் மன்றங்களிடம், தேசிய அபிவிருத்திப் பணித் திட்டங்கள், சமுதாய அபிவிருத்தித் திட்டம் மற்றும் இதர திட்டங்கள் நிறைவேற்றப் படுவதற்காக ஒப்படைக்கப்பட்டுள்ளன. இவற்றை நிறைவேற்ற சில மானியங்கள் முன்னதாகவே அளிக்கப்பட்டாலும், அநேக அபிவிருத்தி மானியங்கள், திட்டம் நிறைவேற்றப்பட்ட பிறகே அளிக்கப்படுகின்றன. ஆகவே இந்த இரண்டாவது இனத்தைப் பொறுத்த வரையில், பஞ்சாயத்து யூனியன் மன்றங்கள் தங்களின் நிதியிலிருந்து முதலில் செலவு செய்துவிட்டு, பிறகு அரசாங்கத் திடமிருந்து நிதி கோரவேண்டும். அதனுல் ஏற்கனவே உள்ள உத்தரவுகள் எல்லாவற்றையும் பஞ்சாயத்து யூனியன் மன்றங்களுக்குப் பொருந்துமாறு செய்ய முடியாது. சில காரியங்களில் திட்டங்களைக் குறிப்பிட்ட காலங்களில் நிறைவேற்றி முடிக்க, சில பணிகளுக்காக ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்து, மற்றவற்றிற்கு சிறு மாறுதல்கள் செய்ய வேண்டியுள்ளன. ஆகவே குறிப்பிட்ட காரியத்திற்காக ஒதுக்கப்பட்ட நிதிகளை பஞ்சாயத்து யூனியன் மன்றங்கள் தேவையானபோது தற்காலிகமாக பிற காரியங்களுக்கு பயன்படுத்திக் கொள்ளலாம். ஆனுல் அவை கீழ்க்கண்ட வரம்புகளுக்கு உட்பட்டிருக்க வேண்டும் :—

*(1)* 1958-ம் ஆண்டு தமிழ்நாடு பஞ்சாயத்துச் சட்டத்தின் விதிகள் அல்லது விளக்கங்கள் அல்லது அரசாங்கத்தின் குறிப்பிட்ட உத்தரவுகள் இவற்றில் நிதி மாற்றங்கள் செய்துகொள்ள அனுமதிக்கப்பட்டிருந்தாலன்றி, மற்ற எந்த ஒரு காரியத்திற்கும், ஆரம்பக் கல்வி நிதிக் கணக்கிலிருந்து, மற்ற எந்தக் காரியத்திற்காகவும், நிதி மாற்றங்களை பஞ்சாயத்து யூனியன் மன்றங்கள் செய்யக்கூடாது.

*(2)* பஞ்சாயத்து யூனியன் மன்றங்கள், பொது நிதிக் கணக்கிலிருந்து மற்ற நிதிக்கு முன்பணத்தை தற்காலிகமாக அனுமதிக்கலாம். ஆனுல் அந்த முன்பணம் நிதியாண்டு முடிவிற்குள் திருப்பி அளிக்கப்பட்டுவிட வேண்டும். மற்ற நிதியிலிருந்து, அதாவது, கல்வி மற்றும் உற்பத்தி நிதிகள் அல்லது அந்த நிதிகளுக்குள்ளேயே ஒரு திட்டத்திலிருந்து மற்ருெரு திட்டத்திற்கும் முன்பணம் அனுமதிக்கப்படக்கூடாது.

(கிராம நல-தல நிர்வாகத் துறையின் 1965-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 30-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 990-ன் சுருக்கம்.)

---

சிறிய நீர்ப்பாசனங்கள், குடிமராமத்து வேலைகள் பற்றி துணை விதிகள் பிரசுரிக்கப்படுகின்றன

## Rules—Madras Panchayat Act, 1958—Minor Irrigation Sources—Transfer to Panchayat Union for Maintenance—Execution of Kudimaramat Works by Panchayats—Supplementary rules—Amendment—Draft—published.

### (G.O. Ms. No. 221, R.D. and L.A., dated 30th January 1965.)

இப்பிற்சேர்க்கையில் உள்ள அறிவிப்பு செயிண்ட் ஜார்ஜ் கோட்டை அரசிதழில் பிரசுரமாகும்.

பிற்சேர்க்கை

அறிவிப்பு

1958-ம் ஆண்டு தமிழ்நாடு பஞ்சாயத்துச் சட்டத்தின் (1958-ம் ஆண்டு தமிழ்நாடு சட்டம் 35) 85-வது பிரிவைச் சேர்ந்த (1)-வது உட்பிரிவு, மற்றும் 178-வது பிரிவைச் சேர்ந்த (1) வது உட்பிரிவு ஆகியவற்றில், வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, பஞ்சாயத்து யூனியன் மன்றங்களிடம் நீர்ப்பாசன வேலைகளை மாற்றும் விஷயத்தைப் பொருத்து, 1962-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 5-ம் தேதியிட்ட, செயிண்ட் ஜார்ஜ் கோட்டை அரசிதழின் பாகம் V பக்கங்கள் 1011-1016-ல் (Notification S.R.O. No. A. 1076 of 1962) dated 26th July 1962 at pages 1011–1016 of the Supplement to part V of the Fort St. George Gazette) வெளியிடப்பட்டுள்ள, 1962-ம் ஆண்டு ஜூலை மாதம் 26-ம் தேதியிட்ட கிராம நல—தல நிர்வாகத் துறையின் 1962-ம் ஆண்டு அறிவிப்பு எஸ். ஆர். ஓ. எண். ஏ. 1076-க்குக் கீழ்க்கண்ட திருத்தங்களை செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. ஆகவே மேற்கண்ட சட்டத்தின் 179-வது பிரிவின் உட்பிரிவு (2)-ல் கோரப்பட்டுள்ளவாறு, இந்த திருத்த வரைவு (draft amendment) பொது மக்கள் கவனத்திற்காகப் பிரசுரிக்கப்படுகிறது.

2. இந்த திருத்த வரைவு, செயின்ட் ஜார்ஜ் கோட்டை அரசிதழில் பிரசுரமான தேதியிலிருந்து ஆறு வாரங்களுக்குப் பிறகு, இக்கால வரம்பு முடிவதற்குள், இதைப் பொறுத்து கிடைக்கப் பெற்ற மறுப்புகள், அல்லது கருத்துக்களைக் கவனத்தில் கொண்டு, மீண்டும் இந்தத் திருத்த வரைவு பரிசீலிக்கப்படும்.

*(3)* மறுப்புக்களையும் கருத்துக்களையும் அரசாங்கக் கூட்டுக் காரியதரிசி, கிராம நல-தல நிர்வாகத்துறை, செயின்ட் ஜார்ஜ் கோட்டை, சென்னை-9 என்ற விலாசத்திற்கு அனுப்பவேண்டும்.

திருத்த வரைவு

கூறப்பட்டுள்ள விதியில்,—

(1) விதி 4-ல் உள்ள நான்காவது வாக்கியத்திற்குப் பதில், கீழ்க்கண்ட வாக்கியம் பூர்த்தி செய்யப்படும். அதாவது :

"கோட்டப் பொறியாளரின் (நெடுஞ்சாலை, கிராம வேலைகள்) ; [Divisional Engineer (Highways and Rural Works)] முன் அனுமதியின்றி, நீர்ப்பாசன மதகுகளில் எந்தவித மாற்றங்களும், அல்லது இந்தமாதிரி காரியங்களில் குளம் பண்படுத்தும் திட்டக் குறிப்புகளில் (Tank Restoration Scheme Memoirs) கண்டுள்ள நிலையான அளவுகளில், தலையிடுதலும் அல்லது சிற்றணை (Weirs) அல்லது கலிங்கல் (Calingulas) ஆகியவற்றை உயர்த்துதல், தாழ்த்துதல் அல்லது விரிவு படுத்துதல் அல்லது எந்தவித பெருந் திருத்தங்கள் செய்தலும், அல்லது கால்வாய்களின் அமைப்புகளில் தலையிடுதலும், ஆகிய காரியங்களை, குறிப்பிட்ட அந்தக் குளம் அதே நிலையிலுள்ள தொடர்பான குளங்களிடையே இருந்தால், பஞ்சாயத்து யூனியன் மன்றங்கள் செய்யக்கூடாது. மற்ற எல்லா விஷயங்களிலும், மேற்பார்வை பொறியாளரின் (நெடுஞ்சாலை கிராம வேலைகள்) [Superintending Engineer (Highways and Rural Works] முன் அனுமதியை பெற வேண்டும்."

(2) 6-வது விதியில், முதல் பத்தியின் கீழுள்ள அட்டவணைக்குப் பதிலாக, கீழ்க்கண்ட அட்டவணை பூர்த்தி செய்யப்படும். அதாவது :—

| வரிசை எண். | மதிப்பீட்டின் தன்மையும் எண்ணும். | நிர்வாக அனுமதி. | தொழில் நுட்ப முறையில், யாரால் அனுமதி தரப்படவேண்டும். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1. | ரிப்பேர் செய்வதற்கான மதிப்பீடு (Estimate) அல்லது ரூ. 3,000 வரையிலான சுயமான (Original) வேலைகள். | பஞ்சாயத்து யூனியன் மன்றம். | யூனியன் பொறியாளர். |
| 2. | ரிப்பேர் செய்வதற்கான மதிப்பீடு அல்லது ரூ. 3,000-க்கு அதிகமான ஆனால் ரூ. 10,000-க்கு அதிகமாகாத சுயமான வேலைகள். | பஞ்சாயத்து யூனியன் மன்றம். | உதவிப்பொறியாளர் (நெடுஞ்சாலை, கிராம வேலைகள்) (Assistant Engineer (Highways and Rural Works)] |
| 3. | ரிப்பேர் செய்வதற்கான மதிப்பீடு, அல்லது ரூ. 10,000-க்கு அதிகமாக, ஆனால் ரூ. 25,000-க்கு அதிகமாகாத சுயமான வேலைகள். | பஞ்சாயத்து யூனியன் மன்றம். | கோட்டப் பொறியாளர் (நெடுஞ்சாலை, கிராம வேலைகள்) |
| 4. | ரிப்பேர் செய்வதற்கான மதிப்பீடு அல்லது ரூ. 25,000-க்கு அதிகமாக, ஆனால் ரூ. 1,00,000-க்கு அதிகமாகாத சுயமான வேலைகள். | பஞ்சாயத்து யூனியன் மன்றம். | மேற்பார்வை பொறியாளர் (நெடுஞ்சாலை, கிராம வேலைகள்) |
| 5. | ரிப்பேர் செய்வதற்கான மதிப்பீடு அல்லது ரூ. 1,00,000-க்கு அதிகமாக சுயமான வேலைகள். | பஞ்சாயத்து யூனியன் மன்றம். | தலைமைப் பொறியாளர் (நெடுஞ்சாலை. கிராம வேலைகள்) [Chief Engineer (Highways and Rural Works). |

(கிராம நல-தல நிர்வாகத் துறையின் 1965-ம் ஆண்டு ஜனவரி மாதம் 30-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை எண். 221.)

---

## பஞ்சாயத்து யூனியன்கள் நடத்தும் தொழில் பிரிவுகளுக்கு எளிய வரவு செலவு கணக்கு முறை.

## Village Industries—Industrial units run by the Panchayat Unions—Simple proforma account showing receipts and charges—Prescribed.

### (G. O. Ms. No. 884, R. D. and L. A., dated 15th April 1965)

கிராமத் தொழில்கள் திட்டத்தின்கீழ் பஞ்சாயத்து யூனியன் மன்றங்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள திட்டங்களுக்காக படிவங்களும், பதிவேடுகளும், கிராம நல தல நிர்வாகத்துறையின் 27—2—1964 தேதியிட்ட அரசாங்க அறிக்கை எண் 1685—86-ல் வரையறுக்கப்பட்டுள்ளன.

கிராமக் கலைகள் மற்றும் தொழில் திட்டத்தின் கீழ் (Rural Arts & Industries Programme) துவக்கப் பட்டுள்ள தொழில் பிரிவுகள் சமூக நலத் திட்டத் தின் கீழ் இடம் பெற்று நவீன முறைகளில், முன்னேற்றமான பயிற்சி அளிப்பதற்காகவே அவை நடத்தப்படுகின்றன. இந்த பயிற்சி மற்றும் உற்பத்தி நிலையங்களின் பொருளாதார நிலையை அறிந்துகொள்ள, இந்நிலையங்கள், நேர் முக, மறைமுக செலவினங்களையும் சேர்த்து. அதில் பயிற்சியின் செலவை வரவுக்குமேல் அதிக செலவாக காண்பித்து, வரவு செலவு கணக்கை தயாரித்தால் போதுமானது என்றும், உற்பத்திக் கணக்கு, வியாபாரம், லாப நஷ்ட கணக்குகள், வரவு செலவு பட்டியல் ஆகியவை தேவை யில்லை, என்றும் மாநில கதர் கிராமத் தொழில் கள் போர்டு கருத்துத் தெரிவித்துள்ளது.

(2) மாநில கதர் கிராமத் தொழில்கள் போர் டின் கருத்தை, தல நிதி கணக்கு ஆய்வாளருடன் அரசாங்கம் பரிசீலனை செய்தது. அதன் பேரில் இந்நிறுவனங்கள், இவ்வாணையின் இணைப்பில் கண்டுள்ள அறிக்கையின்படி வரவு செலவு கணக்கை நிர்வகித்து வரவேண்டும் என்று அர சாங்கம் ஆணைப் பிறப்பிக்கிறது.

## இணைப்பு

### கிராமத் தொழில்கள், பயிற்சி மற்றும் உற்பத்தி நிலையங்கள்.

31·3..............உடன் முடிந்த ஆண்டுக்கான வரவு செலவு அறிக்கை.

பஞ்சாயத்து யூனியன் பெயர்..................................

பிரிவின் பெயர்..................................................

| செலவு | | வரவு | |
|---|---|---|---|
| மூலப்பொருள்களின் செலவு | ரூ.பை. | முழுநிலையில் உற்பத்தியான பொருள்களின் விற்பனை. | ரூ.பை, |
| கட்டிட வாடகை | | | |
| அலுவலர்களின் சம்பளமும், படியும், | | பலவகை வரவினங்கள் | |
| கொடுக்கப்பட்ட சம்பளம் சிறுசெலவு | | அதிக செலவினத்தின் வித்தியாசம் | |
| தொடர்ந்து செலவாகாத இனங்களின் செலவு (Non-recurring) | | | |
| இயந்திரம் | | | |
| தளவாடங்கள் | | | |
| கட்டிடம் | | | |
| கருவிகள் | | | |
| தேய்மானம் | | | |
| பலவகை செலவு | | | |
| | —— | | —— |
| | —— | | —— |

கவனிக்கவும்;—(1) மேற்கண்ட அறிக்கையை, நிதியாண்டு. முடிவிலும் தொழில் பிரிவை மூடும் நிலையிலும் தயாரிக்கவேண்டும்.

(2) குறிப்பிட்ட ஆண்டுக்கான செலவினங்களை அந்த ஆண்டிலேயே செய்துவிடவேண்டும் என்பதை கவனிக்கவேண்டும்.

(3) பயிற்சிக்கான செலவே, வரவைவிட கூடுதலான செலவாக இருக்கும்.

(கிராம நல-தல நிர்வாகத் துறையின் 15–4–1965 தேதியிட்ட அரசாங்க ஆணை எண். 884. )

## பஞ்சாயத்து ஆட்சி நிறுவனங்களின் கணக்குகள் தணிக்கை அறிக்கை

பஞ்சாயத்து ஆட்சி நிறுவனங்களை தணிக்கை செய்யும் விஷயமாக ஆராய்வதற்கு இந்திய அரசாங்க, சமுதாய அபிவிருத்தி, கூட்டுறவு அமைச்சகம் 1964 ஜூன் மாதத்தில் ஒரு குழுவை ஏற்படுத்தியது. இதற்குத் தலைவராக இணை உதவி கட்டுப்பாடு, தணிக்கை ஆய்வாளரான (Additional Deputy Comptroller and Auditor General) திரு. ஆர். கே. கன்னு நியமிக்கப்பட்டார். இக்கமிட்டியானது தனது அறிக்கையில் பஞ்சாயத்து யூனியன் அளவில் 40 அல்லது 50 பஞ்சாயத்துக்களுக்கு ஓர் ஆரம்ப தணிக்கையாளர் இருக்கவேண்டும் என்றும் பஞ்சாயத்துக் கணக்குகளின் தணிக்கை தல நிதி கணக்குகள் ஆய்வாளரின் (Examiner of Local Fund Accounts) கீழ் கொண்டுவரப்பட வேண்டும் என்றும் சிபாரிசு செய்துள்ளது. மேலும் இதற்கு மேலாக ஒரு தனிப்பட்ட தணிக்கையும் கணக்குத்துறை ஆய்வாளரால் (Accountant—General) செய்யப்பட வேண்டும் என்றும் கூறியுள்ளது. இதற்கு அரசியல் அமைப்புச் சட்டத்தில் வகை செய்யப்பட வேண்டும் என்பது இக்கமிட்டியின் கருத்தாகும்.

தலநிதி கணக்கு ஆய்வாளர், ஒழுங்கீனமான செலவு செய்தவருக்கு உபரி வரி விதிக்கவும், ரூ. 100 வரை தள்ளுபடி செய்யவும், அதிகாரம் பெற்றிருக்கவேண்டும் என்றும் இக்கமிட்டி சிபாரிசு செய்துள்ளது.

ரூ. 10,000க்கு மேல் வருமானமுள்ள பஞ்சாயத்துக்கள், முழு நேர செயலாளர்களை வைத்திருக்க வேண்டும். மற்ற பஞ்சாயத்துக்கள், ஐந்துக்கு மேற்படாமல் - ஒன்று சேர்ந்து ஒரு காரியதரிசியை நியமித்து, அவர் அப்பஞ்சாயத்துக்களின் கணக்கு நிர்வகித்துக்கொள்ளச் செய்யவேண்டும். இக்காரியத்திற்காக, பஞ்சாயத்துக்களுக்கு உதவித் தொகைகள் அளிக்கப்படலாம்.

கணக்குகளின் ஆண்டு தணிக்கையும், அவற்றின் மேற்பார்வையையும் பொருத்து இக்கமிட்டி வலியுறுத்துகிறது. தணிக்கை முடிவதற்கும் அந்தத் தணிக்கை அறிக்கையைவெளியிடுவதற்கும்இடையேயான கால அளவு இரண்டு மாதங்களுக்கு மேற்படக்கூடாது. தணிக்கைக்காக ஏற்பட்டச் செலவு அந்த நிருவனத்தின் வருமானத்தில் 2 சதவீதத்திற்கு மேல் இருக்கக் கூடாது. ஒரிஸ்ஸாவில் இப்போது ஒரு முக்கோண கமிட்டி ஏற்படுத்தப் பட்டுள்ளது. அதில் கணக்காய்வுத் தலைவர், அபிவிருத்திக் கமிஷனர் மற்றும் தல நிதி கணக்கு ஆய்வாளர் ஆகியோரின் பிரதிநிதிகள் பங்கு பெற்றுள்ளனர். தணிக்கையாளர்களின் மறுப்புகளை புனராலோசனை செய்ய இம்மாதிரியான கமிட்டிகள் ஏற்படுத்தப்பட வேண்டும் என்றும் சிபாரிசு செய்துள்ளது. தணிக்கை மறுப்புகளுக்கு கவனம் செலுத்தாத அதிகாரிகள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். எல்லாப் பஞ்சாயத்துக்களின் நிதிக் கணக்கையும், அத்துடன் தணிக்கை அறிக்கையும் சேர்த்து இரண்டையும் மாநில சட்டசபையில் சமர்ப்பிக்க வேண்டும் என்றும் இக்கமிட்டி கருதுகிறது.

இந்திய பொது நிர்வாகக் கழக மாத வெளியீட்டில் [I.I.P A.] வெளியிடப்பட்ட செய்திக்கடிதத்தின் ஒரு பகுதி.

## முக்கிய அறிவிப்பு

### "கிராம நலம்" சந்தாதாரர்களுக்கு

கீழ்க்கண்டுள்ள சந்தா எண்களுடைய "கிராமநலம்" சந்தாரர்களின் ஆண்டுச் சந்தா, 1965-ம் ஆண்டு ஜூன் மாதத்துடன் முடிவடைகிறது. "கிராம நலம்" இதழ்களைத் தொடர்ந்து பெறுவதற்கு இந்தச் சந்தா எண்களுடைய சந்தாதாரர்கள். தங்களுடைய சந்தா எண்ணைக் குறிப்பிட்டு ஆண்டுச் சந்தா ரூ. 1·50 வீதம், சந்தாத் தொகையை "மானேஜர், 'கிராம நலம்' கிராம நல தல நிர்வாகத்துறை, சென்னை-9" என்ற முகவரிக்கு உடனே மணியார்டர் மூலம் அனுப்ப கோரப்படுகிறார்கள். சந்தா எண் "கிராம நலம்" இதழ்கள் அனுப்பப்படும் மேல் உறையில் பொறிக்கப்பட்டிருக்கிறது.

சந்தா எண்கள்

| | | |
|---|---|---|
| 8123 | 24724 முதல் | 25535 |
| 14675 | 24910 வரை | 25540 |
| 14694 | 24912 முதல் | 25542 |
| 24551 முதல் | 24939 வரை | 25723 |
| 24557 வரை | 25430 | 25731 |
| 24559 முதல் | 25434 | 25819 முதல் |
| 24561 வரை | 25483 முதல் | 25828 வரை |
| 24568 முதல் | 25485 வரை | 25838 |
| 24662 வரை | 25526 | 25845 |
| 24675 முதல் | 25529 | 26407 |
| 24716 வரை | 25534 | |

## இந்த இதழில் . . .

பக்கம்


திருவெறும்பூர் கொதிகலன் தொழிற்சாலை. .. 3

விடுதலைக்கு வித்திட்ட வீரர்கள் மகாகவி பாரதியார். .. 6

அறியாமை இருள்அகல.... .. 9

எல்லையில் நாம்—(ஓரங்க நாடகம்) .. 13

வானமும் அழுததோ (சிறு கதை) .. 25


## அடுத்த இதழில் . . .

முதலீடு இல்லாமல் மாதம் 100 ரூபாய் வருமானம்.

விடுதலைக்கு வித்திட்ட வீரர்கள்—தேசபந்து சித்தரஞ்சன் தாஸ்.

மூன்று பொம்மைகள்—சிறு கதை

தொட்டில் பழக்கம்.


அறுபதாண்டு விவசாய ஆராய்ச்சி.


வெளியிடுபவர் :
திரு என். அனந்தபத்மநாபன், ஐ. ஏ. எஸ்.


ஆசிரியர் :
திரு எஸ். வேங்கடசாமி, எம். ஏ.

Printed by the Director of Stationery and Printing, Madras, on behalf of the Government of Madras. Edited by the Public Relations Officer and published by the Secretary, Rural Development and Local Administration Department, Government of Madras. Wrapper printed at Screen Designs, Madras-2.


66




செங்கற்பட்டு மாவட்டம், லத்தூர் பஞ்சாயத்து யூனியனைச் சேர்ந்த, சீவாடி கிராமம், கல்விப்பணியில் ஒரு முன் மாதிரியாக விளங்குகிறது. ஆசிரியைகளுக் கென தனி விடுதி கட்டப்பட்டிருப்பது ஒரு சிறப்பு அம்சம்.



பஞ்சாயத்து முயற்சியால் பல்வேறு பயிற்சிகளைப் பெறும் நம் கிராமப்புற இளைஞர்கள், எந்த அளவு பலன் அடைகிறார்கள் என்பதற்கு ஒரு உதாரண மாகத் திகழ்கிறார் திரு தங்கராஜ்.


(விளக்கக்கட்டுரை — 11ம் பக்கம்)




'கிராமதான கிராம' மக்கள் வாழ்க்கை நிலை உயர, உதவி, ஊக்குவிப்பு ஏற்பாடுகள் செய் யப்படுகின்றன. கிராமதான கிராமங்களில் ஒன்றான, ஒட்டப்பிடாரத்தில், சிறுவர், சிறுமியர்களும், மாதர் களும், நூற்புப் பயிற்சி பெறு கிறார்கள்.

தமிழ்நாடு அரசாங்கம் 1965
REGD. NO. M. 7277

| 1947-ல் | 1964-ல் |
| --- | --- |
| 15303 | 31000 |
| தொடக்கப் பள்ளிகள் | தொடக்கப் பள்ளிகள் |



## தொடக்கப்பள்ளி



## உயர்நிலைப்பள்ளிகள்

| 1947-ல் | 1964-ல் |
| --- | --- |
| 471 | 2179 |
| உயர்நிலைப் பள்ளிகள் | உயர்நிலைப் பள்ளிகள் |

| 1947-ல் | 1964-ல் |
| --- | --- |
| 24 | 79 |
| கல்லூரிகள் | கல்லூரிகள் |



## கல்லூரிகள்

**கல்விக்காக அரசாங்கச் செலவு**

1947 ல்-ரூ. 3 கோடி

1964-ல்
ரூ. 29·45 கோடி

**மதிய உணவுத் திட்டத்திற்கு பொதுமக்கள் உதவும் தொகை**

ரூ. 120 லட்சம்

